# ஆரம்பக்கல்வி

## ELEMENTARY EDUCATION



ஜூலை — 1963



புதிய — போப்ஆண்டவர்


ஆரம்பக்கல்வி ஆபீஸ்
94-95, புது தெரு
மண்ணடி, சென்னை-1

# திருநெல்வேலி எய்டட் ஆரம்பப்பள்ளி நிர்வாகிகள் சங்கம்



தலைவர்

திரு. பி. எஸ். பொன்னுசாமி



காரியதரிசி

திரு. எம். ஏ. சதான சுந்தரம்




31 JUL 1963
MADRAS

ஆரம்பாசிரியர்கள், ஆரம்பப் பாடசாலை நிர்வாகிகள்
முன்னேற்றத்திற்கு உழைக்கும் இதழ்.

ஆசிரியர் பி. வீரராகவன்

ஆண்டு சந்தா ரூ. 3] [தனி இதழ் 4 அணா

மலர் 25 } ஜூலை 1963 { இதழ் 7

# இதழ்களில் வந்துள்ள இனிய செய்திகள்

அண்மையில் நாளிதழ்களில் ஒரு செய்தி வெளியாகியிருக்கிறது. அந்தச் செய்தி, ஆரம்பக் கல்வித் துறையோடு தொடர்புடைய அனைவருக்கும் மட்டற்ற மகிழ்ச்சியை அளிக்கும் தன்மை உடையதாக இருக்கிறது.

தற்போது தமிழ்நாட்டு ஆரம்பப் பள்ளிக்கூடங்களில் உள்ள மாணவர்—ஆசிரியர் விதாசாரம், பள்ளியில் சேர்க்கப்பட்ட ஒவ்வொரு 40 மாணவருக்கும் ஓர் ஆசிரியர்; வருகை தருகிற ஒவ்வொரு 35 மாணவர்கட்கும் ஓர் ஆசிரியர் என்று இருக்கிறது அல்லவா?

இந்த விதாசாரத்தைக் குறைத்து அமைக்க வேண்டும் என்று தமிழ்நாட்டு ஆட்சியாளர்கள் எண்ணிக்கொண்டிருக்கின்றனர் என்

றும், பெரும்பாலும் 25 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் என்னும் விகிதாசாரம் புதிதாக ஏற்படுத்தப்படலாம் என்றும் நாளிதழ்களில் வெளியாகியுள்ள செய்தி தெரிவிக்கிறது.

இந்த வீதாசாரத்தைப் பற்றிய முழு விவரங்களையும் ஆராய்ந்து அறிக்கை தயாரிக்கும்படித் தமிழ்நாட்டுக் கல்வித் துறை இயக்குநரை அரசாங்கம் கேட்டுக் கொண்டிருக்கிறது என்றும், அன்னாருடைய அறிக்கை கிடைத்ததும் அரசாங்கம் தேவையான உத்திரவைப் பிறப்பிக்கக்கூடும் என்றும் அதே செய்தி தெரிவிக்கிறது.

ஆரம்பப் பள்ளிக்கூட ஆசிரியப் பெருமக்கள் — நிர்வாக நன்மக்கள் — பெற்றோர்கள் — ஆகிய அனைவருடைய உள்ளங்களிலும் இன்ப வெள்ளத்தைப் பாய்ச்சவல்ல தேன் போன்ற செய்தி இது என்பதை யாரும் மறுக்கமுடியாது.

தற்போது நடைமுறையில் உள்ள ஆசிரியர் — மாணவர் வீதாசார உத்தரவின்படி, சராசரி வருகை தருகிற மாணவர்களின் எண்ணிக்கை 35 க்கு மேல் உயர்ந்துவிட்டால்கூட ஓர் ஆசிரியரை நியமிக்க முடியாது. அந்த எண்ணிக்கை 40 ஆகவோ, 45 ஆகவோ, 50 ஆகவோ 55 ஆகவோ, இருந்தால்கூட ஓர் புது ஆசிரியரை நியமிக்க இயலாது. அந்த எண்ணிக்கை 69 ஆக உயர்வடைந்தால்கூட புது ஆசிரியர் வர முடியாது. சராசரி வருகை தரும் மாணவர்கள் 70 பேராக அல்லது அதற்கும் மேலாக இருந்தால்தான், புதிய ஓர் ஆசிரியரை நியமிக்க முடியும்.

வருகை தருகிற மாணவர்களின் எண்ணிக்கை 69 ஆக இருக்கும் வரையில் ஒரே ஆசிரியர்தான் அவர்கள் அனைவரையும் கவனித்தாக வேண்டும். இது மிகவும் விபரீதமான ஒரு நிலை! விபரீதமான நிலைமட்டும்தானா? விசித்திரமும் வேதனையும் கலந்த நிலைகூட! ஆனால் இத்தகைய நிலைமைதான் இப்போது இருந்து வருகிறது.

ஆசிரியர் ஒருவர்! மாணவர்கள் 69 பேர்!! நிலைமை இவ்வாறு இருக்குமானால், இத்தகை நிலைமையில் அளிக்கப்படுகிற கல்வி எவ்வாறு இருக்க முடியும்? குறைந்த தரம் உடையதாகத்தான் இருக்கும். ஐயம் இருக்க முடியுமா அதில்?

ஓர் ஆசிரியர் எவ்வளவுதான் உடல்வன்மையும் உள்ளத்திண்மையும் படைத்தவராக இருந்தாலும், ஆரம்பப் பள்ளிகளிற் பயிலும் சின்னஞ்சிறு பிள்ளைகளில் 69 பேரைத் தக்க முறையில் தயார் செய்வது என்பது ஒரு நாளும் இயலாத செயலே ஆகும்.

ஒரு வகுப்பு 69 மாணவர்களைக் கொண்டதாக இருந்தால், ஆசிரியர் ஒவ்வொரு மாணவர்மீதும் தனித்தனிக் கவனம் செலுத்துவது, நடக்காத காரியம்.

எந்தெந்த மாணவர்கள் எந்தெந்தப் பாடங்களில் மிகுந்த தேர்ச்சி உடையவர்களாக இருக்கின்றனர்—எந்த எந்தப் பாடங்களில் குறைந்த திறமை உடையவர்களாக உள்ளனர் என்பதைக் கண்டறிந்து, தனித் தனிக் குறைகளைத் தீர்ப்பதில் தனித் தனிக் கவனம் செலுத்தினால்தான், கல்வியின் தரம் சிறப்பானதாகவும் செழுமை மிக்கதாகவும் விளங்க முடியும். சில மாணவர்கள், வரலாற்றுப் பாடத்தில் மிகுந்த ஆற்றல் உடையவர்களாக இருந்தாலும் கணக்குப் பாடத்தில் திறமை குறைந்தவர்களாக இருக்கக்கூடும். வேறு சில மாணவர்கள் கணக்குப பாடத்தில் திறமை மிகுந்தவர்களாகவும் வரலாற்றுப் பாடத்தில் ஆற்றல் குறைந்தவர்களாகவும் இருக்கக்கூடும். இவ்வாறு வெவ்வேறு மாணவர்களிடம் பொதிந்திருக்கக்கூடிய வெவ்வேறு வகையான குறைகளையும் நிறைகளையும் கண்டறிவதற்கும், அறிந்தபின், குறைகளை நிறை செய்வதற்கும் நிறைகளை மேலும் வளர்ந்து ஓங்கச் செய்வதற்கும், ஆசிரியருக்குப் போதுமான ஓய்வும் தேவையான சூழ்நிலையும் இருந்தாக வேண்டும். அத்தகைய ஓய்வும் சூழ்நிலையும், தற்போது உள்ள வீதாசாரத்தின்படி ஆசிரியருக்குக் கிடைக்க முடியுமா? முடியாது என்பதை எவரும் அறிவர்.

அது மட்டும் அல்ல. சிற்றூர்ப் பகுதிகளில் பல பள்ளிக்கூடங்களில் மூன்று அல்லது நான்கு வகுப்புகளிலும் சேர்த்து 69 மாணவர்களுக்குமேல் இருக்கமாட்டார்கள். அத்தகைய பள்ளிகளில் ஒரே ஆசிரியர் மூன்று அல்லது நான்கு வகுப்புகளை, ஒரே சமயத்தில் கவனித்துக்கொள்ள வேண்டும். முடியக்கூடிய செயலா இது? ஒரே ஆசிரியர் ஒரே சமயத்தில் மூன்று அல்லது நான்கு வகுப்புகளுக்கு எப்படிப் பாடம் புகட்ட முடியும்? அவர் ஒரு குறிப்பிட்ட சமயத்தில் ஒரு குறிப்பிட்ட வகுப்பைக் கவனிக்கும்போது ஏனைய வகுப்புகளை யார் கவனிப்பது?

இந்த மூன்று அல்லது நான்கு வகுப்புகளும் ஒரே மண்டபத்தில் அல்லது கூடத்தில் இருக்கக்கூடிய முறையில் பெரிய அளவுள்ள மண்டபம் அல்லது கூடம் இருந்தால், இந்த வகுப்புகள் அனைத்தையும் அந்தக் கூடத்திலேயே ஏற்பாடு செய்துவிட்டு, தன் பார்வையை மட்டுமாவது ஆசிரியர், நான்கு வகுப்புகளின்மீதும் மாற்றி மாற்றிச் செலுத்தமுடியும். ஆனால் பல பள்ளிக்கூடங்களில் அத்தகைய பெரிய கூடம் இருப்பதில்லை. சிறு சிறு அறைகளே இருக்கும்.

நான்கு தனித் தனி அறைகளில் நான்கு வகுப்புகள் இருக்குமானால், ஆசிரியர், ஓர் அறையில் உள்ள ஒரு வகுப்பைக் கவனிக்கும்போது பிற அறைகளில் உள்ள பிற வகுப்புகளின் கதி என்ன ஆவது?

இத்தகைய சூழ்நிலையில் அளிக்கப்படும் கல்வி உயர்ந்த தரம் படைத்ததாக இருக்கவேண்டும் என்று நாமோ நம் நாடோ எவ்வளவுதான் ஆசைப்பட்டாலும் அந்த ஆசை நிறைவேறுவதற்கு வழி ஏது?

இந்த உண்மைகளையெல்லாம் எண்ணிப் பார்த்துத்தான் நாம் நம் "ஆரம்பக் கல்வி"யின் வாயிலாக, எண்ணற்ற முறை, ஆசிரியர்–மாணவர் விகிதாசாரத்தைக் குறைத்தாக வேண்டும் என்று வற்புறுத்திக் கூறி வந்திருக்கிறோம்.

இதே காரணங்களை முன்வைத்துத்தான், ஆரம்ப ஆசிரியர்களின் பல மாநாடுகள்–பொதுக்கூட்டங்கள் ஆகியவற்றிலும், ஆரம்பப்பள்ளி நிர்வாகிகளின் மாநாடுகள்–பொதுக்கூட்டங்கள்-நிர்வாகக் குழுக் கூட்டங்களிலும், இந்த விகிதாசாரம் குறைக்கப்பட வேண்டியது இன்றியமையாதது என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இப்போதாவது அரசாங்கத்தார் இந்தத் துறையில் கவனம் செலுத்தத் தொடங்கியிருப்பது பெருமகிழ்ச்சிக்கு உரிய செய்தியாகும். ஆட்சியாளர்கள் தங்களுடைய பரிசீலனையை விரைவில் முடித்துக்கொண்டு, 25 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் என்னும் முறையில் புதிய விகிதாசாரத்தை அமைத்து உத்தரவைப் பிறப்பிக்க வேண்டும் என்று வேண்டிக் கேட்டுக் கொள்கிறோம்.

நாளிதழ்களில் அண்மையில் வெளியாகியுள்ள செய்திக் குறிப்பு, மற்றோர் இனிய செய்தியையும் ஆரம்பக் கல்வி உலகத்திற்கு அளித்திருக்கிறது. ஆரம்பப் பள்ளிக்கூடங்களில் 6, 7, 8, ஆகிய வகுப்புகளில் பயிலும் ஏழைப் பிள்ளைகளிடமிருந்து கட்டணம் வசூலிக்காமல் இருப்பதற்காக, பள்ளி நிர்வாகிகளுக்கு அரசாங்கத்தார் தருகிற நஷ்ட ஈட்டுத் தொகை, தற்போது மிகமிகக் குறைவாக இருக்கிறது அல்லவா? இந்தத் தொகையை அரசினர் விரைவில் கணிசமான அளவுக்கு உயர்த்துவர் என்பதே அந்தச் செய்தி.

தற்போது பின்கண்ட விகிதத்தில் அரசாங்கத்தார் நஷ்ட ஈட்டுத் தொகையை அளித்து வருகின்றனர். 6 வது வகுப்பில் ஒவ்வொரு மாணவருக்கும் 37 காசுகள். 7 வது வகுப்பில் 44 காசுகள். 8 வது வகுப்பில் 50 காசுகள். 6, 7, 8, ஆகிய மூன்றில் எந்த வகுப்பாக இருந்தாலும், ஒவ்வொரு மாணவிக்கும் நஷ்ட ஈடு 12 காசுகள்.

1962 ஜூன் திங்களிலிருந்து இந்த நஷ்ட ஈட்டுத் திட்டம் நடைமுறைக்கு வந்துள்ளது. ஆனால் அதற்கு முன்னர் அரசாங்கத்தார் அளித்துவந்த நஷ்ட ஈடு பின்கண்டபடி இருந்தது. மாணவனாக இருந்தாலும் சரி, மாணவியாக இருந்தாலும் சரி, சென்னை நகரில் 6 வது வகுப்பில் ரூ. 1–12, 7 வது வகுப்பில் ரூ 1-37, 8 வது வகுப்பில் ரூ. 1-50. வெளியூர்களில், 6 வது வகுப்பில் 75 காசுகள். 7வது வகுப்பில் 88 காசுகள். 8 வது வகுப்பில் ரூ. 1.

1962 ஜூன் திங்களுக்கு முன்னர் அளிக்கப்பட்டுவந்த இந்த நஷ்ட ஈட்டுத் தொகைகளைத் தற்போது அளிக்கப்படுகிற நஷ்ட ஈட்டுத் தொகைகளோடு ஒப்பிட்டுப் பார்த்தால், தற்போதைய தொகைகள் மிக மிகக் குறைவு என்பதை எவரும் உணர முடியும்.

எடுத்துக் காட்டாக, 6 வது வகுப்புக்கு முன்னர் ஒவ்வொரு மாணவருக்கும் ரூ. 1–12 என்னும் விகிதத்தில் நஷ்ட ஈட்டை அளித்துவந்த ஆட்சியாளர்கள், தற்போது 37 காசுகள் வீதம்தான் அளிக்கிறார்கள். அதாவது தற்போதைய நஷ்ட ஈடு, முன்னர் அளிக்கப்பட்ட நஷ்ட ஈட்டில் மூன்றில் ஒரு பங்காக இருக்கிறது. நஷ்ட ஈட்டை அரசாங்கத்தார் இவ்வாறு வெட்டிவிட்டதற்கான காரணம் என்ன என்பதை நம்மால் புரிந்துகொள்ளவே முடியவில்லை.

பல்வேறு பொருள்களின் விலைகள், முன்னர் இருந்ததைவிட இப்போது மிகவும் உயர்ந்திருக்கின்றன. பள்ளிக்கூடக் கட்டிட வாடகையும் முன்பு இருந்ததைவிட இப்போது கூடுதலாகியிருக்கிறது. இந்தக் காரணங்களால் பள்ளிக்கூட நிர்வாக செலவு முன்னர் இருந்ததைவிட இப்போது கூடுதலாகியிருக்கிறது என்பது எவரும் ஏற்றுக் கொள்ளத்தக்க உண்மை. நிர்வாகச் செலவு உயர்ந்திருக்கும்போது, கட்டணம் செலுத்தாமல் படிக்கும் பிள்ளைகளுக்காக அரசாங்கம் அளிக்கும் நஷ்ட ஈட்டுத் தொகை உயர்த்தப்படுவது தானே நியாயம்? அதுதானே முறை? அதுதானே இயல்பாக நடக்கவேண்டிய செயல்? நஷ்ட ஈட்டுத் தொகை உயர்த்தப்படாதது மட்டுமல்ல; குறைக்கப்பட்டிருக்கிறது. நியாயம்தானா இச் செயல்? ஏற்கத் தக்கது தானா?

தற்போதைய நஷ்ட ஈட்டு ஏற்பாட்டில் மற்றொரு விசித்திரமான இயல்பும் காணப்படுகிறது. ஆண்பிள்ளைகளுக்கு உயர்ந்த நஷ்ட ஈட்டுத் தொகையும், பெண் பிள்ளைகளுக்குக் குறைந்த நஷ்ட ஈட்டுத் தொகையும் ஏற்படுத்தப் பட்டிருப்பதே, அந்த விசித்திரம்.

ஏன் இந்த வேறுபாடு? ஆண் பிள்ளைகளுக்கும் பெண் பிள்ளைகளுக்கும் கல்வி பயிற்றுவிக்கும் ஆசிரியர் ஒருவரே. புகட்டப்படும் பாடமும் ஒரே தன்மையது. ஒரே ஆசிரியரால், ஒரே வகைப்

பாடங்கள், ஒரே வகுப்பில் புகட்டப்படும் ஆண் பிள்ளைகளுக்கும் பெண் பிள்ளைகளுக்கும் இடையே நஷ்ட ஈட்டுத் தொகையில்மட்டும் வேறுபாடு ஏற்பட வேண்டிய காரணம் என்ன? எத்தனைமுறை சிந்தித்துப் பார்த்தாலும் இந்தக் காரணத்தைத்தான் நம்மால் புரிந்து கொள்ள முடியவில்லை. ஆண்பிள்ளைகள் உயர்வானவர்கள் — பெண் பிள்ளைகள் தாழ்ந்தவர்கள் என்பது அரசாங்கக் கல்வித் துறையின் கருத்தாக இருந்தாலொழிய இத்தகைய வேறுபாட்டை ஏற்படுத்திய தற்குக் காரணம் எதுவும் இருக்கமுடியாது.

இவ்வளவு விபரீதமும் விசித்திரமும் நிறைந்த நஷ்ட ஈட்டு ஏற்பாட்டை நீக்கிவிட்டு, பொருத்தமான அளவுள்ள நியாயமான ஓர் ஏற்பாட்டை விரைவில் ஆட்சியாளர்கள் ஏற்படுத்த இருக்கிறார்கள் என்பதை அறியும்போது நம் இதயம் இன்புறுவது இயல்பே அல்லவா?

6, 7, 8 ஆகிய வகுப்புக்களின் ஏழை மாணவர்களுக்காகத் தரப்படும் நஷ்ட ஈட்டுத் தொகையை உயர்த்த எண்ணியுள்ள ஆட்சியாளர்கள், முதல் ஐந்து வகுப்புகளை மட்டுமே கொண்டுள்ள தனியார் ஆரம்பப் பள்ளி நிர்வாகிகளுக்குத் தருகிற நிர்வாக உதவித் தொகையையும் தக்க முறையில் உயர்த்தவேண்டியது, இன்றியமையாதது ஆகும்.

ஆசிரியர்களின் அடிப்படை ஊதியத்தில் 15 சத விகிதத்திற்கு மேற்படாத ஒரு தொகையை மட்டுமே, கல்வி அதிகாரிகள், தனியார் ஆரம்பப் பள்ளிகளுக்கான நிர்வாக உதவித் தொகையாக அளிக்கலாம் என்பது தற்போதைய அரசாங்க உத்தரவு ஆகும்.

பொதுவாகக் கல்வி அதிகாரிகள் 15 சத வீத உதவித் தொகையை முழுமையாகத் தருவதில்லை. ஏதேதோ காரணங்களைக் காட்டி, 5 சத வீதம்— 7 சத வீதம்— 8 சத வீதம்— 10 சத வீதம் என்பன போன்ற குறைந்த அளவு தொகைகளையே தருகிறார்கள். 15 சதவீத உதவித் தொகையை, கல்வி அதிகாரிகள் முழுவதாகஅளித்தால் கூட, அந்தத் தொகை பள்ளிக்கூடக் கட்டிட வாடகையைச் செலுத்துவதற்குக்கூடப் போதாது. அப்படியென்றால்,பள்ளிக்கூடத்தை நடத்துவதற்குத் தேவைப்படுகிற ஏனைய செலவுகளுக்கு உரிய தொகையைப் பள்ளிக்கூட நிர்வாகிகள் எங்கிருந்து பெறமுடியும்?

5 வது வகுப்புவரை எந்த மாணவரிடமிருந்தும் கட்டணம் வசூலித்தல் கூடாது என்று உத்தரவு பிறப்பித்து விட்ட அரசாங்கம் பள்ளிக்கூடத்தை நடத்துவதற்குத் தேவையான முழுத்தொகையையும் உதவித் தொகையாக அளிப்பதுதானே முறை? இப்போது

அரசாங்கத்தார் அளிக்கிற உதவித் தொகை, பள்ளிக்கூடத்தை நடத்துவதற்குத் தேவையான நியாயமான செலவில் நான்கில் ஒரு பங்காக—அல்லது, மூன்றில் ஒரு பங்காக மட்டுமே இருக்கிறது. எனவேதான் இந்தத் தொகையை உயர்த்தித் தரவேண்டுமென்று தனியார் பள்ளி நிர்வாகிகள் அரசாங்கத்தை மீண்டும் மீண்டும் கேட்டபடி இருக்கிறார்கள்.

தனியார் ஆரம்பப் பள்ளிகளுக்கு அளிக்கப்படுகிற நிர்வாக உதவித் தொகை, குறைந்தது ஆசிரியர்களின் ஊதியத்தில் 20 சத வீதமாக இருக்கவேண்டும் என்றும், இந்தத் தொகை எத்தகைய வெட்டும் இன்றி, முழுவதாக எல்லாப் பள்ளிகளுக்கும் தரப்பட வேண்டும் என்றும், இந்த சத வீதத்தை வெட்டிக் குறைக்கும் அதிகாரம் கல்வி அதிகாரிகளுக்கு இருத்தலாகாது என்றும் தனியார் நிர்வாகிகள் கேட்டு வருகின்றனர்.

இந்த வேண்டுகோள், மிக மிக நியாயமானது; மிக மிகக் குறைந்த அளவினது. இந்த வேண்டுகோளையும் அரசாங்கத்தார் அன்பு கூர்ந்து நிறைவேற்ற வேண்டியது அவர்களுடைய தனிப் பெருங் கடமையாகும்.

இந்த வேண்டுகோளை நிறைவேற்றிய பிறகுகூட, தனியார் பள்ளிகளின் வாயிலாக ஒவ்வொரு மாணவரின் கல்விக்காகவும் அரசாங்கம் செய்யும் செலவு, அரசாங்கப் பள்ளியின் வாயிலாக அல்லது நகராட்சிப் பள்ளியின் வாயிலாக அல்லது ஊராட்சிப் பள்ளியின் வாயிலாக அரசாங்கம் செய்யும் செலவைவிடக் குறைவாகவே இருக்கும் என்பதில் துளியும் ஐயமில்லை. அதே சமயத்தில், அந்தப் பள்ளிக்கூடங்கள் வாயிலாக அளிக்கப்படும் கல்வியின் தரத்தைவிடத் தனியார் பள்ளிகளின் வாயிலாக அளிக்கப்படும் கல்வியின் தரம் மிக உயர்ந்ததாக இருக்கிறது என்பதிலும் ஐயம் இருக்கமுடியாது.

ஆம்! தனியார் பள்ளிகளின் மூலமாக, அரசாங்கத்தார், குறைந்த செலவில், உயர்ந்த தரம் படைத்த கல்வியை, நாட்டுக்கு அளிக்கமுடிகிறது. இத்தகைய நிலையில் தனியார் பள்ளிகளுக்கு மேலும் மேலும் கூடுதலாகப் பண உதவியும் ஊக்கமும் உற்சாகமும் அளிக்க வேண்டியதுதானே அரசாங்கத்தின் கடமை ?

கல்வியின் தரம் உயர வேண்டுமானால் — தமிழ்த் திருநாட்டின் எதிர்காலம் ஒளி மிகுந்ததாக இருக்க வேண்டுமானால், அன்பு கூர்ந்து அரசாங்கத்தார் இந்தக் கடமையை நிறைவேற்றித் தான் ஆகவேண்டும்.

—x—

# மதுரை மாநகர் — கலைக் கருவூலம்

(எம். பரசிவன், எம். ஏ., எல். எல். பி.,
இறைபணியாளர், ஸ்ரீ மீனாக்ஷிசுந்தரேசுவரர் திருக்கோவில்)

மதுரை மாநகர் பாண்டிய நாட்டின் தலைநகர். பண்டு முதல் வரலாற்றுப் புகழ் பெற்றது. வரலாற்றால் வரையறுக்க இயலா வளர் புகழ்மிக்க மதுரை. தலைச்சங்க காலத்திலிருந்து இடைச் சங்க காலம் வரை மதுரை அமைந்த இடம் வெவ் வேறாக இருப்பினும், தலைநகர் பெயரளவில் மாறவே இல்லை என்பதை அறியலாம்.

கலிகெழுகூடல், விழவு மலி மூதூர் மதுரை என்றெல்லாம் கழகம் ஆய்ந்த இலக்கியங்கள் கழறுகின்றன. கூடல் என்ற பெயரும் சங்க இலக்கியங்களில் மதுரைக்கு வழங்கி வந்திருக்கிறது. இதுவே பின்புநான்மாடக் கூடலாக வளர்ந்திருக்க வேண்டும். கடம்ப வனம், ஆலவாய் முதலிய பெயர்கள் பிற்காலத்தில் மதுரைக்கு ஏற்பட்ட பெயர்களாகும்.

## கூடல், மதுரை: பெயர்க் காரணம்

பன்னாடுகளிலுமிருந்து புலவர்கள் மதுரையில் கூடித்தமிழை ஆராய்வதன் காரணமாகக் கூடல் என்ற பெயர் மதுரைக்கு வந்திருக்கலாம். கூடல் என்ற பெயர் பாண்டி நாட்டிற்கே உரிய தனிச் சிறப்புடையதாகும். மதுரை என்ற பெயரும் பழமையாக வழங்கிவருவது. மருத மரங்கள் அடியில் தோன்றிய மருதை மதுரை என மருவிற்று என்பர். அது தவறு. மதுரம் என்றால் இனிமை. தமிழினிமை தங்கிச் சிறந்த மாநகர் என்பதாகும். மதுரை முல்லை நிலம் என்பதை ஆராய்ச்சியாளர் அறிவாராக.

பண்டு பாண்டியரின் தலைநகராக மிளிர்ந்த மதுரை இன்று காட்சி தராவிடினும் சிறந்த தலைநகராகக் காட்சி தருகிறது. பரிபாடல் மதுரையை ஓவியமாக வரைந்து காட்டுகிறது.

"மாயோன் கொப்பூழ்மலர்ந்த
தாமரைப்
பூவோடு புரையும் சீரூர்"

என்று மதுரையின் அமைப்பைத் தாமரை மலருக்கு ஒப்பிடுகிறது. தாமரையின் அடுக்கடுக்கான இதழ்களே தெருக்கள். நடுவே இருக்கும் தாமரைப்பீடம் அண்ணல் கோயில். தாதுக்கள் தண்டமிழ்க் குடிகள்; வண்டுகள் பரிசிலர்; மதுரை மாநகரில் வாழும் மக்கள் கோழி கூவித் துயிலெழாதவர்; அந்தணர்களின் வேத முழக்கங்களைக் கேட்டு மக்கள் உறக்கத்தினின்று விழிப்படைவர்– என்று மதுரையின் புகழையும், அமைப்புத்திறனையும் சிறப்

யையும் பரிபாடல் பாடிக் காட்டுகின்றது.

மதுரைக் காஞ்சியும், சிலப்பதிகாரமும் மதுரையின் அமைப்பைப்பலபடப்புகழ்கின்றன. ஒரு பெருமாநகர்க்குரிய நகர்ப்பண்பு மதுரையினிடத்துப் பொலிந்திருததலை நூல்கள் மூலமாக உணரக் கிடக்கின்றது. ஆறு கிடந்தன்ன—தெருக்களும், வாவியும் இளமரக்காவும் செய்குன்றும் பொதுளிப் பூவிரி சோலையுடன் பொலிந்திருத்தலை நூல்கள் நமக்கு அறிமுகப்படுத்துகின்றன.

## பட்டதுறை விட்டபடலம்

சங்க காலத்திற்குப் பின் மதுரை மாநகரின் மேன்மை மேலும் வளர்ந்தே உள்ளது. இடைக்காலத்தே களப்பிரர் ஆட்சியால் மதுரை ஒளி மழுங்கி இருந்தாலும், கடுங்கோன் போன்ற பாண்டிய மன்னர்களால் மீண்டும் மதுரை புத்தொளி வீசியே வந்திருக்கிறது. சமண சமயத்தால் மதுரை இருள்பட்டது. குலச்சிறையார், மங்கையர்க்கரசியார் முதலிய சைவப் பேரருளாளர்களால் சம்பந்தர் மதுரைக்கழைக்கப்பட்டு சைவ சமயம் மெய்ச் சமயமே என்று நிலைநாட்டப்பட்டது. மதுரை மாநகர் கருத்து வேறுபாடு முதலியவற்றிற்கு உரிய மதிப்பு வழங்கியதனால்தான் உயர்ந்த நெறி சைவநெறி என்பது அறிவு ஆராய்ச்சியால் தெளிவு பெறலாயிற்று.

தேவார ஆசிரியர்களால் மதுரை திருவாலவாய் என்றே வழங்கப்பெறுகின்றது. ஆலவாய் என்பதற்குத் திருவிளையாடற் புராணம் ஒரு கதையையே காட்டுகின்றது. திருவாலவாய் என்பது இறைவன் எழுந்தருளியுள்ள கோயிலை மட்டும் குறிக்கும் சொல்லாகும். மதுரை என்பது கோயிலுக்குப் புறத்தே இருக்கின்ற புறநகர்க்குரிய பெயராகும். இதற்கு எடுத்துக் காட்டாகப்

“பருமதில் மதுரை மன்னவை
யெதிரே”

‘பதிகம தெழுதிலையவை யெதிரே’ என்ற திருஞான சம்பந்தர் வாக்கால் மதுரை திருவாலவாய் என்ற சொல்லாட்சியின் நுட்பத்தை நாம் ஓரளவு உணரலாம்.

## நக்கீரர் பிரிவாற்றுமை

மதுரை மாநகர் தமிழால் சிறப்புப்பெற்றது. நக்கீரர் ஒரு கால் மதுரையை விட்டுப் பிரிய நேரும்பொழுது என்றினி மதுரை காண்பேன்; என்றினிச் சவுந்தரேசன் திருவடிப்பாதம் காண்பேன்; என்றினிப் புலவர் கூட்டமுது உண்பேன் என்று வருந்தியதாக ஒரு வரலாறு உரைக்கின்றது. இறைவனார் இறையனாராகப் பொருள் கண்டது மதுரையில்தான். குன்றெரித்த விரிசடைக் கடவுளும், நத்தத்தனாரும், பரணரும், கபிலரும், மாமூலரும், திருவள்ளுவ

ரும், ஔவையாரும் சங்கப் புலவராய் வீற்றிருந்து செந்தமிழ் ஆராய்ந்ததாக இறையனாரகப் பொருள் கூறும். மதுரை மீனாட்சி அம்மை அப்பனோடு ஆட்சி புரிந்து இன்புறுவதும் மதுரையில்தான். "சுந்தரமார் பணிங்கின் பெருமலை யுடனே"

"சுடர் மரகதம் அடுத்தாற் போல் அத்தனொருமை யோடின் புறுகின்ற

ஆலவாயாவது மிதுவே." என வரும் சம்பந்தர் பெருமான் திருவாக்கை நோக்குக.

திருவாலவாயுடைய சொக்கேசப் பெருமான் அழகே வடிவானவர். அவர் உயிர்களின் பொருட்டு நடத்துவித்த அறுபத்து நான்கு திருவிளையாடல்களும், தமிழ் மதுரைக்கு மட்டுமே உரிய தனிச் சிறப்புடையதாகும். சங்கத்தாரோடு தமிழாய்ந்ததும், பாணபத்திரனுக்குத் திருமுகப் பாசுரம் வரைந்து கொடுத்ததும் ஆகிய பெருஞ்சிறப்பு சொக்கேசப் பெருமானுக்கே உரியதாகும். பதினோராந் திருமுறையில் சேர்க்கப்பட்டுள்ள பாடல் திருவாலவாயுடையார் தமிழ்வல்ல பாணன் ஒருவனுக்கு உதவி செய்யச் சேரமானுக்குப் பரிந்துரைக்கின்றார். பரிந்துரைக்கின்ற அப்பாடல் கடிதத் துறை வளர்ச்சிக்கு—எடுத்துக் காட்டாகும். திருவிளையாடற் புராண ஆசிரியர் பரஞ்சோதியார் பாண்டி நன்னாட்டைப் பெண்ணாக உருவகிக்கிறார். அப்பெண்ணுக்கு முகமாக விளங்குவது மதுரையம்பதி என்று மதுரையைப் புகழ்கின்றார்.

## பாண்டியன் குலக்கொழுந்து

மதுரை மீனாட்சித்தாய் மதுரையின் கலைக்கருவூலம். பாண்டியர் குலக்கொழுந்தாய் மலயத்துவச பாண்டியனுக்காகத் திரு அவதாரம்செய்தருளுகின்றார். பாண்டியன் மகளாக வளர்ந்து திக்குவிஜயம் செய்து எத்திக்கும் புகழ் மணக்க விளங்குகின்றாள். சோம சுந்தரப் பெருமானிடம் திக்கு விஜயம் திருமண விஜயமாக நிறைவேறுகின்றது. பாண்டியரின் வழித் துணையாக நின்று மீனாட்சி அம்மை ஆட்சி புரிவதாகவும் மீனாட்சி அம்மைக்கு உறுதுணையாகச் சோமசுந்தரப் பெருமான் விளங்குவதாகவும் மதுரைத் திருவிளையாடல் கூறும் மாண்புறு பகுதிகளாகும்.

பிற்காலப் புலவர்களில் குமரகுருபரர் தலைசிறந்தவர். பதினேழாம் நூற்றாண்டில் பைந்தமிழ் வளர்த்த பரமாசாரியார் அவர். திருமலை மன்னரால் சிறப்புவிக்கப்பட்டபோது மீனாட்சி அம்மையே ஒரு பிள்ளைக் தமிழை மிகவும் பாராட்டி, மீண்டும் அதனைப் பாடச் சொல்லி, தன் முத்துமாலையைக் குமரகுருபரனுக்கு வழங்கியதாக வரலாறு உண்டு. மீனாட்சியம்மையையே அவர் கருவூலமாகக் காண்கின்றார்.

"கருவூலத்துப் பழம் பாடல் கலைமாச்செல்வர் தேடி வைத்த கடவுள் மணியே"

என்ற பிள்ளைத் தமிழ் வரிகள் நம் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் தன்மையனவாகும்.

"தொடுக்குங் கடவுட் பழம் பாடல் தொடையின் பயனே நறைபழுத்த துறைத்தீந்

தமிழின் ஒழுகு நறுஞ் சுவையே" எனக் குமரகுருபரர் அம்மையை அழைக்கின்றார். இப்பாடலை மீனாட்சி அம்மையே பாராட்டியதாகக் கூறுவர். ஸ்ரீவில்லிபுத்தூரில்தோன்றி தருமபுர மடாலய முதல் பீடாதிபதியாக விளங்கிய குருஞான சம்பந்தர் சொக்கநாதப் பெருமானின் பேரருளுக்கு இலக்கானவர் மதுரைப் பொற்றாமரையில் மூழ்கியபொழுது சிவலிங்கம் கைவரப்பெற்றதாகவும், பின்பு தான் தருமையை இருப்பிடமாகக் கொண்டார் என்பதையும் அவர் வரலாறு உணர்த்தும். சொக்கநாத வெண்பா இவர் இயற்றியதாகும்.

"உனக்குப் பணி செய்ய உன்றனை எந்நாளும்
நினைக்கவரம் எனக்கு நீதா—மனக் கவலை
நீக்கின்ற தென் மதுரை நின்மலனே எவ்வுலகம்
ஆக்கின்ற சொக்கநாதா"

எனச் சொக்கநாத வெண்பாவில் குருஞானசம்பந்தர் வேண்டுவதைப் பார்க்கலாம்.

## முடிமன்னர் வகுத்த கால்

முடிமன்னர் காலத்தில் வகுக்கப்பட்ட வழக்கங்களே இன்றும், மதுரைத் திருக்கோயில் நடைமுறையில் இருந்து வருகின்றன. கோயில் என்ற சொல் இறைவன் எழுந்தருளியிருக்கும் இடத்தையும், அரசன் முறை செய்ய எழுந்தருளியிருக்கும் இடத்தையும் குறிக்கும். அதுபோலவே இறைவன் என்ற சொல் ஆண்டவனையுங் குறிக்கும்; அரசனையுங் குறிக்கும். பண்டைத் தமிழ் மன்னர்கள் தமக்கெனக் கட்டிய கோயில்கள் பல்லாயிரம். அவைகள் தகர்ந்தன. இன்று புதைபொருளாகி விட்டன. ஆண்டவனுக்காக அவர்கள் எடுப்பித்த கோயில்கள் பல்லாயிரக்கணக்காக இன்னும் உயிர்வாழ்கின்றன.

தமிழரின் கருவூலமாகக் கோயில்கள் நின்றன. மதுரைக் கோயிலில்பண்டைத்தமிழ்வேந்தரின் பெருமை கல்வெட்டாகவும் செப்புபட்டயங்களாகவும் விளங்கிப் புகழ் மணம் வீசுகின்றது. மதுரைத் திருவிளையாடல்கள் கோயிலில் திருவிழாக் காலங்களில் நாடகமாக நடித்துக் காட்டப்படுகின்றன. மாமதுரைத் திருக்கோயில் ஒரு கலைக் கருவூலம். அதைப் படிப்படியாகப் போற்றி வளர்த்த மன்னர்கள் பலர்; அடியார்கள் பலர்; அன்பர்கள் பலர்.

## மன்னர் விட்டனர்
## மக்கள் தொட்டனர்

காலம் என்னும் வெள்ளத்தில் திருக்கோயிலில் அவ்வப்பொழுது ஏற்படும் அழிவுகள் திருப்பணி செய்யப்பட்டுத் திருத்தம்

செய்யப்பட்டிருக்கின்றன. மன்னர்கள் செய்த பணியை இடைக்காலத்தில் செல்வர்கள் செய்தனர். இன்று மன்னரில்லை குடிமக்களே மன்னர்கள் மக்களே மனமுவந்து திருப்பணிக்குப் பெரிதும் உதவினர்.

மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரருக்கு இன்று குடமுழுக்கு நடைபெறுகின்றது. குடமுழுக்கைக் காணும் கண்கள் தவம் செய்த கண்களாகும். பலருக்கு இவ்வாய்ப்பு நல்ல வாய்ப்பாகும். நம் வாழ்நாளில் நிகழும் இக்குடமுழுக்கு விழாவைக் காண நாம் பெரும் புண்ணியம் செய்தவர்களாவோம். அதுவும் மதுரைக்கிணையாக ஒரு தலமும் இல்லை என்று பரஞ்சோதியார் கூறுவர்.

‘‘திருவாலவாய்க் கிணையாம்
ஒரு தலமுந்தெய்வ மணஞ்
செய்யப் பூத்த
மருவார் பொற்கமல நிகர்
தீர்த்தமு மகதீர்த்தத்தின்
மருங்கின் ஞான
உருவாகியுறை சோமசுந்தரன்
போ லிகபரந்தருவா வீடு
தருவானும் புவனத்தினு
மில்லை யுண்மையிது சாற்றின்
மன்னோ’’—

என்ற பாடலால் மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய பெருமை இனிது விளங்கும்.

இந்நன்னாளில் குடமுழுக்குக் கண்டு இறைவனை நோக்கி ‘‘ஞாலம் நின்புகழே மிக வேண்டும்—தென் ஆலவாயிலுறையும் எம் ஆதியே’’ என்ற வாக்கை ஓதி நன்மை பெருகு அருள் நெறிக்கு நண்ணுவோமாக.

---

## குண்டுக்குத் தப்பியது வண்டுக்குத் தப்பவில்லை

வாலெட்டா, (மால்டா) ஜூன் 18

மால்டா தீவிலுள்ள செயின்ட்பால் தேவாலயம் கடந்த இரண்டாவது உலகயுத்தத்தின்போது நடந்த சரமாரியான குண்டு வீச்சுகளினாலும் பாதிக்கப்படாமல் தப்பியது. ஆனால் இப்போது வண்டுத் தாக்குதலிலிருந்து அதனால் தப்ப முடியவில்லை.

100 ஆண்டுகளாக இருந்துவரும் இந்தத் தேவாலயக் கூரையின் மீதுள்ள மர உத்திரங்களை வண்டுகள் துளைத்துப் பெரிதும் நாசப்படுத்திவிட்டன. எனவே வேறு வழியின்றி இத்தேவாலயத்தின் கூரை இடிக்கப்பட்டு விட்டது. மீண்டும் புதிதாகக் கூரை அமைக்க இப்போது ரூ. 4 லட்சம் நிதி சேகரிக்கப்பட்டு முயற்சி மேற்கொள்ள நன்கொடை அளிக்க வேண்டுகோள் விடப்பட்டுள்ளது.

# கல்வித் துறைச் செய்திகள்

## மலையேறுவதில் தமிழகப் பெண்களின் சாதனை

தமிழகத்தைச் சேர்ந்த மூன்று பெண்கள் மலையேறுவதில் நல்லதொரு சாதனையை ஏற்படுத்தியிருக்கிறார்கள். என். சி. சி. படை அதிகாரி லெப்டினெட் சரஸா பாரதியும், 19 வயதினரான மாணவிகள் குமாரி எஸ். ஆர். கமலாவும், குமாரி மணிமேகலையும் தமிழ் நாட்டிலேயே முதல்வர்களாகச் சிறப்புப் பெற்றிருக்கின்றனர்.

டார்ஜிலிங்கிலுள்ள இமாலய மலையேறும் பயிற்சிக் கழகத்தைச் சேர்ந்த பயிற்சியாளர்கள் சென்ற ஏப்ரலில் 19,000 அடி உயரமுள்ள சிகரத்தை வெற்றி கொள்வதற்காகச் சென்றார்கள். அதில் 9 பேர் 17,000 அடி உயரத்தை அடைந்தார்கள். அவர்களில் இந்த மூன்று பெண்களும் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள்.

"பருவகாலம் மோசமாயிருந்ததால் சிகரத்தை அடைய முடியாது போயிற்று. பாதை கடினமாகத்தான் இருந்தது. என்றாலும் நாங்கள் உற்சாகத்துடனேயே மலையேறினோம்" என்று லெப்டினெட் சரஸா கூறினார்.

நாடு முழுவதிலிருந்தும் 32 பெண்கள் டார்ஜிலிங்கில் மலையேறும் பயிற்சிக் கழகத்திற்கு 7வாரப் பயிற்சிக்காகச் சென்றிருந்தனர்.

அதில் சென்னையிலிருந்து சென்றவர்கள் டாக்டர் சரஸா பாரதி இவர் என். சி. சி. படையில் ஒரு அதிகாரி. சென்னை வைத்தியக் கல்லூரியில் பேராசிரியராகப் பணியாற்றுகிறார்.

குமாரி கமலா பிரஸிடென்ஸி கல்லூரியில் பி.எஸ்ஸி. வகுப்பு மாணவி.

குமாரி மணிமேகலை சென்னை வைத்தியக் கல்லூரியில் மாணவி.

"பயிற்சிக்கு வந்த மற்றவர்கள் ஏற்கனவே மலையேறுவதில் பழக்கப்பட்டவர்கள். நாங்கள் முதன் முதலாகத்தான் பயிற்சிக்குச் சென்றிருந்தோம். என்றாலும் நல்லதொரு சாதனையை ஏற்படுத்தியிருக்கிறோம்" என்றெண்ணுவதாக டாக்டர் சரஸா கூறினார்.

## விஞ்ஞான மேல்படிப்புக்கு உபகாரச் சம்பளம்

கல்லூரி அல்லது பல்கலைக் கழகத்தில் அடிப்படை விஞ்ஞான மேல் படிப்பு படிப்பதற்காகத் திறமையும் தகுதியும் வாய்ந்த செகண்டரி படிப்பு முடித்த மாணவர்களுக்கு உபகாரச் சம்பளம் வழங்க கல்வி ஆராய்ச்சி-பயிற்சிக்கான தேசிய கவுன்ஸில் முடிவு செய்துள்ளது.

1964 ஜூலை முதல் அமுலாகும் இததிட்டத்தின் கீழ் 350 மாணவர்களுக்கு முதல் ஆண்டில் மாதந்தோறும் ரூ. 50-ம் அடுத்த இரண்டு வருடங்களுக்கு மாதந்தோறும் ரூ. 75-ம் உபகாரச் சம்பளம் வழங்கப்படும். இதனை ரூ. 75 ஆகவும், ரூ. 100 ஆகவும் உயர்த்தும் திட்டமும் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

இத்திட்டம் கடந்த ஆண்டு டில்லிப் பகுதியில் மட்டும் பரீட்சார்த்தமாக அமுல் செய்யப்பட்டது.

1963–64-ம் ஆண்டில் அகில இந்திய ரீதியில் எல்லா ராஜ்யங்களிலிருந்தும் மொத்தம் 350 மாணவர்களுக்கு இத்திட்டம் விஸ்தரிக்கப்படுகிறது.

மூன்று வருட பி. எஸ். ஸி. (அடிப்படை விஞ்ஞானப் பகுதியுடன்) பட்டப் படிப்பைத் தொடர்ந்து படித்து முடிக்க விரும்பும் தகுதியும் திறமையும் பெற்ற மாணவருக்கே இச் சலுகை கிடைக்கும். இதற்கான மாணவர்களைத் தேர்ந்தெடுக்கக் கடைப்பிடிக்க வேண்டிய முறையைப் பற்றி ராஜ்ய சர்க்கார்களுக்கு மத்திய சர்க்காரின் விரிவான குறிப்பு ஏற்கனவே அனுப்பப்பட்டுள்ளது.

**3 வருடங்களில் ஒருகோடிப் பேர் கூடுதலாகப் படிக்க வசதி**

மூன்றாவது ஐந்தாண்டு திட்ட காலத்தின் முதல் மூன்று வருடங்களுக்குள் பள்ளிகளில் ஒரு கோடி மாணவர்கள் கூடுதலாகச் சேர்ந்து விடுவார்கள் என்று ஆரம்பக் கல்வி முன்னேற்றத்தைக் குறித்து டில்லியில் நடைபெற்ற ராஜ்ய கல்வி இலாகா காரியதரிசிகள் மாநாட்டில் மதிப்பிடப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

கல்வித் துறையில் ஏற்பட்டு வரும் இந்த மகத்தான முன்னேற்றம் தடைபடாது மேலும் அதிகரிக்க வசதியாகப் போதுமான ஆசிரியர்கள், கட்டிட வகுப்பறைகளும் அதிகரிக்கப்பட வேண்டும் என்று இம்மாநாடு மதிப்பிட்டது. இதற்காக மூன்றாவது திட்டத்தில் கல்வித் துறைக்காக ஒதுக்கப்பட்டுள்ள மொத்தத்தொகையைவிட ரூ. 14 கோடி கூடுதலாகச் செலவிடுவதென்றும் முடிவு செய்யப்பட்டது.

நடப்பு ஆண்டிலேயே இக்கூடுதல் செலவிற்காக ரூ. 4 கோடி ஒதுக்கப்படும் என்று தெரிகிறது.

ஆதாரக் கல்வி முன்னேற்றம் திருப்திகரமாக இல்லை என்று மாநாட்டில் கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

கல்வி கற்போர் தொகை அதிகரித்து வரும் சமயத்தில், கல்வியின் தரமும் குறையாமல் கவனிக்கப்பட வேண்டும் என்றும் மாநாட்டில் வலியுறுத்தப் பட்டது.

மூன்றாவது திட்ட காலத்திற்குள் எல்லா ராஜ்யங்களிலும் பிரைமரி கட்டாயக் கல்வி மசோ

தா நிறைவேற்றப்பட வேண்டும் என்றும் இம்மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது.

நான்கு, ஐந்தாவது திட்ட காலத்தில் ஆரம்பக் கல்வியை மேலும் விஸ்தரித்து கட்டாயப் படுத்த மேற்படி மசோதா வசதியாக இருக்கும் என்று தெரிவிக்கப்படுகிறது.

செகண்டரி கல்வி கற்போர் தொகை நாளுக்கு நாள் பெருகி வருதாகவும் அதற்கேற்படும் செலவை ஈடுகட்ட கல்வித் துறைக்கு அதிக நிதி ஒதுக்க வேண்டும் என்றும் பல ராஜ்ய கல்வி இலாகா காரியதரிசிகள் வலியுறுத்தினர்.

## புதிய கல்லூரிகள்

உயர்தரக் கல்வி கற்போர் தொகை பெருகி வருவதற்கேற்ப புதிய கல்லூரிகள் ஏற்படவும், ஏற்கனவே உள்ளவற்றிற்குப் போதிய மான்யம் தரவும் வசதியாகப் பல்கலைக் கழக மான்யக் கமிஷனுக்கு மேலும் அதிக நிதி ஒதுக்க வேண்டும் என்று அதன் காரியதரிசி கேட்டுக் கொண்டார்.

விஞ்ஞான மேல் படிப்புக்கும், ஆராய்ச்சிகளுக்கும் பல்கலைக் கழகங்களில் அதிக வாய்ப்பு தருவதற்குப் பல்கலைக்கழக மானியக் கமிஷன் திட்டமிட்டுள்ளது.

இதற்காகப் போதிய நிதியும், அந்நிய செலாவணியும் அளிக்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

கல்லூரிகளில் விஞ்ஞானப் பாடங்களில் சேரும் மாணவர் தொகை வட இந்தியாவைவிட தென்னிந்தியாவில் அதிகமாக இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

கல்வி கற்பதற்கும், வேலை வாய்ப்பதற்குமுடைய தொடர்பு குறித்து தாக்கர் கமிட்டி ஆராய்ந்து வருவதாகவும், இன்னும் ஆறு மாதங்களில் அதன் அறிக்கை தயாராகிவிடும் என்றும் யூனியன் கல்வி இலாகா காரியதரிசி திரு. கிருபால் அறிவித்தார்.

கல்லூரிகளிலும், பள்ளிகளிலும் படித்துக் கொண்டிருக்கும் போதே மாணவர்கள் சொற்ப வருமானம் பெறும் வகையில் தொழில் படிப்பும், உற்பத்தித் திட்டமும் பாடத் திட்டத்தில் இணைப்பது பற்றி ஆராயவும் ஒரு கமிட்டி விரைவில் நியமிக்கபபடும் என்றார்.

## மத்திய அரசின் புதுத்திட்டம்

### 60 பள்ளிக்கூடங்கள் நாடெங்கும் அமையும்

புதுடில்லி, ஜூன் 29—21 வயது முதல் 14 வயது வரையுள்ள சிறுவர் சிறுமியர் துவக்கப்பள்ளி படிப்புப் படித்து மேல் படிப்புப் படிக்கவியலாதபடி, பண வசதி காரணமாகவோ வேறு காரணங்களாலோ படிப்பை நிறுத்திக் கொண்டிருந்தால் அவர்களுக்குத் தொழில் கல்வி கற்றுக்கொடுக்கும் திட்

டம் ஒன்றை இந்திய அரசாங்கம் தயாரித்துள்ளது.

இந்தச் சோதனைத் திட்டத்தை மத்திய நிதி அமைச்சும் அங்கீகரித்துவிட்டது. மூன்றாம் திட்ட காலத்தில் இதற்காகும் செலவு முழுவதையும் மத்திய அரசே ஏற்றுக் கொள்ளும். இந்தத் திட்டப்படி பல்வேறு ராஜ்யங்களிலும் யூனியன் பிரதேசங்களிலும் அடுத்த இரண்டு மூன்று ஆண்டுகளில் இந்தக் கலா நிலையங்கள் 60 ஏற்படும். இந்தத் தொழில் கலாநிலையங்கள் அவ்வட்டாரத்திலுள்ள சிறந்த ஹைஸ்கூல், ஹையர் எலிமெண்டரி ஸ்கூல் அல்லது பலநோக்கு பள்ளிக்கூடம் ஆகியவற்றுடன் இணைக்கப்படும். முழு நேர, அல்லது பாதி நேரத் தொழில் பயிற்சியும் பொதுக் கல்வியும் இவர்களுக்குக் கற்றுக் கொடுக்கப்படும்.

இந்தத் தொழில் கல்வியில் உலோகத் தொழில், தச்சுத் தொழில்களும் கற்றுக்கொடுக்கப்படும். பொதுக் கல்வியில் மனித இயல் பாடங்கள், சமூகக் கல்வி, கணக்கு, பொது அறிவுப் பாடங்கள் கற்றுக் கொடுக்கப்படும்.

இவ்விதம் சிறுவர் சிறுமிகளுக்குத் தொழில் கல்வி கற்றுக்கொடுக்க வேண்டும் என்று பிரதம மந்திரி நேரு 1960-ம் ஆண்டிலேயே கருத்துத் தெரிவித்திருக்கிறார். அப்போதிருந்தே இத்திட்டம் பற்றி ஆராய்ச்சிகளும் ஆலோசனைகளும் நடந்து வந்தன.

கடந்த ஆண்டு யூனிசெப் இம்மாதிரி தொழில் கல்வி நிலையங்கள் அமைக்க மூன்றாம் திட்ட காலத்துக்கு சுமார் 10 லட்சம் டாலர் நிதி உதவுவதாகத் தெரிவித்தது. உலகத் தொழில் ஸ்தாபனமும் இந்தத் திட்டம் பற்றிய ஆலோசனைகள் தெரிவிக்கும் என்றும் தெரியவருகிறது.

---

## அறிவுச் சுடர்கள்

என்னுடைய வாழ்க்கை சமூகம் முழுவதற்கும் சொந்தம் என்பது என் கருத்து. நான் உயிருடன் வாழும் வரையில் என்னால் முடிந்ததையெல்லாம் அதற்குச் செய்வது என் உரிமையும் கடமையும் ஆகும்.

—பெர்னார்ட்ஷா

உள் ஒன்று வைத்துப் புறம் ஒன்று பேசும் நண்பனைவிட வெளிப்படையாக உள்ள பகைவன் ஆயிரம் மடங்கு மேலானவன்.

—நெப்போலியன்

# மனத்தால் ஆகாதது ஒன்றுண்டோ?

(ஜே. ஜே. துரைராஜ், பி. ஏ., எல். டி.)

அமெரிக்க தேசத்தில் நாவிதர் சங்கம் ஒன்று உண்டு. தங்கள் கைத் திறமையை மற்றவர்கள் கண்டு வியக்கும்படியான சந்தர்ப்பத்தை அளிக்க ஒரு விழாவும் நடத்துகிறார்கள். வேண்டுமென்றே நகரத்தின் ஏழைக் குடிகள் வசிக்கும் தெருவில் கண்ணுக்கு அலங்காரமின்றி இருக்கும் ஒரு மனிதனைத் தேர்ந்தெடுத்து, அவனுடைய புகைப் படத்தை அப்படியே பிடித்து பிரபல பத்திரிகைகளில் பிரசுரித்து விடுவார்கள். அப்புறம் பார்க்க வேண்டுமே காரியத்தை! அவன் சிகையைச் சிரசுக்கு ஏற்றபடி சிங்காரிப்பார்கள். அழகாகச் சீவி விடுவார்கள். கட்டுக்கடங்காத அவன் தலை மயிர்களைக் கட்டுப் படுத்துவார்கள். ஒழுங்கீனத்திலிருந்து ஒழுங்கைச் சிருஷ்டிப்பார்கள். இவை யாவையும் மக்கள் பார்க்கும்படி, பத்திரிகைகளின் வாயிலாக அவனது மாற்றத்தைக் காட்டும் படங்களைப் பிரசுரம் செய்வார்கள். கடைசியில் அவர்களுடைய கைத்திறமையால் உருவாக்கப்பட்ட இப் புது சிருஷ்டி எவ்வளவு வித்தியாசமாயிருக்கும், தெரியுமா? அவனது ஆப்த நண்பர்கள் கூட அவனை அடையாளம் கண்டுபிடிக்க முடியாது! இதை விட அத்தொழிலுக்கு வேறு விளம்பரம் தேவையில்லை. காட்டுமிராண்டியை நாசுக்காக்கும் பெருமை இத்தொழிலாளருக்கே உரியது என்று சொல்லி விடலாம்.

இப்படிப்பட்ட ஒரு அற்புத சிருஷ்டியைப் பார்த்த ஹோட்டல் மானேஜர் ஒருவருக்குப் புதிய யோசனை ஒன்று தோன்றியது. நாவிதர்கள் சேர்ந்து, அவனை மாற்றி விட்டார்கள். இனி அவனுக்கு ஒரு வேலை கொடுத்து, அவனது மாற்றத்தை சாஸ்வதமாக்கி விடலாம் என்று நினைத்தார். விழா நடந்த அடுத்த நாள் காலையில், கார் போட்டு, அவன் குடிசையை நோக்கிச் சென்றார். அவனோ திண்ணையின் மேல், துணிக்குப் பதிலாகப் பழைய பத்திரிகைகளைப் பரப்பி, முந்தின நாள் அணிந்திருந்த உடையிலேயே படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தான். அவ்வுடை மிகவும் சுருங்கிப் பொலிவிழந்து காட்சி அளித்தது. நல்ல செய்தி கொண்டு வருகிறவர் சும்மா இருப்பாரா? தட்டி எழுப்பினார். "உனக்கு வேலை கொடுக்கும்படியாக எத்தனித்திருக்கிறேன்; என்ன சொல்லுகிறாய்?" என்று கேட்டார். முதுகை வளைத்து, கையை மடக்கி நீட்டி, சோம்பலை முறித்துக் தள்ளிய வண்ணமாக, "வருகிறேன்" என்றான். தொனியில் தெம்பில்லை, முகத்தில் சந்தோஷமில்லை. "எப்

பொழுது வருகிறாய்?'' என்று கேட்டார். "நாளைக்கு'' என்றான். "இப்பொழுதே அந்த வேலை தயாராய் இருக்கிறது'' என்ற வார்த்தைகளால அவனுக்கு ஊக்கமூட்ட பிரயாசைப்பட்டார் வந்தவர். ஆனால் எதிர்பார்த்த பிரதிபலிப்பு கிடைக்கவில்லை. எனவே சந்தேகப்படடார்.

அடுத்த நாள் வந்தது. ஆசாமி வரவில்லை. மானேஜருடைய சந்தேகம் பலப்பட்டு விட்டது. கோபத்துடன் அவனுடைய ஜாகைக்குச் சென்றார். போன இரவில் குடித்த போதையால் இன்னும் அவன் தூங்கிக் கொண்டிருக்கக் கண்டார். வேலைக்கு அவன் லாயக்கு அற்றவன் என்பதை அறிந்து கொண்ட மானேஜர், ஏமாற்றத்துடன் தமது இருப்பிடம் திரும்பினார்.

மனிதனின் தோற்றத்தை மாற்றி விடலாம். இதைப் பிறத்தியார் செய்து விடலாம். ஆனால் உள்ளான மனிதனை மாற்றுவதோ மிகவும் சிரமமான விஷயம் இவ் விஷயத்தைச் செய்வதெப்படி என்பதை விளக்கும் நோக்கத்தோடு தான் இக் கட்டுரை எழுதப்படுகிறது.

மனிதன் வாழ்க்கையே எண்ணங்களால் அமைந்துள்ளது. எண்ணமே வாழ்க்கை, வாழ்க்கையே எண்ணம். நாம் நினைக்கும் நினைவுகளைப் பொறுத்தது நாம் சிருஷ்டித்துக் கொள்ளும் சூழ்நிலை. உங்கள் அமைப்பு உங்கள் அந்தரங்க எண்ணங்களால் நிர்ணயிக்கப்படுகிறது. பத்தொன்பது நூற்றாண்டுகளுக்கு முன் ரோமாபுரியை ஆண்ட மேதாவியாகிய மார்க்கஸ் அரீலியஸ் இந்த சத்தியத்தை மிகவும் வற்புறுத்தியிருக்கிறார். "உன் எண்ணங்கள் சேர்ந்து உண்டாக்கி வைப்பது தான் உன் வாழ்க்கை'' என்பது அவரது வாக்கு.

"நீ நாள் முழுவதும் யோசிக்கும் யோசனைகளே உன்னை உருவாக்கிக் கொண்டிருக்கின்றன'' என்று அதே கருத்தை வேறுவிதமாகச் சொல்லியிருக்கிறார் எமர்சன் என்னும் அமெரிக்க அறிஞர். இப்பொழுது நீங்கள் நினைத்துக் கொண்டிருக்கிற எண்ணங்களே, அடுத்த நிமிஷத்தில் நீங்கள் இருக்கப் போகிற நிலையை நிர்மாணிக்கின்றன. எண்ணங்களை மாற்றுங்கள்; அப்பொழுது உங்கள் உலகையே மாற்றி விடுவீர்கள். உங்கள் மனம் புதிதாவதினால் மறு ரூபம் அடைகிறீர்கள் என்று பவுல் சொல்லியிருக்கிறார். தப்பிதமான எண்ணங்கள் நம்மைத் தீய வழிக்கு இழுத்துச் செல்கின்றன. இந்த வழக்கமும் பழக்கமும் உண்டாகி விட்டால், பின் இவற்றிலிருந்து தப்புவது துர்லபம். அப்படியானால், நல்ல எண்ணங்களையே எப்பொழுதும் மனதிற் கொள்ள நாம் என்ன செய்ய வேண்டும்? வேதத்தை வாசியுங்கள். கருத்தூன்றிப் படியுங்கள். உங்கள் மனதைக் கவரும் வசனங்களை மனப் பாடம் செய்து கொள்ளுங்கள். ஊக்க

மான எண்ணங்களைக் கொண்டு உங்கள் மனதை ஊட்டி வளருங்கள்.

நினையா வண்ணம் உங்கள் வாழ்க்கையில் மாறுதல் ஏற்படலாம். ஜெர்மனி தேசத்தில் வெகு காலமாகச் சிறையில் அகப்பட்டுக் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தான் ஓர் ஆங்கிலேயப்போர்வீரன் ஒரு நாள் அவன் கையில் அகப்பட்ட ஒரு கிறிஸ்தவக் கதைப் புத்தகத்தை வாசிக்க நேர்ந்தது. அதன் கருத்துக்கள் அவனை ஆட்கொண்டன. அவனுக்குப் புத்துயிர் உண்டானது. புதிய உற்சாகம் பிறந்தது. புதிய ஆசை தோன்றியது. அவன் ஆகதுமா விடுதலை அடைய, அன்று முதல் அவன் புதிய மனிதனுனான்.

எல்லோருக்கும் திடீரென இப்படிப்பட்ட அனுபவம் உண்டாவதில்லை. அநேகருடைய மனம் கொஞ்சம் கொஞ்சமாகத் தான் மாறிக் கொண்டே வரும். மனமாறுதலுக்கு முதல் காரணம் மனதில் எழும்பும் யோசனைகளே என்பதை மறந்து போகக் கூடாது.

வாழ்க்கை சந்தோஷமாக இருக்க வேண்டுமானால், சந்தோஷமான எண்ணங்களை மனதிற்குக் கொண்டு வாருங்கள். ஏதோ ஆடிக்கு ஒரு தரம். அமாவாசைக்கு ஒரு நாள் மாத்திரம் சந்தோஷமான நினைவுகளை நினைத்தால் போதாது. எப்பொழுதும் மகிழ்ச்சியான சிந்தனை அலைகளை, சமுத்திரம் போன்ற உங்கள் மனதில் எழுப்பி விடுங்கள். சிரத்தை எடுத்து இப்படிச் செய்யுங்கள். சோகமான எண்ணங்களும், நீசத்தனமான சிந்தனைகளும் நமது மனத்திற்குள் வரப் பிரயாசைப்பட்டுக்கொண்டுதான் இருக்கும். ஆனால் நாம் அவைகளுக்கு இடங் கொடுக்கக் கூடாது.

என்ன எண்ணங்களை நினைக்கிறோமோ, அதற்குத் தகுந்தபடி தான் நமது மன நிலை இருக்கும். அவை சந்தோஷமுள்ளவையாக இருக்குமானால் குதூகலம் பிறக்கும். இல்லையேல், சோர்வு உண்டாகும். அநேகர் சோக எண்ணங்களையே எண்ணும் ஒரு பழக்கத்தை வெகு இலகுவில் உண்டுபண்ணிக் கொள்கிறார்கள். எனவே மனதிலும் உணர்ச்சியிலும் அவர்கள தளர்ந்து போவது கொஞ்சமும் ஆச்சரியம் அல்லவே!

இது மிகவும் சிரமமான ஒரு காரியம் தான். நம் மனம் ஒரு சண்டிக் குதிரை. பழைய பாதையிலேயே செல்லும். புதுப் பாதைக்குத் திரும்பாது. நாமோ விட்டு விடக் கூடாது. குதிரையின்மேல் ஏறியிருக்கிறவன் சரியாய் உட்கார்ந்து லகானைப் பிடித்தால், அதன் திசையை மாற்றக் கூடும்.

"என் சந்தோஷம் உங்களில் தங்குவதால் உங்கள் சந்தோஷம் பூரணம் அடையும்" என்று இயேசு தமது சீடர்களைப் பார்த்துச் சொன்னார். இச் சத்தியம் மின்சாரத்தைப் பார்க்கிலும் அதிக சக்தி வாய்ந்தது. இதை

அசட்டை பண்ணுகிறவனுக்கு வாழ்க்கை சக்தியைக் கொடுக்காது மனிதனை விடுவிக்கும் சக்தி சந்தோஷத்திற்கு உண்டு. சந்தோஷத்தின் ஆத்ம சிநேகிதன் உற்சாகம். இவை இரண்டும் சேரும் என்றால் திறமையுடன் காரியங்களைச் செய்து முடிக்கலாம். மனித உள்ளத்தில் பதுங்கிக் கிடக்கும் ஆற்றலை வெளிக் கிளப்பும் சக்தி சந்தோஷத்திற்கு உண்டு.

கால்ப் என்ற விளையாட்டை ஒரு ஆசிரியர் ஒரு மாணக்கனுக்குக் கற்றுக் கொடுத்தார். உடலை நேராக வைத்து, முகத்தைச் சுளித்துக் கொண்டு, கை கால் தசைகளை விறைத்துக் கொண்டு, பந்தை அடித்தால், அது சரியான திசையில் வேண்டிய வேகத்தில் செல்லாது. இதை அறிந்த ஆசிரியர் ஒரு சூழ்ச்சியைக் கற்றுக் கொடுத்தார். "பந்தை அடிக்குமுன் ஒரு ஹாஸ்யக் கதையை உன் மனதிற்குக் கொண்டு வா. உன் தசைநார்கள் எல்லாம் தளர்ந்து, உன் முகம் சிரிப்பால் மலரும் தருணம் பார்த்து, கோலால் அந்தக் கால்ப் பந்தை அடி" என்றார். கைமேல் அதன் பலனைக் கண்டான் மாணவன். டென்னிஸ் விளையாடுகிறவர்களுக்குக் கூட இப் பத்தி மதி மிகவும் அவசியம். பந்தை அடிப்போமோ, அல்லது கை மட்டைக்கு அது தப்பி விடுமோ என்ற அச்சம் இருந்தால், கண் சரியாய்ப் பார்க்காது, கை வராது, கால் தள்ளாடும். ஆனால் நம்பிக்கையுடன் கூடிய மன மகிழ்ச்சி உடலைக் கவ்வுமானால், எல்லா உறுப்புகளுக்கும் உறுதி ஏற்படும், இலக்கும் தவறாது.

சூரியன் கூச்சல் போடுவதில்லை. கும்மாளம் கொட்டுவதில்லை. பறை சாற்றுவதில்லை. விளம்பரப்படுத்துவதில்லை. எனினும் அது இப் புவியின் மேல் சாதிக்கும் காரியங்களுக்கு அளவேது? சமுத்திர நீர் ஆவியாகி முகிலாகி, மழை சொரிகிறது. தாவரங்கள் உணவைச் சூரிய வெளிச்சத்தால் தான் தயாரிக்கின்றன. ஞாயிறு இல்லை என்றால் வாழ்வேது? இவ்வண்ணமே, நமது உள்ளத்தில் ஆத்மீகச் சக்தி இருக்கிறது. இதன் வல்லமையின் வரம்பை இன்னும் மனிதன் கண்டு கொள்ளவில்லை.

---

ரோலண்டு ஹேஸ் என்ற உலகப் பிரசித்தி பெற்ற நீக்ரோ பாடகருக்கு நேர்ந்த ஒரு சம்பவம் நமக்கு எடுத்துக் காட்டாக அமைந்திருக்கிறது. அவர் ஒரு சமயம் பிரயாணம் பண்ணிக் கொண்டிருக்கும்போது, சில திருடர்கள் அவரைத் தாக்கினார்கள். என் செய்வார் ரோலண்டு ஹேஸ்? இவர் ஒருவர். அவர்களோ பலர். மனம் கொண்டமட்டும் புடைத்தார்கள்.

---

இச்சம்பவத்தைக் குறிப்பிட்டு ரோலண்டின் சிநேகிதர், "அப்பொழுது நீங்கள் என்ன செய்தீர்கள்? கோபப்பட்டு, எதிர்த்

துத் தாக்கினீர்களா?" என்றார். "புஜ பலத்தினால் நான் அவர்களுக்கு ஜவாப் கொடுக்க முடியவில்லை. ஆனால் இன்னொரு விஷயத்தில் அவர்களைக் காட்டிலும் அதிகமான வலு எனக்கு இருந்தது. அது தான் எனது ஆத்மீகச் சக்தி. அதையே அவர்களுக்கு விரோதமாகப் பிரயோகித்தேன்" என்று இரகசியத்தை அவிழ்க்கத் தொடங்கினார். "துப்பாக்கியை நீட்டி என்னைச் சுட எத்தனித்த அவனை, அன்பொழுகும் கண்களோடு பார்த்தேன். அவன் முகம் விகாரப்பட்டது. நீட்டின கை தளர்ந்தது. 'ஐயனே, என்னை மன்னிக்க வேண்டும்' என்று கெஞ்சினான்" என்று சொல்லி முடித்தார்.

பிறப்பிலேயே ஒரு கால் ஊனமுள்ளவனாய் இருந்தான் ஒரு பையன். அவன் தகப்பனாருக்கு இது சொல்ல வொண்ணா மனச்சஞ்சலத்தைக் கொடுத்தது. ஒரு நாள் தகப்பன் தன் மகனைப் பார்த்து, "மகனே, இன்றைக்கு என்னுடன் கோயிலுக்கு வா. நாம் ஆண்டவனை நோக்கிப் பிரார்த்திப்போம்; உனக்குச் சுகம் உண்டாகும்" என்றார்.

பள்ளியில் இப் பையனுக்குச் சந்தோஷமே இடையாது. உடன் மாணவர்களில் சிலர் இவனை நொண்டி, நொண்டி என்று பரிகாசம் பண்ணினார்கள் மற்றவர்கள் இவன் மேல் அளவுக்கு மிஞ்சிப் பரிதாபப்பட்டார்கள். எனவே ஒருவர் மேலும் பையனுக்கு இஷ்டம் இல்லை. சாதாரண ஏணியில் ஏற முடியாத இவன் எப்படி வாழ்க்கையின் புகழேணியில் ஏறக் கூடும்?

தகப்பனும் மகனும் கோயிலுக்குச் சென்று, கிராதியில் தலையைச் சாய்த்து, முழங்கால் படியிட்டு, ஆண்டவரை நோக்கி ஜெபம் பண்ணினார்கள். சற்று நேரம் கழித்து, பையன் கண்ணைத் திறந்து, தகப்பனாரைப் பார்த்தான். அவர் இன்னும் ஜெபத்திலேயே ஆழ்ந்திருந்தார்.

இருவருமாகக் கோயிலுக்குள்ளே நடந்து, வெளியே வரும் போது, தகப்பனார் மகனைப் பார்த்து, "மகனே, இன்றையிலிருந்து உனது ஊனம் மறைந்து போனதடா; எனக்கு என்ன ஆனந்தம்!" என்றார். மைந்தன் தந்தையின் முகத்தை நோக்கினான். அதில் தான் எத்தனைப் பிரகாசம்! கவலை களையப்பட்டு, களிப்புடன் விளங்கியது அவ்வதனம். குனிந்து, தன் காலையும் பார்த்தான். இன்னும் அது நொண்டியாகவே இருந்தது.

கோயிலின் வாசலைத் தாண்டும் தருணத்தில், பையன் அவரைப் பார்த்து, "அப்பா!" என்றான். தகப்பனார் திரும்பினார் "அப்பா, எனது ஊனமெல்லாம். மறைந்து போனது" என்றான். அவன் முகத்தில் தான் எத்தனை சந்தோஷம்! வெகு நாள் கஷ்

டத்திலிருந்து விடுவிக்கப்பட்ட ஒரு உணர்ச்சி அங்கே பிரதி பலிக்கப்பட்டிருந்தது. தகப்பன் சற்று குனிந்து, பையனின் காலைப் பார்த்தார். அது இன்னும் ஊனமாகவே இருந்தது!

எனினும் இருவரும் என்றுமில்லாத மகிழ்ச்சியுடன் அன்று வீடு திரும்பினார்கள். பையனின் சரீரத்திலுள்ள ஊனம் அவ்வளவு முக்கியமானதல்ல. இந்நாள் மட்டும், தகப்பனாரின் மனமும் மகனின் மனமும் ஊனப்பட்டு, செயலாற்ற வலுவின்றிக் கிடந்தன. இன்றோ மனதிற்கு விடுதலை கிடைத்தது தகப்பன் மகனின் அங்கக் குறைவை மறந்தார். பையனும் தான் நொண்டி என்ற எண்ணத்தைத் தனது மனதை விட்டு அறவே ஒழித்து விட்டு, மற்ற மாணவர்களைப் போல், தன் பாடங்களைப் படிப்பதில் முனைந்தான். பிற்காலத்தில் ஒரு பெரிய பத்திரிகையின் ஆசிரியனானான். இவ்வுண்மைச் சம்பவத்திலிருந்து நாம் படிக்க வேண்டிய பாடமும் இருக்கிறது அல்லவா? மனதால் வெல்ல முடியாத காரியம் இவ்வுலகத்தில் இல்லை.

—"நல்வழி"

**"ஆரம்பக்கல்வி"**
**ஆபீஸ்.**
**94-95, புதுத்தெரு,**
**மண்ணடி, சென்னை-1.**

மாதாந்திரக் கணக்கு அனுப்பும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 3-50
ரிக்கார்ட் ஷீட்டுகள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-50
பிராவிடெண்ட் பண்டு கட்டும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-50
பள்ளியில் பிள்ளைகளைச் சேர்க்கும் விண்ணப்பத் தாள்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 1-25
வருடாந்திர பிராவிடண்ட் பண்டு சரிபார்த்தனுப்பும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-50
Form of Certificate of Income
வருமான நற்சாட்சிப் பாரங்கள்
(ஆங்கிலம்) 10 ரூ. 2-50.

தபால் செலவு பிரத்யேகம்

முக்கிய அறிவிப்பு

Book Post-ல் பாரங்களை அனுப்ப தபால் செலவு:

25 பாரங்களுக்கு 14 nP.
50 பாரங்களுக்கு 26 nP.
75 பாரங்களுக்கு 41 nP.
100 பாரங்களுக்கு 50 nP

வேண்டிய பாரங்களுக்கு தபால் செலவு சேர்த்து முன் பணத்துடன் ஆர்டர் அனுப்பவும்.

விளையும் பயிர் :

# வி. எஸ். ஸ்ரீனிவாச சாஸ்திரி

ரா. வீழிநாதன்

"அம்மா! சரியாக இன்றைக்கு எட்டாம் நாள் எங்கள் பள்ளிக்கூடத்துக்கு இன்ஸ்பெக்டர் வருகிறாராம்," என்றான் பையன்.

"அப்படியா? நன்றாகப் படித்து இன்ஸ்பெக்டரிடமும் நல்ல பையன் என்று பெயர் வாங்கு வகுப்பில் முதலாவதாக வா!" என்று அன்னை ஆசீர்வதித்தாள்.

"அம்மா உன் ஆசீர்வாதம் இருக்கும்பொழுது எனக்கு என்ன கவலை? கட்டாயம் நானே முதல்வனாக வருவேன். ஆனால்......" அவன் பேச்சு பிள்ளைத்தனமாக இல்லை.

"ஆனால்...என்ன? சொல்லு!"

"என் சட்டையும் வேட்டியும் கிழிந்து கிடக்கின்றனவே!"

"கந்தையானாலும் கசக்கிக் கட்டு இந்த பழமொழியை நீ கேட்டதில்லையா?"

"கசக்கிக் கட்ட நான் தயார் அம்மா! துணிக்குப் போடக் கொஞ்சம் சவுக்காரம் கிடைத்து விட்டால் தேவலே!"

"சவுக்காரம் வாங்கக் காசு இல்லையே! என்ன செய்வது?"

"ஒரு அணா இருந்தால் போதும் அம்மா!"

"நான் காசுக்கு எங்கே போவேண்டா, கண்ணு"

"ஏனம்மா! நீ சமைச்சுப் போறியே, அவங்க வீட்டு மாமியைக் கேட்டால் தரமாட்டாங்க?"

"கேட்டுப் பார்க்கிறேன். கிடைச்சால் உன் அதிர்ஷ்டம்!" என்றாள் அம்மா.

இன்ஸ்பெக்டர் வருவதற்கு முதல்நாள் வரை தாயார் முயன்று பார்த்தாள். எங்கும் காசு பெயரவில்லை. அவள் சமைத்துப் போட்டு வந்த வீட்டிலும் 'மாதக் கடைசியில் நாங்கள் காசுக்கு எங்கே போவோம்?' என்று கையை விரித்து விட்டார்கள். தாயாருக்கு வழி வகை ஒன்றும் தோன்றவில்லை. பையனோ கண்ணீர் ததும்ப நின்றான். அழுகை இதோ வந்து விட்டேன் என்று கட்டியம் கூறிக்கொண்டிருந்தது. 'வெளுப்பாகத் துணி உடுத்தி வரவேண்டும் என்று வாத்தியார் கண்டித்துச் சொல்லியிருக்கிறாரே, அம்மா!' என்றான் விசும்பிக் கொண்டே.

"நன்றாக அழுக்குப் போகத் துவைத்து உடுத்திப் போ. ஒன்றும் சொல்லமாட்டார்கள்!" என்று தாயார் சமாதானப்படுத்தினாள். அதோடு தானே எடுத்துப் போய்த் துவைக்கவும் முற்பட்டாள். தாயாரும் பிள்ளையும் சேர்ந்து துப்புரவாகத் தோய்த்து உலர்த்தித் தட்டிக் கொட்டி இஸ்திரி போட்டதற்கும் மேலாக மடித்து வைத்தார்கள்.

என்னதான் விழுந்து விழுந்து துவைத்தாலும் சவுக்காரம் போட்டுத் துவைத்தாற்போலிருக்குமா? அவனது மனக்குறையைத் தாயின் ஆறுதல் சொல் மறைத்து நிறைத்தது. உடுத்தும் துணி சற்று வெளுப்புக் குறைவாக இருந்தால் என்ன. உள்ளம் வெளுத்த பையன். மனச் சமாதானமடைந்து இரவு நன்றாகத் தூங்கினான். உடையில் முதலாவதாக இல்லாவிட்டாலும், படிப்பில் முதலாவதாக இருப்போம் என்று திம்பதி அவன் முகத்தில் தெளிவாகத் தெரிந்தது.

மறுநாள் பொழுது புலர்ந்ததும் நன்றாக உடல் தேய்த்துக் குளித்துவிட்டு, முதல் நாள் துவைத்து மடித்து வைத்திருந்த வேட்டி-சட்டையை உடுத்திப் பள்ளிக்குப் புறப்பட்டான்.

வகுப்புப் பையன்கள் எல்லோரும் பளிச்சென்று உடை அணிந்து வந்திருந்தார்கள். அவன் உடுத்தியிருந்த துணி மட்டும் திருஷ்டிப் பரிகாரமாக இருந்தது. வகுப்பில் நுழைந்த உபாத்தியாயருக்கு அது கண்ணை உறுத்தியது.

"என்னடா! எத்தனை தடவை படித்துப் படித்துச் சொன்னேன்! இப்படிக் கந்தலை உடுத்தி வந்திருக்கிறாயே!" என்று கடிந்தார். தமது வகுப்புக்கு நல்ல பெயர் கிடைக்க வேண்டும். இன்ஸ்பெக்டர் தம்மைப் பாராட்ட வேண்டும் என்று மனப்பால் குடித்துக் கொண்டிருந்த அவருக்கு ஆத்திரம் தலை கால் தெரியாமல் வந்தது.

பையன் தன் நிலைமையையும் தாயாரின் சிரமத்தையும் எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் அவர் காதில் வாங்கிக்கொள்ளவில்லை. "என் சொல்லை மீறியதற்காக எட்டணா அபராதம். ஓடு, ஓடிப்போய் நல்ல துணி உடுத்து வா; இல்லாவிட்டால் வகுப்பில் நுழையாதே!" என்று சீறி விழுந்தார்.

பையனுக்குத் தலை சுற்றியது. 'சவுக்காரம் வாங்க ஓரணா கிடைக்காத தாயார் அபராதம் செலுத்த எட்டணாவுக்கு எங்கே போவாள்?' என்று கதி கலங்கினான். உபாத்தியாயரோ எரிமலையாக வெடித்துக்கொண்டிருந்தார். எனவே அவன் தலை குனிந்தபடி வகுப்பிலிருந்து வெளியேறினான். சில பையன்கள் சிரித்தார்கள். சில பையன்கள் அநுதாபப்பட்டார்கள்.

(25-ம் பக்கம் பார்க்க)

# கடமையுள்ளம்

(கா. சொ. இராசசேகரன், பி. ஏ.)

1954-ம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 28-ம் நாள் காலை 7-மணியளவில் ஆங்கிலக் கப்பலொன்று மத்திய தரைக் கடலிலே அல்ஜீரியாவிலிருந்து 50-கல் தொலைவிலே சென்றுகொண்டிருந்தது. அதன் பெயர் 'எம்பயர் வின்டிரஷ்.' தொடுவானிலே காலைக்கதிரவனின் இன்முகத்தைக் காண மேல் தளத்திற்கு வந்த பிரயாணிகள், கப்பலின் மேல்தளம் மேலும் கீழும் பக்கவாட்டில் அசைவதையும், தளத்தின் இடைவெளியிலிருந்து புகை வருவதையும் கண்ணுற்றனர். கப்பலுக்குள்ளிருந்து வெடிக்கும் ஒலியும் கேட்க ஆரம்பித்தது.

இதற்கிடையிலே மாலுமி ஒருவன் அடித்தளத்திலிருந்து தள்ளாடிய வண்ணம் மேலேறிவந்து "இயந்திர அறையிலே தீ"யெனக் கத்தியவண்ணம் வீழ்ந்து இறந்தான். அவன் தலைமயிரும், புருவமும் தீக்கிரையாகியதுடன், அவன் முகமும் தீயினால் கருக்கப்பட்டிருந்தது. அன்றியும், இயந்திர அறையில் இவனுடனிருந்த மூவர் புகைதாளாமல் திக்குமுக்காடி இறந்துபட்டனர். தீயோ தன் கோரச் செங்கரங்களை நீட்டித் தன் பசியை ஆறறியவண்ணமிருந்தது. அடித்தளம் முழுமையும் தீ. கப்பல் அலுவலர்கள் அதிர்ச்சியடையாமல், பதட்டமின்றி, அவர்களுக்கு இட்ட கடமையைத் தயங்காது விரைந்து ஆற்றிய வண்ணமிருந்தனர். மற்றும் சிலர் பிரயாணிகளிடையே சென்று அவர்கள் நடந்து கொள்ளவேண்டிய முறைகளைப்பற்றிக் கூறிக்கொண்டிருந்தனர். கப்பல் தலைவன் வில்லியம் வில்சன் என்பவர் பிரயாணிகளைக் கப்பலிலிருந்து விடுவித்து உடன் வெளியேற்றுவ

---

(24-ம் பக்கத் தொடர்ச்சி)

வகுப்பிலிருந்து வெளியேறும் போது பையன் மட்டும் மனத்தில் ஓர் உறுதி பூண்டான். "நான் படித்துப் பெரியவனாகி உபாத்தியாயராக வந்தால் எந்தப் பையன்களுக்கும் இப்படியெல்லாம் அபராதம் விதிக்கமாட்டேன்."

அவன் நினைத்தபடியே உபாத்தியாயராக வந்தான். தனது பச்சை உள்ளத்தில் பதிந்த தீர்மானத்தை உறுதியாகக் கடைப்பிடித்தான். யார் தெரியுமா அவன்? ஆங்கிலேயரும் வியக்கும் வண்ணம் ஆங்கிலப் புலமை பெற்றுப் பாரதத்துக்குப் புகழ் தேடித் தந்த மகாகனம் சீனிவாச சாஸ்திரி அவர்கள் தான்.

—"வானொலி"

தற்கு ஏற்ற ஏற்பாடுகளைச் செய்துகொண்டிருந்தார். பல, உயிர் தப்புப் படகுகளும், மிதக்கும் உயிர் காக்கும் சாதனங்களும் தீயினால் அழிந்துபோயின. கையிலிருப்பதோ 12 உயிர் தப்பும் படகுகள். கப்பலிலிருந்த போர் வீரர்களின் எண்ணிக்கையோ 1498. அவர்கள் தத்தம் குடும்பங்களுடன் தூரக்கிழக்கு நாடுகளிலிருந்து தம் நாடு திரும்புகிறவர்கள். இந்நிலையில் யாவருமே உயிர்தப்புவது என்பது மிகக் கடினம். இருப்பதோ மிகக் குறைந்த நேரம். என்ன செய்வது?

அச்சமயம், கப்பற் படைத் தளபதி கர்னல் ராபர்ட் ஸ்காட்டின் கட்டளைகள் அங்குள்ள ஒலி பரப்பும் பெட்டியிலிருந்து வெளி வந்தன. தப்பிச் செல்லப் படகு கிட்டும் வரை அங்குள்ள எல்லா இராணுவ வீரர்களும் 'பர்க்கன் கெட்டிரில்'லில் இருத்தல் வேண்டும் என்பதே அக்கட்டளை. 'பர்க்கன் கெட்டிரில்' என்றால், ஒழுங்காக, அணியில் அசையாது இருத்தலேயாகும். எல்லா இராணுவ வீரர்களும் கட்டளையை ஏற்று இராணுவ அணியில் ஒருங்கே நின்றனர். ஒருவரும் படகு அருகே தப்பிச் செல்ல முயலவில்லை. கப்பல் அலுவலர்கள் அவரவர் கடமையை விரைந்து செய்ய முற்பட்டனர்.

கப்பலின் மேல் தளத்திலே இங்ஙனமிருக்க, அங்குள்ள படகுகளில் பெண்களும், குழந்தைகளும முதறகண ஏற்றப்படடனர். அங்கிருந்த படகுகளில் இன்னும் சிலருக்கு இடமிருந்தது. இதையறிந்த கர்னல் ஸ்காட், அணியிலிருந்து இளைஞர்களைப் பொறுக்கிப் படகிலே ஏற்றினார். இந்நிலையில் யாராவது ஒருவர் தன்னலங்கருதியோ, ஆத்திரங்கொண்டோ, அன்றித் தப்பிச்செல்லவேண்டும் என்ற பேரவாவினாலோ படகருகே ஓடியிருப்பினும், அணியிலுள்ள ஏனையோர் அறிவிழந்து படகை நோக்கி ஓடியிருப்பர். இஃதன்றி, அணியிலிருப்போர் சிறிதும் பதட்டமின்றிக் கடமையையுணர்ந்து கட்டுப்பாட்டைக் கடைப்பிடித்து ஒழுங்கை மேற்கொண்டனர். கடைசிப் படகு, தண்ணீரில், கப்பலைப் பிரிந்து மிதக்கலாயிற்று.

இராணுவ அணியிலே, முந்நூறு போர் வீரர்கள், சிறிதும் சோர்வின்றிமுணுமுணுக்காமல், அமைதியாக அணிவகுத்து நின்றனர். கப்பல் தலைவன் வில்சனின் உடைகளோ கருகிக் கந்தலாயின. கொழுந்து விட்டெரியும் தீ அவர் தம் காலணியை உண்டதோடல்லாமல் காலையும் பதம்பார்த்துவிட்டது. பிறகு, கடல் தளபதியின் உத்தரவுக்குப்பணிந்து இராணுவ வீரர்கள் யாவரும், காலணியையும், மேலாடைகளையும் கழற்றியெறிந்து விட்டுக் கப்பலினுள்ள, உடைந்த பலகைகளையும், மற்றும் மிதக்கும் பொருட்களையும்

எடுத்துக்கொண்டு கடலில் குதித்தனர். கர்னல் ஸ்காட்டின் உத்தரவுப்படி, கடலில் குதித்தவர்கள், அங்குள்ள படகுகளை நோக்கிச் செல்லாது, மரத் துண்டுகளைப் பற்றிய வண்ணமே மிதந்தனர். சிலர், அவர்களில் நீந்தத் தெரியாதவர்களுக்கு உதவியவண்ணம் இருந்தனர்.

எல்லாக் கடமைகளையும் செவ்வனே ஆற்றியபின், கப்பல் தலைவனும், கப்பற்படைத் தளபதியும் கடைசியாகக் குதித்தனர். கப்பலில் தீயோ எரிந்தவண்ணமிருந்தது. கப்பலும் சிறிது சிறிதாக மூழ்கலாயிற்று. சில நேரங் கழிந்தது. கடலில் மிதந்து கொண்டிருந்தவர்கள், உள்ளத்திலே உறுதியாகத்தானிருந்தனர். உற்சாகம் சிறிதும் குன்றவில்லை. தொடுவானத்திலே உதவிக் கப்பலின் உருவம் தோன்றலாயிற்று. அங்குள்ளவர்களின் இதழ்களோடே புன் சிரிப்பு மின்னியோடியது. முகம் மகிழ்ச்சிப் பொங்கலாயிற்று. அரை மணி நேரத்தில் மூன்று கப்பல்கள் உதவிக்கு விரைந்தன. இயந்திர அறையினிலே தீயினாலும் புகையினாலும் மாண்ட நால்வரைத் தவிர மற்ற யாவரும் காப்பாற்றப்பட்டனர்.

இம்முறையிலே, பல விபத்துக்குள்ளான கப்பலில் உள்ளவர்கள், கட்டுப்பாட்டைக் கடைப்பிடித்து மரணத்தின் பிடியிலிருந்து தப்பியிருக்கின்றனர். 'டிடானிக்' என்ற பெரியகப்பலொன்று 2201 பிரயாணிகளை ஏற்றிக்கொண்டு வட அட்லாண்டிக்கில் சென்றுகொண்டிருக்கும்போது, பனிப்பாறையினால் மோதப்பட்டுக் கப்பல் உடைந்து எறியப்பட்டது. இந்நிலையிலே, யாவரும் ஒழுங்கை நிலைநாட்டிக் கடமையை ஆற்றலாயினர். இயந்திர அறையிலே 37 இயந்திர இயக்குநர் தங்கள் கடமையைச் செய்தவண்ணமிருக்க, கப்பலில் மேல் தளத்திலே எண்மர் இசைக்கருவிகளை இசைத்தவண்ணம் இருந்தனர். அவர்தம் இடங்களை விட்டு அகன்றாரில்லை, அக்கடமை வீரர்கள். உயிர் தப்பும் படகுகளில், பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் முதலிடம் தரப்பெற்றது. ஆயினும், பலர் அதில் மாண்டனர். அக்கப்பலிலுள்ள பிரயாணிகள் 'பர்க்கன் கெட்டிரில்' என்ற ஒழுங்கு முறையையும் கட்டுப்பாட்டையும் பின்பற்றி ஆங்கிலநாட்டுச் சரித்திரத்திலேயே நல்லதொரு இடத்தைத் தேடிக்கொண்டனர்.

—"திராவிட நாடு"

# ஆசிரியர் மாணவர் விகிதாசாரம் குறைக்கப்படலாம்

## ஆரம்பப் பள்ளிகளுக்கு நஷ்ட ஈடு அதிகரிக்கலாம்

### கல்வி இலாகா டைரக்டர் அறிக்கை கிடைத்ததும் சர்க்கார் முடிவு செய்யும்

சென்னை, ஜூலை. 15-6, 7, 8 வகுப்புகளில் சேர்க்கப்பட்ட ஏழை மாணவர்கள், மாணவிகள் சம்பந்தமாக உயர்தர ஆரம்பப் பள்ளிகளின் நிர்வாகத்தினருக்கு, சம்பள நஷ்டத்துக்காகத் தரப்படும் நஷ்ட ஈட்டின் அளவை சர்க்கார் உயர்த்தும் என்று தெரிகிறது.

ஆரம்பப் பள்ளிகளில் மாணவர் ஆசிரியர் விகிதாசாரத்தையும் சர்க்கார் விரைவில் குறைக்கலாம்.

இவ்விரு பிரச்னைகளையும் கல்வி இலாகா டைரக்டரின் பரிசீலனைக்கு சர்க்கார் அனுப்பியுள்ளதாகத் தெரிகிறது. கல்வி இலாகா டைரக்டரிடமிருந்து பரிசீலனை அறிக்கை கிடைத்ததும் சர்க்கார் இப்பிரச்னைகளின் மீது முடிவுகளை மேற்கொள்ளும்.

கல்வித் துறையில் உள்ளவர்கள் அநேக மாதங்களாக இவ்விரு அம்சங்களிலும் மாறுதலைக் கோரி வருகின்றனர்.

#### நஷ்ட ஈடு

பிரஸ்தாப மூன்று வகுப்புகளிலும் சேர்க்கப்பட்ட ஏழைக் குழந்தைகள் சம்பந்தமாக உயர்தர ஆரம்பப் பள்ளிகளின் மானேஜ்மெண்டுகளுக்கு சர்க்கார் தற்போது அளித்து வரும் நஷ்ட ஈடு விகிதம் வருமாறு:— 6வது வகுப்பில் ஒவ்வொரு மாணவருக்கும் 37 ந.பை., 7வது வகுப்பில் 44 ந.பை., 8வது வகுப்பில் 50 ந.பை.

6, 7, 8 மூன்றில் எந்த வகுப்பாக இருந்தாலும் சரி ஒவ்வொரு மாணவிக்கும் நஷ்டஈடு 12 ந.பை.

இவ்விகிதம் 1962 - 63 கல்வி ஆண்டு துவக்கத்திலிருந்து அதாவது 1962 ஜூனிலிருந்து அமுலுக்கு வந்துள்ளது. ஆனால் சம்பந்தப்பட்ட பள்ளி நிர்வாகத்தினருக்கு 1963 ஜூன் 18ந் தேதியிட்ட உத்திரவின் மூலம் பிரஸ்தாப விகிதம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அதிக தாராள விகிதத்தில் நஷ்ட ஈடு கிடைக்கும் என்று எதிர்பார்த்திருந்த நிர்வாகத்தினர் மிகக் குறைந்த விகிதத்தில் நஷ்ட ஈட்டைப் பின் தேதியிலிருந்து ஏற்றுக்கொள்ள வேண்டியதாயிற்று.

1955லிருந்து அமலில் இருந்ததும், 1962 ஜூன் வரை கிடைத்து வந்ததுமான நஷ்ட ஈடு அளவு வருமாறு:—மாணவராக இருந்தாலும் சரி மாணவியாக இருந்தாலும் சரி, சென்னை நகரில் 6வது வகுப்பில் ரூ.1–12, 7வது வகுப்பில் ரூ. 1-37; 8வது வகுப்பில் ரூ. 1–50; வெளியூர்களில் 6வது வகுபபில் 75ந.பை.; 7வது வகுப்பில் 88 ந.பை.; 8வது வகுப்பில் ரூ. 1.

சென்னை கல்வி விதிகளில் 73வது விதியில் குறிப்பிடப்பட்டுள்ள விகிதங்களில் அல்லது பள்ளி முன்பு விதித்த சம்பள கட்டண விகிதத்தில் எது குறைவாக உள்ளதோ அவ்விகிதத்தில் நஷ்ட ஈடு தரப்படவேண்டும் என்று சர்க்காரின் புது உத்திரவு கூறியது.

பெற்றோர்களிடமிருந்து நிர்வாகத்தினர் நன்கொடைகளை ஏற்றுக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் இத்தகைய நஷ்ட ஈட்டினால் ஏற்படுவதாகக் கூறப்பட்டது.

பள்ளி நிர்வாகிகளுக்கு அதிக சாதகமாக நஷ்டஈடு விகித உயர்வு விரைவில் ஏற்படலாம்.

## ஆசிரியர் மாணவர் விகிதாசாரம்

தற்போது உள்ள மாணவர்—ஆசிரியர் விதாசாரம், பள்ளியில் சேர்க்கப்பட்ட ஒவ்வொரு 40 மாணவருக்கும் ஒரு ஆசிரியர்; ஆஜரில் உள்ள ஒவ்வொரு 35 மாணவருக்கும் ஒரு ஆசிரியர்.

சமீபத்தில் பிறப்பிக்கப்பட்ட உத்திரவின்படி கிராமப் பகுதிகளில் இவ்விகிதாசாரத்தை நிர்ணயிக்கப் பஞ்சாயத்து யூனியன் அடிப்படையாக எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. நகரப் பகுதிகளில் பள்ளி அடிப்படையாக எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதனால் மிக மோசமான விளைவுகள் ஏற்பட்டுள்ளதாகப் புகார்கள் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன.

கிராமப் பகுதிகளில் சில பள்ளிகள் தேவையான குறைந்தபட்ச ஆசிரியர்களை நியமிக்க முடியாத நிலையில் உள்ளன. அதே பஞ்சாயத்து யூனியன் பகுதியில் வேறு சில பகுதிகளில் உள்ள பள்ளிகள் சிலவற்றில் அதிக ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றனர். அநேக பள்ளிகளில் ஒரே ஆசிரியர் இரண்டு அல்லது மூன்று வகுப்புகளை ஒரே சமயத்தில் கவனித்துக் கொள்ள வேண்டியுள்ளது.

நகரப் பகுதிப்பள்ளிகளிலும் இம்மாதிரி சங்கடங்கள் நிலவுகின்றன.

சென்னை நகரிலுள்ள அநேக பள்ளிகளில் ஒவ்வொரு வகுப்பிலும் 79 மாணவர்கள் வரை உள்ளனர்.

தற்போதைய வழக்கப்படி 80க்கு மேல் இருந்தால்தான் ஒரு வகுப்பை இரு பிரிவுகளாக ஆக்க முடியும் என்று ஒரு ஆசிரியர் தெரிவித்தார்.

ஒரு வகுப்பில் சுமார் 80 மாணவர்கள் இருந்தால் ஒரு ஆசிரியர் தமது மாணவர்களை எந்த அளவுக்குக் கவனித்துக்கொள்ள முடியும் என்று பெற்றோர்கள் ஆச்சரியப்படுகின்றனர்.

இந்த சங்கடத்தை சர்க்கார் தற்போது உணர்ந்து விட்டதாகத் தோன்றுகிறது.

ஒரு வகுப்பில் 52 மாணவர்களுக்கு அதிகமாக இருந்தால் வகுப்பை இரண்டாகப் பிரிப்பதற்கு ஏதுவாக மாணவர் – ஆசிரியர் வீதாசாரம் குறைக்கப்படலாம்.

கல்வி இலாகா டைரக்டரின் அறிக்கை கிடைத்த பின்னரே சர்க்கார் இறுதி முடிவுக்கு வரும் என்று தோன்றுகிறது.

---

## அறிவுச் சுடர்

நான் அடிமையாக இருக்கமாட்டேன். ஆகவே நான் எஜமானனாகவும் இருக்கமாட்டேன். இதுதான் ஜனநாயகக் கோட்பாட்டின் அடிப்படை. இந்த அடிப்படையிலிருந்து எது எந்த அளவுக்கு மாறுபடுகிறதோ அது அந்த அளவுக்கு ஜனநாயகம் ஆகாது.

**— ஆப்பிரகாம் லிங்கன்**

மனிதன் மட்டுமல்ல, எல்லா உயிர்களுமே தங்களுக்குக் கிடைப்பதைவிட அதிகமாகச் சிலவற்றைப் பெற்று வாழ ஆசைப்படுகின்றன. அந்த ஆசையிலிருந்துதான் உலக முன்னேற்றம் முழுவதுமே ஏற்பட்டிருக்கிறது

**— சாமுவேல் பட்லர்**

மனிதன் வேறு, மிருகம் வேறு என்பதைத் தெளிவாகப் பிரித்துக்காட்டும் அழகான எல்லைக்கோட்டிற்குத்தான் சிரிப்பு என்று பெயர். சிரிப்பு, மனிதன் தனிச் சொத்து.

**—இங்கர் சால்**

# அமைதிக்கு உழைத்த அருந்தலைவர்

"நாம் ஜனநாயகத்துக்காகப் போராடுவோம்; அதிகாரத்துக்குக் கட்டுப்படுபவர்களுக்குக் தங்கள் நாட்டு அரசாங்கத்தில் உரிமை உண்டு என்பதற்காகப் போராடுவோம்; சிறிய நாடுகளின் உரிமைகளுக்காகவும் சுதந்திரத்துக்காகவும் போராடுவோம்; எல்லா நாடுகளுக்கும் அமைதியையும் பாதுகாப்பையும் அளித்து இறுதியாக உலகம் முழுமையுமே சுதந்திரமாக விளங்க வகை செய்யும் சுதந்திர நாடுகள் மன்றத்தின் பொது நீதி ஆட்சி எங்கும் நிலவுவதற்காகப் போராடுவோம்"

—வுட்ரோ வில்ஸன்.

சர்வதேசச் சங்கம் என்ற பெயரைக் கேட்கும்போதெல்லாம் அமெரிக்கப் பெரியார் ஒருவரது பெயரும் நினைவுக்கு வரும். அவர் தாம் தாமஸ் வுட்ரோ வில்ஸன்; அச் சங்கம் உருவாக முன்னின்று உழைத்த மூதறிஞர்; அதற்காக அரும்பாடுபட்ட வீரர்; அதன் பொருட்டு 1919-ம் ஆண்டுக்கு உரிய நோபல் பரிசு பெற்ற தலைவர். அதற்கு முன் மூன்று ஆண்டுகளாக அப்பரிசு யாருக்கும் கொடுக்கப்படவில்லை வில்ஸன், சமாதான நோபல் பரிசு பெற்ற மூன்றாவது அமெரிக்கராவார்.

அமெரிக்காவில் வர்ஜீனியா மாநிலத்தில் ஸ்டான்டன் என்னும் ஊரில், ஸ்காட்லாந்து நாட்டினர் வழிவந்த பிரபல பிரஸ்பிட்டீரிய மதகுரு ஒருவர் மகனாய் 1856 டிசம்பர் 28-ம் தேதி பிறந்தார் தாமஸ் வுட்ரோ வில்ஸன். தாம் உண்டு, தம் படிப்பு உண்டு என அடக்கமாக வாழ்ந்து வளர்ந்தார். 23-வது வயதில் பட்டம் பெற்றார். படிப்போடும் அவருக்குப் பொதுப் பணி வாழ்க்கையிலும் ஆர்வம் மிகுதியாக இருந்தது. பட்டம் பெற்ற பின் அவர் சட்டம் பயில முயன்றார். ஆனால், அதை விட்டு, பட்டப் படிப்பில் தாம் கற்ற சரித்திரம், ஆட்சியியல் ஆகிய துறைகளிலேயே ஆராய்ச்சிப் படிப்பை மேற்கொண்டு ஜான் ஹாப்கின்ஸ் பல்கலைக் கழகத்தில் 1886-ல் பிஎச். டி. பட்டம் பெற்றார். அதன் பின் ஆசிரியர் வேலையில் அமர்ந்தார்.

இதற்குள், அவர் படித்த நியூ ஜெர்ஸி கல்லூரி பிரின்ஸ்டன் பல்கலைக்கழகமாயிற்று. 1890-ல் அவர் அங்குப் பேராசிரியரானார். 1902-ல் அவர் அப் பல்கலைக் கழகத்தின் தலைவரானார். நல்ல நிர்வாகி, சிறந்த விரிவுரையாளர், அரிய திறன்படைத்த எழுத்தாளர் என்று பெயர் பெற்றார். நியாயம் என்று பட்டதை நிலைகுலையாமல் ஆதரிக்கும் பெருந் துணிவு உடையவர்; கற்றறிந்த பெரியார்; அழ கொழுகப் பேசும் மதிநுட்பம் படைத்த

அறிஞர்—வில்ஸன் செல்வாக்கு பல்கலைக்கழகத்தின் வகுப்பறைகளிலும் வெளியிலும், விரிந்து பரவியதில் வியப்பில்லை.

பல்கலைக் கழகத்தில் எடுத்த நற் பெயர் அவர் அரசியலில் புக உறு துணையாயிற்று. 1910ல், 54-வது வயதில் அவர் நியூ ஜெர்ஸி மாநில கவர்னரானார். உடனே பலப்பல சீர்திருத்தங்களைப் புகுத்தினார். 1912-ல் ஜனநாயகக் கட்சியின் சார்பில் வில்ஸன் நாட்டின் ஜனாதிபதித் தேர்தலுக்கு நின்று வெற்றி பெற்றார்; அமெரிக்காவின் 28-வது ஜனாதிபதியானார்.

இதற்கிடையில், ஐரோப்பாவில் முதல் உலகப் போர் மும்முரமாயிற்று. அமெரிக்காவில் அரசியல் சூறாவளி ஒன்று வீசலாயிற்று. ஐரோப்பாவில் சண்டை என்றால் நமக்கென்ன—ஒதுங்கியிருப்பதே உத்தமம் என்றனர் ஒரு சாரார். இல்லை, தலையிட்டுச் சண்டையைத் தீர்ப்பதே தருமம் என்றனர் மறு சாரார். நாட்டு மக்கள் எல்லோருக்கும் ஜனாதிபதி பொது என்ற முறையில், வில்ஸன் இரு சாரார் கொள்கைகளுக்கும், இடையே நடு நிலைமையான ஒரு கொள்கையைக் கடைப் பிடிக்க முயன்றார். ஆனால், அதற்காக, சர்வதேசச் சட்டம் மீறப்படுவதை அவர் ஒருநாளும் பொறுத்ததில்லை; கடுமையாக ஆட்சேபித்தார். 1915 மே மாதம் 7-ம் தேதி லூஸிடானியா என்ற கப்பலை ஜெர்மானியர் மூழ்கடித்தனர்; அதில் இருந்த அமெரிக்கர் நூறு பேருக்குமேல் கடலில் மூழ்கி மாண்டனர். வில்ஸனது நடு நிலைமைக் கொள்கைக்கும் ஆபத்து வந்தது. இருந்தாலும், நடு நிலைமையே நல்லது என்று எண்ணினார் வில்ஸன்; சண்டை முடிந்து சமாதான உடன்படிக்கை எழுத வேண்டிய நாளில் அமெரிக்கா "நேர்மையாக உலக சமாதானத்துக்கு ஏதாவது நன்மை செய்ய" வேண்டுமானால் சண்டையில் இறங்காமல் நடு நிலைமை வகிப்பதே மேன்மையாகும் என்பது அவர் கருத்து.

இதற்குள் 1916—ல் தேர்தல் வந்தது. "சண்டையில் விழாமல் நம்மைக் காப்பாற்றியவருக்கே நமது வாக்கு" என்று மக்கள், வில்ஸனை மீண்டும் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுத்தார்கள். இம்முறை அவர் பொறுப்பு வரவர அதிகக் கடுமையாயிற்று. ஜெர்மானியர் கணைக்கு நான்கு அமெரிக்கக் கப்பல்கள் இலக்காகித் தாழ்ந்த பின்னும், நடு நிலைமை வகிப்பது சரியாகத் தோன்றவில்லை; அது நாட்டின் மானத்துக்கு இழுக்காகும் என்று கருதி, ஜனாதிபதி வில்ஸன் 1917 ஏப்ரல் 2-ம் தேதி மத்திய சட்டசபையில் தோன்றி, போர் தொடுக்குமாறு கேட்டார். போர் தொடுத்து இந்தப் போரை முடித்தால் தான், உலகத்தில் அமைதி நிலைக்க வழி உண்டு என்று எண்ண வேண்டியவரானார் வில்ஸன்.

ஆயினும், அவர் சமாதான இலட்சியம் மங்கவில்லை. உலகத்துக்கு அதை எடுத்துரைக்க அவர் ஓயவில்லை. 1918 ஜனவரியில் தமது புகழ்பெற்ற பதினான்கு அம்ச சமாதானத் திட்டத்தை அவர் தொகுத்துரைத்தார். பதினான்கு அம்சங்களில் கடைசி அம்சந்தான் அவர் மிக முக்கியமானதாகக் கருதியது. இந்தப் போரின் முடிவில் ஏற்படும் சமாதான உடன்படிக்கையை அமல் நடத்தவும், இனிமேல் போர் வாாமல் காக்கவும் வல்ல சர்வதேசச் சங்கம் ஒன்றே அந்தப் பதினான்காவது அம்சத்தில் குறிப்பிடப்பட்ட யோசனையாகும்.

1918–ல் போர் ஒரு வழியாய் முடிந்தது. பாரிஸில் சமாதான மாநாடு கூட ஏற்பாடாயிற்று. அதற்குத் தாமே நேரில் போவதென்று முடிவு செய்தார் அமெரிக்க ஜனாதிபதி வில்ஸன். ஐரோப்பாவில் மக்கள் அவரைக் கட்டுக்கடங்காத உற்சாகத்தோடு வரவேற்றனர். 1919 ஜனவரியில் மாநாடு ஆரம்பமாயிற்று. பிரிட்டனின் லாய்டு ஜார்ஜ், இத்தாலியின் ஓர்லாண்டோ, "பிரான்ஸின் புலி" கிளெமென்ஸோ இவர்களோடு வில்ஸன், [illegible]க் [illegible]மேலும் 2,[illegible]00 சதுர மாந[illegible] நிலப்பரப்பைச் [illegible]சினர்கள் [illegible]க்கிரமித்துக்கொண்டனர்; இவ்வாறு அபகரித்துக்கொண்ட பிரதேசங்களைத்தான் இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையேயுள்ள "பரம்பரையாகவும் பழக்கத்திலு

வேண்டாம் என்பது வில்ஸனின் உறுதியான கொள்கை. அதற்காக அவர் அல்லும் பகலும் வாதாடினார். முரண்பட்ட தேசிய நலன்களும் சூழ்ச்சியும் அவரை எதிர்த்தன. வெறும் வறட்டுக் கொள்கை பேசி என்ன பயன், உலக நடப்புதெரியவேண்டாமா, சாமர்த்தியம் வேண்டாமா என்றெல்லாம் வில்ஸனை ஏளனம் செய்தார்கள். அவருக்கு அங்கே ஆதரவு இல்லை. வாதாடிப் பார்த்தார். கடைசியில் அநேக விஷயங்களில் விட்டுக்கொடுக்க வேண்டியவரானார்; எனினும், சர்வதேசச் சங்கம் உருவாக வேண்டும் என்பதை உடன்படிக்கையில் சேர்த்து எழுதும்படி செய்து விட்டார்.

சமாதான உடன்படிக்கையை அமெரிக்க மத்திய சட்டசபையின் மேற் சபையாகிய செனட் ஏற்க வேண்டும். அதற்கு அங்கு மூன்றில் இரண்டு பங்கு வாக்குகள் ஆதரவு வேண்டும். சர்வதேசச் சங்கத்தில் சேர்ந்தால் அமெரிக்கா தன்னை யறியாமல் பல இடைஞ்சல்களில் மாட்டிக்கொள்ளும் என்று பலர் நினைத்த காலம் அது. எனவே, உடன்படிக்கையை செனட் ஒப்புக்கொள்ளவில்லை. அதில் திருத்[illegible] செய்யப்பட்டன. வருத்றெல்லாப் பகுதிகளும் ஜன நடமாட்டமற்ற பிரதேசங்களாகும்; வடக்கேயிருந்து தெற்கே வரையில் சோடா சமவெளிகள், அக்ஸாய் சின் அல்லது வெண்பாலைவனம், லிங்ஸிடாக், சாங்

சென்மோ பள்ளத்தாக்கில் பெரும்பகுதி ஆகியவை இதில் அடங்கியுள்ளன. மேலும் தெற்கே, 2 மைல் முதல் 16 மைல் வரையுள்ள குறுகிய நிலப் பகுதி இந்தியப் பிராந்தியத்துக்கு மேற்குப் புறத்தில் அமைந்துள்ளது.

## நில அமைப்பு

லடாக் அல்லது லா-ட்வாக்ஸ் என்பது மார்யுல் அல்லது சிவப்பு அல்லது தாழ்வு நிலம் என்றும் கூ-கன்-பா அல்லது பனி நிலம் என்றும் குறிப்பிடப் படுகிறது. மார்யோ-யுல் அல்லது மார்-யுல் என்ற பதத்தை ஹுவான் ஸ்வாங் மா-லா-யோ என்று எழுதியிருக்கிறார்.

லடாக் பிரதேசத்திலுள்ள மலைத் தொடர்களின் அமைப்பு மிகவும் குறிப்பிடத்தக்க தொரு அம்சமாகும்; அம்மலைத் தொடர்கள் ஒன்றுக்கொன்று இணைப்பான முறையில் தென் கிழக்கிலிருந்து வடமேற்கு நோக்கிச் செல்கின்றன. மேற்கிலிருந்து கிழக்கு வரையில் பிரதான இமய மலைத் தொடர் ஜஸ்கார் மலைத் தொடர், லடாக் மலைத்தொடர், முஸ்டாக் மலைத்தொடர், க்யூன் லுன் மலைத்தொடர் ஆகியவை ஒன்றன்பின் ஒன்றாக அமைந்துள்ளன.

இம்மலைத் தொடர்களின் பொதுவான போக்கை யொட்டி நதிகளின் போக்குகளும் அமைந்துள்ளன.

இப்பிராந்தியத்தில் முக்கியமான பள்ளத்தாக்கு சிந்து நதிப் பள்ளத்தாக்காகும். இப்பள்ளத் தாக்கு தென் கிழக்கிலிருந்து வட மேற்கு வரையில் இந்நாடு நெடுகிலும் வியாபித்திருக்கிறது. இப்பள்ளத்தாக்கில் பல சிறிய பள்ளத்தாக்குகள் அமைந்துள்ளன. சிந்து நதியின் உபநதிகளால் ஏற்பட்டுள்ள நதி தீரப் படுகைகள் இங்கே உள்ளன. இந்த உபநதிகளில் முக்கியமானவை ஸஸ்கார், ஷியோக் ஆகியவையாகும். நுப்ரா, சாங் சென்மோ, ஆகியவை-ஷியோக்கின் உபநதிகளாகும்.

லடாக் தாலூகாவின் கிழக்குப் பகுதியில் எண்ணற்ற ஏரிகள் அமைந்துள்ளன; ஏராளமான சிற்றோடைகளில் ஓடி வரும் தண்ணீர் இந்த ஏரிகளில் கலக்கின்றன. ஸரிக் ஜில்கனுங் ஏரியைத் தவிர மற்றெல்லா ஏரிகளும் உப்பு நீர் ஏரிகளே.

வடக்கேயிருந்து தெற்கே வரையில் அமைந்துள்ள ஏரிகளில் அப்டோகார் ஏரி, ஸரிகிஜில்கனுங் ஏரி, ஸ்பாங்கர் ஏரி, பாங்காங் ஏரி, ட்ஸோ மொராரி ஏரி ஆகியவை முக்கியமானவையாகும்.

இவற்றில் பாங்காங் ஏரிதான் மிகப் பெரியதாகும். இதன் நீளம் 40 மைல்; அகலம் 3 முதல் 4 மைல்; அதிகபட்ச ஆழம் 150 அடி.

அங்கிருந்து தெற்கே 5 மைல் தூரத்தில் அமைந்துள்ள ஸ்பாங்

கர் அல்லது உப்பு ஏரியின் நீளம் 16 மைல், அகலம் 3 மைல். இந்த ஏரியின் தண்ணீர் மிகவும் உவர்ப்பாக உள்ளது; ஆனால் ஒரு காலத்தில் இந்த ஏரியின் தண்ணீர் சுத்த நிலையில் இருந்திருக்கக்கூடும். என்பதற்கான ஆதாரங்கள் உள்ளன.

## அக்ஸாய் சன்

லிங்கிஸிடாங், அக்ஸாய் ஆகிய இரு பகுதிகளும் புல் பூண்டற்ற வனாந்திரப் பிரதேசங்களாகும். இவை கடல் மட்டத்திலிருந்து 17,000 அடி முதல் 18,000 அடி உயரத்தில் அமைந்துள்ளன. சமவெளிகள் ஏற்ற இறக்கமாகவும், குன்றுகள் தாழ்வாகவும் அமைந்துள்ளன. இப்பிராந்தியம் முழுவதும் ஒரு காலத்தில் ஒரு பெரிய ஏரியின் படுகையாக இருந்திருக்கும் என்பதற்கான ஆதாரங்கள் காணப்படுகின்றன: தற்போது இங்கே இரண்டு பெரிய ஏரிகள் உள்ளன (இவற்றில் ஒன்று அம்டோகார் ஏரி); ஜூலை மாதத்தில் ஒன்றில் 16 சதுரமைல் விஸ்தீரணத்துக்கும், மற்றொன்றில் 60 சதுர மைல் விஸ்தீரணத்துக்கும் தண்ணீர் நிரம்பியிருக்கும்; ஏப்ரல், மே மாதங்களில் பனி உருகி ஓடும்போது இன்னும் மிக அதிக அளவில் தண்ணீர் நிரம்பிவிடும். பகலில் சூறாவளிக்காற்று வீசும்; இரவில் அமைதி நிலவும்.

ஆனால் சாங் சென்மோ பள்ளத்தாக்கு இதற்கு முற்றிலும் மாறானதாகும். இலை யுதிர்காலத்தில் இது ஒரு மாபெரும் மேய்ச்சல் தரையாக விளங்குகிறது. லூருங், போப்ராங், டாக்ட்ஸே ஆகிய இந்தியக் கிராமங்களிலிருந்து ஆட்டு மந்தைகள் அங்கே மேய்ச்சலுக்காக ஓட்டிச் செல்லப்படுகின்றன.

## கடும் வெய்யில்–கடும் குளிர்

லடாக்கில் சீதோஷ்ண நிலை பொதுவாக, பகலில் உஷ்ணம் அதிகமாகவும், இரவில் குளிர் அதிகமாகவும் இருக்கிறது. காற்றின் அதீத வறட்சியினால் சகலமும் தீய்ந்து கிடக்கின்றன. மழை மிக மிகச் சொற்பம். ஆனால் அடிக்கடி உறைபனி பெய்கிறது. சில சமயங்களில் உறைபனி மிகக் கடுமையாக இருக்கும்.

ஆனால் லடாக்கின் சீதோஷ்ண நிலை மிருக வாழ்க்கைக்கு மிகவும் ஏற்றது. 17,000 அடி உயரம் வரையில் காட்டுக்கழுதைகள், கலைமான்கள், காட்டு எருமைகள், காட்டு ஆடுகள், இதர வகையான காட்டுச் செம்மறி ஆடுகள் ஆகியவை காணப்படுகின்றன. 17,000 அடியிலிருந்து 19,000 அடி உயரம் வரையில் காட்டு எலிகளும், ஆல்பைன் முயல்களும் இருக்கின்றன.

## மக்களின் வாழ்க்கை முறை

லடாக்கில் சம்பாக்கள், லடாக்கிகள், பால்டிகள், கில்கிட்டைச் சேர்ந்த டார்டுகள் ஆகிய இனத்தைச் சேர்ந்த மக்கள் வசிக்கின்றனர் ஒரு சில முஸ்லீம்கள் தவிர அவர்கள் எல்லாரும் பௌத்த

மதத்தையே தழுவி வருகின்றனர். அநேகமாய் ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு பௌத்த மடாலயத்தைக்காணலாம். பெண்கள் ஒன்றுக்கு மேற்பட்ட கணவன்மார்களை மணந்துகொள்ளும் வழக்கம் இங்கே சர்வசாதாரணமாக இருந்துவருகிறது.

அநேகமாய் எல்லாக் கிராமவாசிகளும் விவசாயத்தில் ஈடுபட்டிருக்கின்றனர்; அவர்களே கைவினைஞர்களாகவும் இருந்து வருகின்றனர். ஆண்களும் பெண்களும் தங்களுடைய வேலைகளில் ஈடுபட்டிருக்கும்போது பாட்டுக்கள்பாடித் தங்களை உற்சாகப் படுத்திக்கொள்ளுகின்றனர்.

அவர்களுடைய முக்கியமான உணவு பார்லி; பார்லியை வேக வைத்துப் பக்குவம்செய்துமோருடன் சேர்த்து அருந்துகின்றனர். சங் என்ற ஒரு வகை பீரை அவர்கள் ஏராளமாகக் குடிக்கின்றனர் ஆண்கள் தடித்த கம்பளி உடைகளை அணிகின்றனர். குவில்ட் குல்லாய்களை அல்லது செம்மறி ஆட்டுத் தோல் குல்லாய்களை அவர்கள் அணிந்துகொள்கின்றனர்; குல்லாயின் பின் புறத்திலிருந்து தொங்கும் பட்டை கழுத்தையும் காதுகளையும் மூடிக் கொள்கிறது. செம்மறி ஆட்டுத் தோலினல் செய்யப்பட்ட ஜோடுகளை அவர்கள் அணிகின்றனர்; சிறு சிறு வர்ணத் துணிகளைக் கொண்டு அந்த ஜோடுகளில் அலங்கார வேலைகள் செய்து கொள்கின்றனர்.

ஆண்கள் பெரும் நகைப் பித்தர்கள். அவர்களுடைய இடுப்புக் கச்சைகளில் கால் நடைப் பிரயாணத்துக்குத் தேவையான பல்வேறு பொருள்களையும் தொங்கவிட்டுக் கொள்கின்றனர்; பேனுக்கத்தி, சக்கிமுக்கிக் கல், தேயிலையும் புகையிலையும் வைத்துக் கொள்வதற்கான ஒரு பை, புகை குடிக்கும் இரும்புக் குழாய், ஒரு தேயிலை மத்து ஆகியவற்றை அவர்களுடைய இடுப்பில் காணலாம்.

மாதர்கள் கருப்புக் கம்பளி ஜாக்கெட்டுகளையும், கோடு போட்ட கம்பளிப் பாவாடைகளையும் முழங்கால் வரை அணிந்து கொள்கின்றனர். இதற்கெல்லாம் மேலாக செம்மறி ஆட்டுத் தோல் ஒன்றைப்போர்த்திக் கொள்கின்றனர். அத் தோலின் உட்பகுதியில் கம்பளி நூல் பின்னப்பட்டிருக்கிறது. அத் தோலைப் போர்த்தி, கழுத்தின் முன்புறத்தில் இரும்பு அல்லது பித்தளை ஊசியைக் குத்திக்கொள்கின்றனர். பெண்கள் தலையில் எதையும் அணிந்துகொள்வதில்லை; தலை மயிரைப் பின்னித் தொங்கப் போட்டுக்கொள்கின்றனர். தங்கள் தலையிலுள்ள வகிடின் மேல ஒரு நீண்ட துணிப் பட்டையை நெற்றியிலிருந்து பின்புறமாக இடுப்புவரை தொங்கவிட்டுக் கொள்கின்றனர்; அந்தத் துணிப் பட்டையில் நீல வர்ணக் கற்கள் வைக்கப்பட்டுள்ளன. அப்பட்டையின் நுனியில் குஞ்சங்கள் தொங்கும். அதை

வட்டமான கம்பளிப் பட்டைகளைக் காதுகளை மூடி அணிந்து கொள்கின்றனர்; அந்தப் பட்டை தலை மயிரில் சேர்த்துக் கட்டப்பட்டிருக்கும். அப்பட்டையின் விளிம்புக்கு ஆட்டுத்தோல் வைத்துத் தைக்கப்பட்டிருக்கும்; உட்புறத்தில் கம்பளி உள் துணியும், வெளிப்புறத்தில் ஜரிகை வேலைப்பாடும் செய்யப்பட்டிருக்கும்.

## லடாக்கின் வாழ்க்கைச் சக்கரம்

முதலில், லடாக் ஒரு சுதந்தர நாடாக இருந்து வந்தது; அப்போது மேற்குத் திபேத்தின் பெரும் பகுதி அதில் அடங்கியிருந்தது. ஆனால், பத்தாவது நூற்றாண்டின் இறுதியில் ஏற்பட்ட குடும்பப் பிரிவினை காரணமாக திபேத்தில் பெரும் பகுதிகளை லடாக் இழக்க வேண்டியதாயிற்று.

பதினேழாவது நூற்றாண்டு ஆரம்பத்தில் லடாக் வலிமை மிக்கதொரு அரசாக ஆயிற்று. 1664–ல் அது முகலாய சாம்ராஜ்யத்தின் ஒருபகுதியாக ஆயிற்று.

1681-க்கும் 1683–க்கும் இடையே மங்கோலியர்களும் திபேத்தியர்களும் கலந்த ஒரு படை லடாக்கின்மீது படையெடுத்தது. காஷ்மீர் முகலாய கவர்னரின் உதவியுடன் லடாக்கியர்கள் அப் படையெடுப்பாளர்களை விரட்டியடித்தார்கள்; 1684–ல் ஒரு உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டு எதிரிகளின் ஆக்கிரமிப்பு நிறுத்தப் பட்டது. 1834-க்கும் 1840–க்கும் இடையே, அப்போது சீக்கியர்களின் அதிகாரத்தின் கீழிருந்த ஜம்முவைச் சேர்ந்த குலாப் சிங் லடாக்கைக் கைப்பற்றினார். 1841–ல் குலாப் சிங்கின் ஒரு ஜெனரலான ஜோராவர் சிங் என்பவர் மேற்கு திபேத்தின்மீது படையெடுத்தார். அவர் தோற்கடிக்கப்பட்டுக் கொல்லப்பட்டார். ஆனால், திபேத்தியர்கள் சீனத் துருப்புக்களின் உதவியுடன் மேலே நோக்கி முன்னேறி வந்தபோது, அவர்கள் எதிர்த்துத் தாக்கப்பட்டு விரட்டியடிக்கப்பட்டனர். 1842–ல் காஷ்மீருக்கும் லடாக்குக்கும் இடையேயும், திபேத்துக்கும் சீனாவுக்குமிடையேயும் சமாதான உடன்படிக்கை யொன்று செய்து கொள்ளப்பட்டது.

1846–ல் காஷ்மீர் பிரிட்டிஷாரின் அதிகாரத்தின் கீழ் வந்தது. அப்போது பிரிட்டிஷார் லடாக்கிலிருந்து ஸ்பிதியையும் லாஹுலையும் தங்கள் வசமாக்கிக் கொண்டனர்.

## பாரம்பரிய எல்லை

லடாக்குக்கும் திபேத்துக்கும் லடாக்குக்கும ஸிங்கியாங்குக்கும் இடையேயுள்ள இந்திய எல்லை பாரம்பரியமானதும், பழக்கவழக்கத்தில் இருந்துவந்தது மானதுமாகும்; பல நூற்றாண்டு காலமாக இருதரப்பாரிடையேயும் இது நன்கு பிரபலமானதாகும்.

இரு தரப்பாராலும் இது ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாகும்.

நமது எல்லைக்கோடுவரையுள்ள பிரதேசங்கள் முழுவதிலும் இந்திய நிர்வாகம் முறையாக நடைபெற்று வந்திருக்கிறது; இந்திய சர்வேக்கள் நடத்தப்பட்டுள்ளன. நமது எல்லை சம்பந்தமான சகல விவரங்களும் மிகவும் துல்லியமாகவும் விளக்கமாகவும் நமக்குத் தெரியும்; எனவே நமது எல்லை பற்றிய விவரங்களை ஒவ்வொரு அம்சமாக நன்கு திட்டவட்டமாய் விளக்கிக் கூறமுடியும்.

இந்த எல்லைக்கோடு முக்கியமான நீர்ப்பிரிவுப் பகுதிகள் வழியாக, அதாவது அகில, காராதாக், கியூன் லுன் ஆகியவை வழியாகவும் இதர மலைத் தொடர்கள் வழியாகவும் செல்கிறது. மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி ஆரம்பித்தால், இந்த எல்லைக் கோடு அதில் அமைந்துள்ள அகில் மலைத்தொடர் வழியாகவும் ஷாகஸ்கம் வழியாகவும் சென்று காரகோரம் கணவாயை அடைகிறது. இந்தியாவில் சிந்துநதிப் பிரதேசத்தைச் சேர்ந்த ஷியோக்குக்கும் ஸிங்கியாங்கிலுள்ள யார்க்கண்டுக்கும் இடையேயுள்ள நீர்ப் பிரிவுப் பகுதி இதுதான். பிறகு அக்சாய் சின்னிலுள்ள ஏரிகளையும் யுருங் க்வாஷ் யும் யுருங் க்வாஷ் தீரத்தையும் பிரிக்கிற பிரதான கியூன் லுன் மலைகள் மீது இந்த எல்லைக்கோடு ஏறிச் செல்கிறது.

கியூன் லுன் மலைகளிலிருந்து இது இறங்கி, தென்மேற்கு முகமாகத் திரும்பி, திபேத்திலுள்ள ஏரிகளையும் இந்தியாவிலுள்ள அம்டோகார், ஸரிகார் ஜில்கஜுங் ஏரி தீரங்களையும் பிரிக்கிற நீர்ப் பிரிவுப் பகுதி வழியாகக் கடந்துசென்று லனக் கணவாயை அடைகிறது.

லனக் கணவாயின் தெற்கே இந்த எல்லைக்கோடு, திபேத்தில் தியாப் ட்ஸோவில் கலக்கிற நீரோடைகளையும், இந்தியாவில் சாங் சென்மோ, சுமே சார் ஆகியவற்றையும் பிரிக்கிற நீர்ப் பிரிவுப்பகுதி வழியாகச் செல்கிறது.

பிறகு இது பாங்காங் ஏரியில் கிழக்குப் பகுதியின் மேற்குக் கோடி வழியாகச் சென்று, ஸ்பாங்கர் ஏரியின் கிழக்குப் பகுதியின் குறுக்கே பாய்ந்து, சிந்து நதியின் வடக்கு நீர்ப் பிரிவுப்பகுதிகள் வழியாகச் செல்கிறது. பிறகு டாம்சோக்குக்குத் தென் கிழக்கே சுமார் 5 மைல் தூரத்தில் சிந்து நதியைக் கடந்து, ஹன்லே நதியையும் சிந்து நதியின் உபநதிகளையும் பிரிக்கிற நீர்ப்பிரிவுப் பகுதி வழியாகச் சென்று, மேற்கு முகமாகத் திரும்பி அக்ஷரேகை 82′ 33″ வடக்கிலும் அக்ஷரேகை 78′ 2○″ கிழக்கிலும் லடாக், பஞ்சாப், திபேத் ஆகியவற்றின் முக்கூட்டு ஸ்தலமாக அமைந்துள்ள கியா சிகரத்தை அடைகிறது.

—நவ இந்தியா

# பள்ளிப் பிள்ளைகளுடைய போஷாக்கு

(காப்டன் சேஷாத்திரிநாதன்)

வளரும் பள்ளிப்பிள்ளைகளுக்குத்தக்க போஷாக்கு கிடைக்கிறதா என்னும் பிரச்சினையைச் சற்று ஆராய்வோம்.

அனேகம் விஷயங்களில் பிற நாடுகளோடு ஒப்பிட்டுப் பார்த்து, நம் நாட்டைப் பின்தங்கிய நாடென்று கருதுகிறோம். ஆனால் வேறு விஷயங்களில் பிற நாடுகளைக் காட்டிலும் முன்னேற்றமடைந்த நாடு நம் நாடு என்பதையும் உணரவேண்டும். ஆகவே எல்லாக் காரியங்களிலும் மேற்கத்திய நாடுகளுடைய போக்கை மாதிரியாக வைத்துக் கொண்டு, அடிமை மனப்பான்மையுடன், நமது பழக்கங்களைத் திருத்த முயல்வது நமது சுய மரியாதைக்கு எதிரான செயலாகும். சென்ற இருநூறு ஆண்டுகளாக நம்மைப் பற்றிக்கொண்ட மனப்பான்மை நம்மை இன்னும் விட்டபாடில்லை. பள்ளிப்பிள்ளைகளுடைய நேரத்தை வகுத்திருப்பதும் இத்தகைய மனப்பான்மையின் குறியேயாகும்.

உச்சிக்காலச் சாப்பாடு பள்ளிப் பிள்ளைகளுக்குக் கொடுக்க வேண்டும் என்றொரு முயற்சி ஏற்பட்டுள்ளது. இந்த ஏற்பாடு நாம் சுயமாக வகுத்ததல்ல. மேற்கத்திய நாடுகளில் இதைச் செய்து வருகின்றனர்; அது போலவே,நாமும் செய்ய வேண்டுமென்னும் மனப்பான்மையே இதற்குக் காரணம். இதன் அவசியம் நமக்குத் தோன்ற வேண்டியதன் காரணம் நமது பள்ளிப் படிப்பின் நேரம் வகுத்தலாகும். ஆதியில் ஆங்கிலேயர்களுடைய சௌகரியத்திற்காகவே இந்த நேரம் வகுக்கப்பெற்றது. நமது நாட்டின் சீதோஷ்ண நிலையை யோசிக்கும்போது, காலை பத்து மணிக்குப் பள்ளி நேரம் ஆரம்பிப்பது உசிதமல்லவென்றே சொல்ல வேண்டும்.

நமது உணவுப் பழக்கங்கள் ஒவ்வொரு வகுப்பினரிடையேயும் எவ்வளவோ வேற்றுமைப் பட்டிருக்கின்றன. ஒரே மாதிரியான உணவைக் கட்டாயப் படுத்தி, உச்சிக்கால உணவாகப் பள்ளிப்பிள்ளைகளுக்குக் கொடுப்பது அவர்களுடைய போஷாக்கையே குலைக்கக் கூடும். சென்னையில் பிள்ளைகளுக்குச் சாம்பார்ச் சாதம், தயிர் சாதம் என்று வினியோகமாகிறதாம். சாதம் நன்றாக வேக வேண்டும். மொத்தமாகச் செய்யும் போது, அரிசி நல்ல பதம் பெறுமா என்று சந்தேகிக்க நேருகிறது. லாரியில் கொணர்ந்து வினியோகஞ் செய்யும் பொழுது, ஈயும், தூசும் வந்து சேராதபடி பந்தோபஸ்தாகக் காக்கப்பட வேண்டும். இல்லாவிடில், குடல் தொத்து

நோய்கள் எளிதில் பிள்ளைகளைப் பற்றிக்கொள்ளக் கூடும்.

மேலும், பள்ளிப்பிள்ளைகளுடைய போஷாக்கு உத்தமமான நிலையடையாமலிருக்கக் காரணங்கள் வேறு உள்ளன. பள்ளிப் படிப்பில் பகுத்தறிவு, ஒழுக்கம், பண்பு, ஒற்றுமை, அன்பு ஆகியவற்றை வளர்க்கும்படியான அறிவை ஊட்டுவதற்கு இடம் பெறாமல், விஷயக் குறிப்புகளை உருவேற்றச் செய்கிறோம். இது ஒரு முக்கிய காரணம்.

பள்ளிக்கூடம் கூடும் நேரம் காலையில் சுமார் பத்து மணிக்குத் தொடங்குவதால், படிப்புப பயிலும் காலம் கடுமையான வெப்பம் வீசும் காலமாயிருக்கும். இந்தச் சமயத்தில் பிள்ளைகளைப் பள்ளியில் அடைத்துப் பாடம் கற்றுக் கொடுப்பதென்றால், பாடம் மூளையில் ஏறவே ஏறாது. மத்தியில் ஒரு மணி நேரம் ஓய்வு தவிர, ஐந்து மணி நேரம் பாடங்களைப் புகட்டுகிறோம். இந்த ஓய்வு நேரத்தில்தான் உண்மையான பசி பிள்ளைகளுக்குத் தோன்றும். பிள்ளைகள் வீட்டிலிருந்து கொண்டு வரும் சாப்பாடு சிறு டிப்பன் பாக்ஸ் அளவுதான். ஆகவே சாயங்காலம் வீட்டுக்குச் செல்லும்போது களைப்புடன் செல்வார்கள். தினசரி முக்கியமான சாப்பாடு காலையில் ஒன்பது மணிக்குள்ளாக முடிந்துவிட வேண்டி வருகிறது. இயல்பாக இச் சமயத்தில் சிற்றுண்டி ஏதாவது சாப்பிடுவதற்குத்தான் பசி ஏற்படும். இந்த ஒன்பது மணிக்குள்ளாகஸ்நானம் செய்ய வேண்டும், பாடங்களைப் படித்தாக வேண்டும், ஆடை தரித்துத் தலை வாரிக் கொள்ளவும் நேரம் வேண்டும். தாய்க்கு இவ்வேலைகளிலும் கவனஞ் செலுத்தி, பிள்ளைகளுக்குச் சோறும் ஊட்டியனுப்ப வேண்டும்.

தினமும் இது ஒரு கெடுபிடி நேரமாகவே இருக்கும். பிள்ளைகளுக்குக்கோ மனமெல்லாம் படிப்பில்தான் இருக்கும். தாய்க்கு எவ் வகையிலும் உதவிக்கொள்ள நேரம் அகப்படாது. இதனால் தாய்க்கும் பிள்ளைகளுக்கும் சச்சரவு தான். பிள்ளைகள் அவசர அவசரமாகச் சாப்பிட்டு, வயிறு குலுங்கப் பள்ளிக்கு ஓடிச் செல்வார்கள். இத்தகைய கெடுபிடி இருக்க, எப்படிச் சோறு ஜீரணமாகும்? சிறு பிள்ளைகள் அநேகம் உண்டதுமே, மலங் கழிக்கக் கூடும். இதற்கு நேரம் கிடையாமல் அடக்கிக்கொண்டே பள்ளிக்கு ஓடி வந்து விடுவார்கள்; உடனே பாடமும் தொடங்கிவிடும்.

"வயிறு நிறைந்த புத்தி" என்று ஹாஸ்யமாய்ச் சொல்வதுண்டு. வயிறு நிறைந்ததால் நமக்குச் சற்று உறங்கத் தான் தோன்றும். "உண்ட மயக்கம் தொண்டர்களுக்கும் உண்டு" என்பது முதுமொழியாகும். முதல் மணிநேரம் படிப்புச் சொல்லிக்கொடுக்கும் உபாத்தியாயருக்கும் தூக்கம் தான்; பிள்ளைகளும்

பெரும்பாலோர் வகுப்பில் தூங்கி வழிவார்கள்!

உடலும் உள்ளமும் முழுத் திறமையுடன் வேலை செய்யத் தகுதியான நேரம் காலையில் எட்டு மணியிலிருந்து பதினொன்று வரையாகும். அதி காலையில் சிற்றுண்டி தயாரிப்பது தாய்க்குக் கஷ்டமில்லை. அதைச் சாப்பிட்டு பிள்ளை பள்ளிக்கு வந்தால், சுறுசுறுப்பாய்ப் பாடங் கற்றுக்கொள்ள முடியும். இந்த மூன்று மணி நேரத்தில் கற்றுக் கொள்வது, இப்பொழுது நடை பெறும் முறைப்படி பத்து மணி முதல் நான்கு வரை கற்றுக்கொள் வதைக் காட்டிலும் அதிக கருத் துடையதாகும் என்பது திண்ணம்.

உச்சிக் காலத்து வெயிலின் கடுமையில் பிள்ளை வீட்டிலே கழிக்கலாம். முக்கியமான சாப் பாட்டை முடித்துக்கொண்டு ஓய் வெடுத்துக் கொள்ளலாம். பிறகு பெற்றோருக்கு உதவிக்கொள்ள லாம். பிள்ளைகள் பள்ளிக்குச் சென்றிருக்கும்நேரத்தில்அமைதி யுடன் தாய் சமையல் செய்யலாம்; பிள்ளைகள் வந்த பிறகு அவர் களுக்கு ருசியாய் உணவு அன் புடன் ஊட்டலாம்.

பெற்றோரிடமிருந்து வீட்டு விஷயங்கள் எவ்வளவோ கற்றுக் கொள்ளலாம்; இவ் வகை யறிவு வாழ்க்கையை வெற்றிகரமாயும் சிக்கனமாயும் நடத்த உதவிக் கொள்ளும். குடும்பத்தில் அன் பும் ஆதரவும் பாராட்டி, அன்பும் ஆதரவும் பெற்று, சமுதாயத்தில் இத்தகைய நற்குணங்கள் கையா ளப்படும்; தியாக உணர்ச்சி எழு தற்குக் குடும்பமே தக்க வசதி யாகும்.

இக்காலத்துப் பள்ளிகளில் சமய விஷயமாகப் பாடங்கள் கற்றுக் கொடுப்பது நாகரிகக் குறைவாக எண்ணப்படுகிறது. அரசியல் முறை சமயப் பற்றில் லாததாயிருக்கிறது. பொதுப் பள்ளிகளில் சமய வுணர்ச்சியை யெழுப்ப வசதியில்லாமற் போகி றது. சமய வுணர்ச்சியும் ஒழுக்க முறைகளும் பெற்றோரிட மிருந் தே பிள்ளைகளுக்கு ஏற்பட வேண்டும். பிள்ளைகள் அதிக நேரம் பெற்றோரிடம் அமைதி யாகப் பழகி, அவர்கட்கு உதவிக் கொண்டுமிருந்தால், இதற்கு வசதி அகப்படும்.

தச்சர்கள், கொல்லர்கள், நெசவாளர்கள், சிறு வியாபாரி கள், இன்னும் பல தொழில் களைச் செய்து பிழைப்பவர்கள் ஆகியோருடைய பிள்ளைகள் எவ் வளவோ வற்புறுத்தியும், பள்ளிக் குச் சென்று படிக்க அனுப்பப் படுவதில்லை. இப் பெற்றோர் அவர்களுடைய பிள்ளைகளை அவ ரவர்களுடைய தொழிலில் சிறு வயதிலிருந்தே சேர்த்துக் கொண்டு விடுகின்றனர்.

இப் புதிய பள்ளி நேரம் அமு லுக்கு வந்தால், பெற்றோர் அவர் களுடைய பிள்ளைகளைக் காலையில் பள்ளிக்கு அனுப்பி, சாயங்

(44—ம் பக்கம் பார்க்க)

# டெலிவிஷன் கசந்து போச்சு!
# புத்தகங்கள் படிக்கலாச்சு!

அமெரிக்காவில் இப்பொழுது ஏராளமான புத்தகங்கள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன. அது பதிப்பாளர்களுக்கும் படிப்பவர்களுக்கும் மகிழ்ச்சியூட்டுவதாகும்.

புத்தகங்கள் ஏராளமாக வெளிவரப் பல காரணங்கள் உண்டு. அமெரிக்காவில் மக்கள் தொகை கூடியுள்ளது. பள்ளிக்கூடங்களுக்குச் செல்லும் இளைஞர் தொகை மிகவும் பெருகியிருக்கிறது. பண்பாட்டு, கல்வி நிலைகள் உயர்ந்துள்ளன. கல்லூரிகளில் பயிலும் இளைஞர்கள் தொகை உயர்ந்துள்ளது.

அமெரிக்காவிலுள்ள முதியோர்கள் முன்போல நெடுநேரம் டெலிவிஷன் பார்த்துக் கொண்டிருப்பதில்லை; எனவே புத்தக விலை பெருகுகிறது என்று சிலர் கருதுகின்றனர். (டெலிவிஷன் கம்பனிகள் இக் கருத்தை ஏற்பதில்லை) புதிய விறபனை முறைகளையும், வினியோக நுட்பங்களையும் பதிப்பாளர்கள் கையாள்வதாலும் விற்பனை உயர்கிறது.

## படிப்பு உயர

மலிவுப் பதிப்பு (காகிதக் கட்டு) புத்தகங்கள் வெளியிடப்படுவது ஒரு முக்கியமான காரணம் புதிய பதிப்பாளர்கள் பலர் சென்ற மூன்று ஆண்டுகளாக மலிவுப்பதிப்புக்கள் வெளியிடுகின்றனர். சென்ற ஆண்டில் நாளொன்றுக்குக் கிட்டத்தட்ட 10 லட்சம் மலிவுப் பதிப்பு நூல்கள் விலையாகியுள்ளன. மலிவுப் பதிப்புக்களை மட்டும் விற்கின்ற கடைகளும் நாடு முழுவதும் தோன்றியுள்ளன. மருந்துக் கடைகள், பெரிய கடைகள் முதலியவற்றிலும் அவை விற்கப்படுகின்றன. நாளுக்கு நாள் பல புத்தகக் கடைகள் மலிப்பதிப்புகளை விற்க ஏற்பாடு செய்து கொண்டிருக்கின்றன.

## குழந்தை நூல்கள்

புத்தக வகைகளில் குழந்தைகளுக்குரிய புத்தகங்களே மிகுதி

---

(43-ம் பக்கத் தொடர்ச்சி)

காலம் சிறிது நேரமாவது தம்முடைய தொழிலில் பழக்கிக் கொள்வார்கள். ஆதாரப் பள்ளி முறைக்கு இது எவ்வளவோ உதவியாயிருக்கும்.

பள்ளி மாணவர்கள் கல்லூரிகளுக்குச் செல்லும் போது, ஒழுக்க முறைக்கு வசப்பட்டவர்களாவர். சமுதாயத்திற்கு வலுத்தரக்கூடிய தீரர்களுமாவர்.

(நல்வழி)

யாக வெளியிடப்படுகின்றன. "டாம் சாயர்" போன்ற பழங் காலப் புத்தகங்கள் விற்பனை ஆகின்றன. ஆனால், தகவல்கள் தரும் புத்தகங்களே அதிகமாக விலை ஆகின்றன. சென்ற ஆண்டில் மட்டும் அத்தகைய புத்தகங்களில் 60 லட்சம் பிரதிகள் விலையாகியுள்ளன.

பதிப்பகங்கள் சிலவற்றில் சில்லறை விற்பனை மிகவும் பெருகி விட்டது. ஆதலால் விரைவில் புத்தகங்களை விற்க, பதிப்பகங்கள் மின்னணு இயந்திரங்களைப் பயன்படுத்தலாயின.

கொலராடோவிலுள்ள சில்லறை வியாபாரி ஒருவர், நியூயார்க் பதிப்பகம் ஒன்றிற்கு 20 புத்தகங்கள் வேண்டுமென்று எழுதினார். சில நாட்கள் கழித்து, மோட்டார் வண்டி ஒன்று அவர் கடைமுன் வந்து நின்றது. புத்தகங்கள் அடைத்த 50 பெட்டிகளை அது இறக்கியது. வண்டி ஓட்டி வந்தவர் 11,000 டாலருக்கு கணக்கு கொடுத்தார். சில்லறை வியாபாரி பெரி வியப்படைந்தார். உடனே அவர் நியூயார்க் பதிப்பகத்தைத் தொலைபேசியில் கூப்பிட்டு, இதுபற்றிக் கேட்டார். பதிப்பகத்தார் இப்பிழை நேர்ந்தது குறித்து மிகவும் வருந்தினர். இதற்கெல்லாம் காரணம் மின்னணு இயந்திரத்தில் ஏற்பட்ட கோளாறு என்று அவர்கள் கூறினர். இத்தகைய வேடிக்கைகளும் ஏற்படக்கூடும்.

---

(48-ம் பக்கத் தொடர்ச்சி)

கப்பட்டுள்ளன. பூங்காவுக்கு வருகிறவர்களை வரவேற்க யானைகளும் இப்போது பழக்கப்படுகின்றன.

* * *

அமெரிக்காவிலுள்ள கலிபோர்னியாவில் இருந்து ஃபிராங் சேட்டர் ஒயிட்டும் அவருடைய மனைவி (வயது 28) லோயிசும் மோட்டார் சைக்கிளில் உலகப் பயணம் செய்கிறார்கள். லோயிஸ் நிறைக் கர்ப்பிணியாகக் கொழும்பு வந்து சேர்ந்தார்.

தம்பதிகள் இருவரும் தமிழ் நாட்டிற்கு வந்து சேரும்போது, தமிழ் நாட்டில் ஓர் இடத்தில் குழந்தை பிறக்கும் என்பது எதிர்பார்க்கப்படுகிறது.

"பிறக்கும் குழந்தை பெண்ணாக இருந்தால், ஆயிசா அல்லது சாந்தி என்று பெயர் வைப்போம். நாங்கள் பிரசவத்துக்குப் பின் இரண்டு மாதம் ஓய்வெடுத்து விட்டு மீண்டும் எங்கள் பயணத்தைத் தொடங்குவோம்" என்று திருமதி லோயிஸ் கூறினார்.

இக்குழந்தை பிறப்பது மாபெரும் உலக சாதனையாகும். தம்பதிகள் இதுவரை 16 நாடுகளில் 19 ஆயிரம் மைல்கள் மோட்டார் சைக்கிளிலேயே சுற்றியிருக்கின்றனர்.

—"நவ இந்தியா"

# என்றும் உயர்வே நினை

மனமாகிய நிலத்தில் விதைத்த அல்லது விழுந்து முளைத்த ஒவ்வொரு நினைப்பு வித்தும் சீக்கிரமோ அல்லது சிறிது தாமதித்தோ தனக்குரிய செயலாக மலர்ந்து, பின்னர் தனக்குரிய நிலையும் நிலைமையும் ஆகிய கனிகளைச் சொரிகின்றன. நல்ல நினைப்புகள் கற்பகக் கனிகளைத் தருகின்றன. தீய நினைப்புகள் காஞ்சிரங் காய்களை ஈகின்றன. நமது இன்ப துன்பங்களைத் தரும் சக்தி நம்மிடத்தில் தான் இருக்கிறது.

ஆன்மாவுக்கு எதன்மீது அதிகப் பிரியமோ, எதை அதிகமாக நேசிக்கின்றதோ, அதைப் பெறுகின்றது. அது தன் உயர்ந்த எண்ணங்களால் உன்னத நிலையை எய்துகின்றது. தாழ்ந்த எண்ணங்களால் தாழ்ந்த நிலைக்குத் தாழ்த்தப்படுகின்றது. மனிதன் தானே தனக்கு விலங்கிட்டுக் கொள்ளுகின்றான். பட்டுப்பூச்சி தன் உடலிலிருந்து உண்டாகும் வஸ்துவால் கூட்டைக் கட்டி, தன்னை அதற்குள் சிறை செய்துகொள்வது போன்று, மனிதனும் தன் எண்ணத்தாலும் செயலாலும் தன்னைப் பந்தப்படுத்திக் கொள்ளுகிறான். அவை தீயவையாயின், அவனைத் துன்புறுத்துகின்றன; நல்லவையாயின், அவனுக்கு நலத்தை அளிக்கின்றன. தான் விரும்புவதை மனிதன் பெறுவதற்கு அவனுடைய விருப்பங்கள் அவனது நினைப்புகளோடும் செயல்களோடும் பொருந்தியிருத்தல் வேண்டும்.

நல்ல நினைப்புகளும் செயல்களும் ஒரு காலத்திலும் கெட்ட பலன்களைக் கொடுக்க மாட்டா. அது போன்று, கெட்ட நினைப்புகளும் செயல்களும் ஒரு காலும் நல்ல பலன்களை அளிக்க மாட்டா. விரை ஒன்று போட, சுரை ஒன்று முளைக்குமோ?

மனிதன் தனது நினைப்புகளை மிகவும் ஜாக்கிரதையுடன் பேணிக் காத்து, அவைகளைத் தன் வசப்படுத்தி, தக்க வழியில் திருப்புவானாயின், அவனே தன் ஒழுக்கத்தை உண்டுபண்ணுபவன்; அவனே தன் தலைவிதியை நிர்ணயிப்பவன்.

ஒருவன் தன் நிலைமையைப் பற்றி வருந்துவதை ஒழித்து, தன்னையே தான் சிந்தித்தலையும் தவிர்த்து, தனது வாழ்க்கையை நடாத்தும் நியதியை ஆராய ஆரம்பிக்கும் பொழுது தான், அவன் மனித இயல்பை உடையவனாகின்றான். அந்த நியதிக்குத் தக்கபடி, அவன் தன் மனதை இணக்கிக்கொள்ளவேண்டும். உலகில் உன்னதமாக நிற்கும் சக்தி ஒழுங்கே அன்றி, ஒழுங்கீனம் அன்று. வாழ்க்கையின் ஜீவ நாடி நீதியே அன்றி, அநீதி அன்று. எனவே உலகம் சரியாக இருக்கிறது என்று காண்பதற்கு அவன் தன்னைத் திருத்திக்கொள்ள வேண்டும். தன்னைத் திருத்துங்கால், மற்றவர்களைப் பற்றித் தன் எண்ணங்களை எவ்விதம் மாற்றுகின்றானோ, அவ்விதமே மற்றவர்களும் தன்னிடம் மாறுதலுறக் காண்பான். **நல்வழி.**

# அதிசய அவியல்

எந்தச் செயலையுமே முதன் முதலில் செய்வது என்றால் சமூகம் அனுமதித்தது கிடையாது. மனித உடலினுள் என்ன இருக்கிறது. அவை எப்படி வேலை செய்கின்றன என்பதை அறிய ஒரு மருத்துவ நிபுணர்க்கு ஆவல். ஆனால் மனித உடலை அறுத்தால் அக்காலத்தில் அது கொடிய குற்றமாகக் கருதப்பட்டது. மதமும் எதிர்த்தது. இந்த நிபுணர்க்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. இறுதியில் ஒரு முடிவுக்கு வந்தார்.

நள்ளிரவில் இவர் தூக்குக் கிடங்குக்கு எவரும் தெரியாத முறையில் சென்றார். தூக்குக் கிடங்கு ஒரு குகை போல இருக்கும். மெதுவாக இதனுள் எட்டிப் பார்த்தார். ஒரு திருடனின் பிணம் தொங்கிக்கொண்டிருந்தது. இதை வெகு கஷ்டப்பட்டு அறுத்தெடுத்துத் தோளின் மேல் தூக்கிக் கொண்டு ஓட முற்பட்டார். பல மைல்கள் சென்று இந்தப் பிணத்தை அறுத்தார். இப்படி முதன்முதலில் ஒரு டாக்டர் பிணத்தைத் திருடி அறுத்துப் பார்க்கவேண்டியிருந்தது.

* * *

எழுத்து தோன்றுவதற்கு முன்பு மனித இனம் பல விசித்திரமான முறைகள் மூலம் தங்களுக்குள் செய்திகளை அறிவித்துக் கொண்டனர். தெற்கு ரஷ்யாவில் வாழ்ந்த சித்தினியன்கள் என்ற இனத்தினர் பெர்ஷியா அதிகாரிக்கு ஒரு கடிதம் அனுப்பினர். கடிதத்தில் எழுத்துக்கள் அடங்கியிருக்கவில்லை. இதில் ஒரு இறந்த பறவை, எலி, தவளை, 5 அம்புகள் இருந்தன. இதற்கு என்ன பொருள் என்று இன்னமும் தெரியவில்லை.

* * *

உலகப் புகழ்பெற்ற விஞ்ஞானி கலிலியோ இறந்தது கிறிஸ்துமஸ் தினம். இவர் இறந்த அதே நேரத்தில் தான் மற்றொரு பிரபல விஞ்ஞானி பிறந்தார். இவரின் பெயர் நியூட்டன்.

* * *

முற்காலத்தில் மனித அறிவுக்கு மக்களோ அரசாங்கமோ மதமோ மதிப்பு கொடுத்தது கிடையாது. மூடப் பழக்க வழக்கம், தவறான கருத்துக்களை மறுத்துப் புதிய கருத்துக்களைக் கூறியவர்களைக் கொன்று குவித்தது. இப்படிச் செய்யப்பட்டவர்களில் ஒருவர் ரசாயன சாஸ்திரத்தின் தந்தை அந்தோணி லாவோசியர். தற்போதுள்ள வயோதிகர் உதவிப் பணத் திட்டத்தை இவர் தான் முதலில் கூறியவர். டெசிமல் நாணய முறை, மெட்ரிக் எடை முறை

யைக் கண்டு பிடித்தவர். பிராண வாயுவுக்கு ஆக்ஸிஜன், ஜலவாயுவுக்கு ஹைட்ரஜன் என்ற பெயரைச் சூட்டியவரும் இவர்தான். இப்படிப்பட்டவர்க்கு மதத்துரோகக் குற்றம் சாட்டி நீதிமன்றம் மரண தண்டனை அளித்தது. ஒரே ஒரு பரிசோதனை முடியும் நிலையில் இருக்கிறது. இரண்டு வார அவகாசம் தந்து என்னைக் கொல்லுங்கள் என்று இவர் கோர்ட்டில் கேட்டாராம். ஆனால் இதுவும் மறுக்கப்பட்டு விட்டது.

* * *

1672—1725ல் ரஷ்யாவை ஆண்ட பீடர் தி கிரேட் மன்னன் ஐரோப்பாவிலுள்ள சகல நாடுகளுக்கும் மாறு வேஷத்தில் சென்று திரும்பினான். இவனுக்குத் தாடி வளர்ப்பவர்களைக் கண்டால் பிடிக்காது. எனவே தாடி வைத்திருந்தால் உடனே அவர்களுக்குப் பெருமளவு வரி விதித்தான்.

* * *

ஆப்பிரிக்காவில் உள்ள ஒரு இனத்தவர் முகம், கை கால்களைக் கழுவுவதிலும் தனி முறை இருக்கிறது. இவர்கள் பாத்திரத்திலுள்ள நீரை நேரடியாக ஊற்றிக் கழுவுவதில்லை. முதலில் வாய் நிறைய நீரை உட்கொண்டு பிறகு வாயிலிருந்து நீரைத் துப்பிக் கழுவுகின்றனர். நீரிலுள்ள அசுத்தம் தங்கள் வாயில் பட்டால் நீங்கிவிடும் என்ற நம்பிக்கை இவர்களுக்கு.

* * *

அமெரிக்காவில் ஒரு நீர்த் தடாகம் இருக்கிறது. இங்கு பொருத்தப்பட்டுள்ள மின்சார விளக்குகளுக்கு மின்சார சப்ளையே கிடையாது. இருந்தாலும் இவை அருமையாக எரிகின்றன. இதற்குத் தேவையான மின்சாரத்தை இதிலுள்ள ஒரு வகை மீன் சப்ளை செய்கிறது. இந்த மீனின் உடலிலிருந்து மின்சாரம் பாய்ந்து இந்த விளக்குகள் எரிகின்றனவாம்.

* * *

உத்திரப் பிரதேசம் ராஜ்யத்தில் கார்பெட் தேசியப் பூங்காவில் உள்ள புலிகள், தங்களைப் பார்க்க வருபவர்களை வரவேற்கப் பழக்கப்பட்டுள்ளன.

இரவில் சுற்றித் திரியும் பழக்கம் கொண்ட புலிகள் சாதாரணமாகப் பகலில் வெளியே வருவதில்லை. ஆனால் இந்தத் தேசியப் பூங்காவில் உள்ள பழக்கப்பட்ட புலிகளோ பகல் நேரத்தில் கண்ணில் தென்படாமல் ஏதோ ஒரு மூலையில் பதுங்கிக் கிடப்பதில்லை. பூங்காவுக்கு வருகிறவர்களை வரவேற்று அவர்களுக்குக் காட்சி கொடுக்கும் வகையில் இவை வெளியே வந்து 15 கெஜ தூரத்தில் நின்றபடி உற்று நோக்கிப் பிறகு திரும்பிச் செல்கின்றன.

செயற்கையான முறையில் இரையைக் கொடுப்பதன் மூலம் இந்தப் புலிகள் இவ்வாறு பழக்

(45–ம் பக்கம் பார்க்க)

# விவசாயத்தில் சில உண்மைகள்

உணவு உற்பத்தியைப் பெருக்க இரு வழிகள் உண்டு. விவசாயம் செய்யும் நிலப்பரப்பை அதிக மாக்குதல் ஒரு வழி ஆனால் அப்படி நிலப் பரப்பை அதிகப்படுத்துவது என்பது நினைத்தபடி யெல்லாம் செய்யக் கூடியதல்ல. நீர்ப்பாசன வசதி, மழை, மண்ணின் தன்மை, இடத்தின் தட்ப வெப்ப நிலை—இப்படிப் பலவற்றைப் பொருத்தே அதை அதிகப்படுத்தலாம் மழை குறைவான பிரதேசங்களிலும், சுக்கான் பாறை போன்ற இடங்களிலும் மண்வளமற்ற பகுதிகளிலும் விளை நிலப் பரப்பை அதிகப்படுத்துவதில் அதிகம் இலாபம் இல்லை. சிரமமும் அதிகம். ஆகவே நிலப் பரப்பைப் பெருக்கிக் கொண்டே போவதைவிட உள்ள நிலத்தில் நல்லபடி உழவு செய்து உரமிட்டு முறையாகப் பயிரிட்டு விளைச்சலைப் பெருக்குவது சிறந்த வழியென்பதை இன்றைய உலகம் ஒப்புக் கொண்டிருக்கிறது. இவற்றில் ஆழ உழுதால் விளைச்சல் அதிகம் காணும் என்பதும் இன்றைய ஆராய்ச்சிகளின் மூலம் கண்டறியப்பட்டிருக்கிறது. இவ்வுண்மைகளைப் பண்டைக் காலத்திலேயே நம் முன்னோர்கள் உணர்ந்து "அகல உழுவதிலும் ஆழ உழுதலே நன்று" என்று அழுத்தம் திருத்தமாகச் சொல்லி வைத்தார்கள். உழுதலே நன்று என்ற தேற்ற "ஏகாரம்" கொடுத்துக் கூறியுள்ளது இங்குக் கவனிக்கத் தக்கது. இதே கருத்தில் ஆழ உழுதலின் சிறப்பைக் கூறும் ஒரு சில இதர பழஞ் சொற்களையும் கீழே காண்க:—

*ஓடி ஓடி நூறு குழி உழுவதைப் பார்க்கிலும் அமர்ந்து ஆறு குழி உழுவது நன்று.*

*அதிர அடித்தால் உதிர விளையும்.*

*உழ அற உழுதால் விளைவற விளையும்.*

## ஏரினும் நன்றால் எரு இடுதல்

வேளாண்மைக்கு உழவு முதல் முக்கியமென்றாலும் எரு இடுதலும் அடுத்தபடி முக்கியமாகும். வளமற்ற நிலத்தில் உழுது விதைத்தால் சிறப்பான விளைச்சல் காணாது. மண்ணுக்கு வளமூட்ட நிலத்திற்கு எரு இடுதலின் முக்கியத்துவத்தை உணர்த்தும் பழஞ் சொற்கள் தென்னகத்தில் நூற்றுக் கணக்கில் உள்ளன. எப்படிப்பட்ட எருவை இட வேண்டும். எவ்வளவு இட வேண்டும். எவ்வாறு இட வேண்டும் என்றெல்லாம் கூட அந்தப் பழமொழிகள் உணர்த்துகின்றன. அவற்றில் நுணுக்கமான உண்மைகளைக் கொண்ட சில பழமொழிகளை மட்டும் இங்கே காண்போம் —

"எருக் குழையின்றி ஏர் பிடியாதே"

(விவசாயம் செய்யத் தொடங்குமுன் முதல் வேலையாக எருவைச் சேகரித்துக் கொள்ள வேண்டுமென்பது இதன் கருத்து)

"எருமணமில்லாத பயிரும் நறுமணமில்லாத மலரும்"

"நிலத்தில் எழுந்த பூண்டு நிலத்தில் மடிய வேண்டும்"

(களைகளையும் புல் பூண்டுகளையும் ஓர் முறை உழுது மடக்கி விட்டால் அது மண்ணுக்குள் படிந்து உரமாகும். ஆகவே அதை நினைவில் கொள்ளவேண்டுமென்பது இதன் கருத்து)

"ஆடு ஊடாடாத காடு விளையாது"

உரங்களிலெல்லாம் ஆட்டு உரம் மேலானது. ஆகவே ஆட்டு உரத்திற்கு இவ்வளவு உயர்வு கொடுத்துக் கூறப்பட்டுள்ளது.

## உடையவன் பாராப் பயிர் ஒரு முழங்கட்டை

உழுதல் உரமிடல் ஆகியவற்றுக்கு அடுத்தபடியாக, பயிர்ப் பாதுகாப்பு விவசாயத்தில் இன்றியமையாத நடவடிக்கையாகும். விவசாயி தனது வயலில் நேரடியான கருத்துச் செலுத்தி எப்படிப் பயிரைக் கண்ணிமைப்பது போல் காப்பாற்ற வேண்டுமென்பதை உணர்த்துகின்ற தமிழ்ப் பழஞ்சொற்களும் ஏராளம் உள்ளன. அந்தச் சொற்களை ஆராய்ந்தால் நம் முன்னோர்கள் பயிர்ப் பாதுகாப்பின் அதிமுக்கியத்தை எவ்வளவு நன்றாக உணர்ந்திருந்தார்கள் என்பது புலப்படும். அவற்றில் சிலவற்றைக் கீழே காண்போம்.

"பாராது கெட்டது பயிர், ஏறாது கெட்டது குதிரை"

"செல்லான் கிழவன் இருப்பின் நிலம் புலந்து இல்லாளின் ஊடிவிடும்"

"தான் பாராதது தரிசு"

"அடைத்தவன் காட்டைப் பார், மேய்த்தவன் மாட்டைப் பார்"

"ஏரினும் நன்றால் எருவிடுதல் கட்டபின் நீரினும் நன்றதன் காப்பு"

## ஆடிப்பட்டம் தேடி விதை

ஒவ்வொரு பயிருக்கும் ஒவ்வொரு பயிரிடும் பருவம் உண்டு. அவ்வப்பருவங்களும், சூழ்நிலைகளும் அறிந்து பயிரிட்டால்தான் விளைச்சல் நன்றாக இருக்கும். இந்த உண்மையைத் தமிழக விவசாயிகள் நன்கு உணர்ந்திருந்தார்கள். அதற்குச் சான்றாக இன்று காணப்படும் எண்ணற்ற பழமொழிகளில் ஒரு சிலவற்றை இங்கே காண்போம்.

"பருவத்தே பயிர் செய்"

"பாழில் போட்டாலும் பட்டத்தில் போடு"

"பட்டம் தப்பினால் நட்டம்"

"காலத்தில் பயிர் செய்தால் கடன் வாங்க வேண்டாம்"

"ஐப்பசியில் நெல் விதைத்தால் அவனுக்கும் நெல் ஆகாது"

"தைக் குருவை தரையை விட்டெழும்பாது"

"ஆவணியில் நெல் விதைத்தால் ஆனைக் கொம்பு தாளாய் விழும்"

"மாசிக் கரும்பும் மகரவாழையும்"

## எருது இளைத்தால் எல்லாம் இளைக்கும்

விவசாயிக்கு உறுதுணையாக விளங்குகின்ற கால்நடைச் செல்வத்தை அவன் தெய்வமாக மதிக்தான். தன் குடும்பத்தின் வாழ்வும் தாழ்வும் தன்னுடைய கால்நடைச் செல்வத்தைப் பொறுத்திருக்கிறதென்று பரிபூரணமாக உணர்ந்திருந்தான். கால்நடைச் செல்வ பராமரிப்புப் பற்றியும் அவற்றின் இலட்சணம் முதலானவை பற்றியும் தமிழ்நாட்டில் வழங்கும் பழஞ்சொற்கள் இந்த உண்மையை நன்கு அறிவுறுத்துகின்றன. அவற்றில் ஒரு சில வற்றை இங்கே காண்போம்.

"மேய்த்துத் தெளியாத மாடு தேய்த்துத் தெளியும்"

"ஆனமாட்டை விற்றவனும் அருகங்காட்டைத் தொட்டவனும் கெட்டான்"

"கறவைப் பசுவையும் கைக் குழந்தையையும் கண்ணாகப் போற்றவேணும்"

"ஆடு கொழுத்தால் இடையனுக்கு இலாபம்"

"வடலிவெட்டி ஆள்; எருமையைக்கட்டி ஆள்" (வடலி–பனை)

"மாட்டை நடையில் பார்; ஆட்டைக் கிடையில் பார்"

## நீர் ஏற நெல் ஏறும்

பயிர்களுக்குள் அதிகமாகத் தண்ணீரை விரும்புகின்ற பயிர் நெல். நீர் அதிகமானாலும் தாக்குப் பிடித்து அதிகப் பயன் தரக் கூடியது நெல் என்பதை இந்தச் சொல் காட்டுகிறது. பயிர்களின் தன்மை, பருவத்தின் தன்மை முதலான வெவ்வேறு பல அறிவியல் உண்மைகளைக் குறிக்கும் பழஞ்சொற்களும் தமிழில் ஏராளம் உள்ளன. அப்பழஞ்சொற்களை நோக்கினால் நம் முன்னோர்கள் விவசாயத் துறையில் சிறந்த அறிவு கொண்டிருந்தனர் என்பதை மறக்க முடியாது. அவர்கள் கண்டு கூறியவைகள் முக்காலத்தும் உண்மைகளாகும்.

"மடை ஏறப்பாய்ச்சினால் தடையற விளையும்"

(நெல் மகசூல் நீரூட்டத்தைப் பொறுத்ததென்பது)

"நட்டுக் காய்ந்தால் நாழி நெல் காணாது"

(நட்டதும் நீர் நிறையப் பாய வேண்டும் என்பது)

"கல்லைப் பிளந்து காணத்தை விதை, களர் உழுது கடலை விதை"

(இடத்திற்கு ஏற்ற பயிர் இன்னதென்பது)

"பாயாத கருங்காட்டிற்குப் பருத்தி விதைத்தால் பலன் தரும்"

(புஞ்சை கரிசல் மண்ணில் பருத்தி அதிக இலாபம் தரும் என்பது)

"வெட்டிக்கெட்டது தென்னை; வெட்டாமல் கெட்டது பனை"

(தாவர வளர்ச்சியை ஊக்கும் வகை சொல்வது)

"பாறை முறிக்க வேலமரம் நீரைத் தெளிக்க நெல்லி"

(பாறையைக் கருவேல் தகர்த்துவிடும் என்பதும் நீரை நெல்லி மாற்றி விடும் என்பதும்)

இப்படிப் பல்வேறு உண்மைகளையும் தெரிவிக்கும் விவசாயப் பழஞ் சொற்கள் தமிழில் ஏராளம் உள்ளன. அவைகள் செவி வழியாக உலவுவதால் ஒரு சில சொற்கள் பொருள் மாறுபட்டுக் காணப்படுகின்றன. அப்படிப் பிழைபட்டுக் காணும்பழஞ்சொற்களை ஒதுக்கிவிட்டு உயர்ந்த உண்மைகள் பொதிந்த சொற்களைப் பாதுகாப்பது இன்றைய தேவையாகும்.

(விவசாய செய்தித்துறைஇலாகா)

---

## வாழை நாரிலிருந்து துணி தயாரிக்க ஆராய்ச்சி

வாழை நாரிலிருந்து துணி தயாரிப்பது குறித்த ஆராய்ச்சியில் ஈடுபடுவதற்கான ஓர் ஆராய்ச்சி நிலையத்தை நிறுவ அகில இந்திய கைவினைப் பொருள் போர்டு முனைந்துவருவதாகத் தெரிகிறது.

மேற்படி வாழை நார் ஆராய்ச்சி நிலையம், ஆந்திராவிலோ தமிழ் நாட்டிலோ நிறுவப்படும்.

தென் கன்னடத்திலுள்ள முத்பித்ரி என்னுமிடத்தில் உள்ள மேற்படி போர்டின் ஆராய்ச்சி நிலையத்தில், அன்னாசிப் பழச் செடியின் நாரிலிருந்து வெற்றிகரமாகத் துணி செய்யப்பட்டுள்ளது. அன்னாசிப்பழ நாரிலிருந்து திரைச் சீலைகள், சட்டைத்துணி விரிப்புகள் போன்ற பல்வேறு பயன்படும் துணிகளை நெய்வதற்கான எந்திரங்கள் மேற்படி ஆராய்ச்சி நிலையத்தில் அறிமுகப் படுத்தப்பட்டுவருகின்றன.

பருத்தி நூலினாலான துணிகளில் படிவதைவிட மிக நேர்த்தியாக அன்னாசிப்பழ நாரிலும், அதிலிருந்து செய்யப்படும் துணியிலும் சாயம் படிவதாக மேற்படி நிலையம் மேற்கொண்ட சோதனைகளிலிருந்து தெரிவந்துள்ளது.

செடிகளிலிருந்து எடுக்கப்படும் சாயங்களைத் துணிகளில் தோய்ப்பது குறித்த ஆராய்ச்சியை மேற்படி போர்டு தற்போது அடையாற்றிலுள்ள கலாக்ஷேத்திரத்தில்நடத்திக்கொண்டிருக்கிறது.

(நேபன்)

# பெண்ணுலகில் வேதநாயகர்

[ சகோதரி லில்லிமேரி ]

ஒரு நாடு முன்னேற வேண்டுமானால் அந்த நாட்டிலே ஆன்றறிந்த கொள்கைச் சான்றோர் பலர் தோன்றவேண்டும். ஆனால் எக்காலத்திலும் இதனை எதிர்பார்க்க முடியாது. ஆயிரம் ஆண்டுகளுக்கு ஒருமுறை நாட்டிற்கு நலம் செய்வோரென ஒருவர் தோன்றலாம். மொழியைப் பேணுவதற்கெனச் சிலர் முன்வரலாம். தன் நாட்டிற்கும், வீட்டிற்கும், சமூகத்திற்கும் பெண்ணுலகிற்கும் பெருமை அளிக்கக் கூடிய பெரியார் ஒருவர் தோன்றினாரென்றால் அது தன்னேரில்லாத தனித்தமிழ் வேதநாயகம் என்று என் மனம் கூறுகிறது. இவர் பெண்ணுலகிற்குச் செய்த பேருபகாரத்தை நம் சிந்தனைக்கு விருந்தாக அளிக்கின்றேன்.

1826-ஆம் ஆண்டு அக்டோபர் 11-ஆம் நாள் குளத்தூரில் தோன்றிய வேதநாயகம் இன்று தமிழ்நாட்டில் தமிழ் மக்களின் உள்ளத்திலே மறையாது நின்று மிளிர்வதற்குக் காரணம் அவரது நூல்களே. பெண்ணுலகிற்குப் பெருநன்மை செய்யக் கருதி பெண்மதிமாலை என்னும் நூலை வெளியிட்டார். மக்களுக்கு நீதியை நிலைநாட்ட நீதிநூலை இயற்றி, அதிலும் பெண்மகளின் கற்பின் நிலை எத்தன்மையானதெனக் குறிப்பிடுகிறார். அவரது பேச்சிலும் மூச்சிலும் பெண்களின் முன்னேற்றமே முன்னின்றதென்றால் பொய்யாகா. உதாரணமாக நீதி நூலில் பெண்களின் கற்பைப்பற்றிச்சொல்லும்போது ஒரு கணவன் சுவரிலுள்ள அழகிய சித்திரம் ஒன்றைப் பார்க்க வரும்படியாகத் தன் மனைவியை அழைக்கின்றான். அவள் அது ஆண் சித்திரமாக இருந்தால் நான் அதைப் பார்க்கமாட்டேன். பெண் உருவமாக இருந்தால் நீர் அதைப் பார்க்கும்படி விடமாட்டேன் என்று கூறுவதாக எழுதியுள்ளார். இதுபோன்ற எத்தனையோ எடுத்துக்காட்டுகளை அவரது நூல்கள் நமக்குத் தந்து இன்பமூட்டும்.

“அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு” என்று இக்காலத்தவர்களும் இயம்பிவந்தனர். இதை மாற்றுவதற்காகப் பாரதியார் போன்ற பெரியோர்கள் அரும்பாடு பட்டார்கள். பல நூல்களையும் இயற்றினார்கள். வேதநாயகர் “பெண்மதிமாலை” என்னும் நூலை 1869-ஆம் ஆண்டு வெளியிட்டார். நல்ல எண்ணங்கள் இளமையிலேயே பெண்கள் மனதில் பதியவேண்டுமென்ற சீரிய நோக்குடன் பாடுபட்டார். பெண்மதி மாலையில் தாங்கள் பிறந்த மனையிலும்,

புகுந்த மனையிலும்சோம்பலின்றி வேலை செய்தல் வேண்டும் என்றும், பெண்ணே இல்லத்தரசி என்றும், மாதா, பிதா, குரு, தெய்வம், ஆகிய இவர்களிடம் அன்பு, அடக்கம், பணி உடையவர்களாய் விளங்கி நாள்தோறும் அறம் செய்யவேண்டுமென்றும் வேதநாயகர் விளம்புகிறார்.

“விலங்கொடு மக்க ளனையர் இலங்குநூல்
கற்றாரோ டேனை யவர்”

மனிதர்களுக்கும் விலங்குகளுக்கும் எவ்வளவு வேறுபாடோ அவ்வளவு வேறுபாடு உண்டு கற்றவர்க்கும் கல்லாதவர்க்கும் என்று பொய்யாமொழிப் புலவர் கூறுகின்றார். படித்தவன் கூடிய வரையில் தன்னுடைய படிப்புக்குத் தகுந்த அறிவும், நல்லொழுக்கமும், ஒருவிதமான பெருமையடைந்த வாழ்க்கை நடத்தத்தகுந்த திறமையும்உடையவனாயிருக்கிறான். படியாதவனோ அறிவின்றி அநேக கடினமான வேலைகளைச் செய்யவே பயன்படுகிறான். ஆடவர்களுக்குள் கற்றவர்க்கும் கல்லாதவர்க்கும் இவ்வளவு ஏற்றத் தாழ்வான மாறுபாடு இருக்கும்பொழுது, பெண்களுக்குமட்டும், படியாமலே எல்லா நற்குணங்களும் உண்டாகுமென்று நினைப்பது வீணே. கல்லாத மாதர்கள் அறிவுடையவர்களாகயிருப்பது எவ்வளவு வியப்பென்றால், முடவர்கள் ஆடவும், குருடர்கள் அந்த ஆட்டத்தைப் பார்த்து மகிழவும், ஊமைகள் பாடவும், செவிடர்கள் அந்தப் பாட்டைக் கேட்டு மகிழவும் கண்டால் எவ்வளவு வியப்போ அவ்வளவு வியப்புத்தான்.

மேற்கூறிய விஷயங்களிலிருந்து பெண்கல்வி எவ்வளவு முக்கியத்துவம் பெற்று விளங்குகின்றதெனத் தெற்றெனத் தோன்றுகின்றது. நற்குணங்களை மாதர்களுக்குக் கற்பியாமல் அவர்களைக் கணவன் வீட்டிற்கு அனுப்புவது நீந்தத் தெரியாதவனைக் கடலில் பிடித்துத் தள்ளுவது போலவும், போர்முகம் தெரியாதவனைப் போர்முகத்தில் விடுவது போலவும், குதிரைஏறத் தெரியாதவனைக் கடிவாளமில்லாத பொல்லாக் குதிரைமேல் ஏற்றித் தள்ளுவது போலவும் இருக்கும். எண்சாண் உடம்பிற்கு சிரசே பிரதானம் என்பது போல் மாதர்களுக்கு எல்லாக் குணங்களிலும் கற்பு நிறையே முதன்மையான அணிகலமாகயிருக்கின்றது. கற்புநிறை தவறாதவளுக்கு முக அழகில்லாமலிருந்தாலும் திருமணப் பூமாலை போல் அவள் யாவராலும் பெருமைப்படுத்தப் படுவாள். கற்புநிறை கெட்டவள் பேரழகியாகயிருந்தாலும் சுடு காட்டை நாடிச் செல்லும் மாலைபோல் யாவராலும் இகழப்படுவாள்.

நோயில்லாதவர்களுக்கு மருந்து கொடுப்பது போலும்,

நீர்ப் பெருக்கின் மேலே பெய்யும் மழையைப்போலும், சில செல்வர்களைக்கண்டால் விருந்து முதலிய பதினாறு ஓம்புதல்களைச் செய்வார்கள். வறியவர்களைக் கண்டால் தடி எடுத்துத் துரத்துகிறார்கள். இது பெருங் குற்றமாகிறது. இப்படிப்பட்ட குற்றங்களைப் பெண்கள் தாங்கள் படித்த அறிவைக் கொண்டும் தங்களுக்கு இயல்பாக அமைந்துள்ள இரக்கத்தைக் கொண்டும் இக் குற்றத்தை மாற்றி அமைக்கலாம். பாக்குக் கொடுத்த பாக்கியவதி, பூக்கொடுத்த புண்ணியவதி, சந்தனம் கொடுத்த சரஸ்வதி என்று பெண்களைத் திருமணத்தின்போது பலவாறு வாழ்த்துகின்றனர். அன்னமிட்ட வீட்டிற்குக் கன்னமிடுவதுபோல் தங்களுக்கு எல்லா நலன்களையும் கொண்டு வந்த மாதர்களை ஆடவர்கள் இகழ்ச்சி செய்வது எவ்வளவு முறைகேடு. செல்வம், அறிவு, கல்வி, ஆண்மை முதலியவைகளைப் பெண்ணாகப் பேசுவது வழக்கமாயிருப்பதுபோல, இந்துக்கள் திருமகள், காளி, கலைமகள், முதலானவைகளை, செல்வம், அறம், கல்வி, முதலியவைகளைத் தெய்வமென்று சொல்லுகின்றனர். எல்லா உயிர்களையும் தாய்போல் தாங்குகிற நிலமகளும் பெண்ணாயிருக்கின்றாள். நிலத்தைவிட்டு திக்குகளில் பறப்போமென்றாலோ, கங்கை, காவேரி, கோதாவரி முதலியவைகளும் பெண்ணாக இருக்கின்றனர். இவ்வாறிருக்க, ஆடவர்கள் தங்களுடைய வாழ்நாளெல்லாம் பெண்களை இழிவுபடுத்துவது தகுமா. உலகை உய்விக்க வந்த விண்ணெல்லாம் பறந்து திரிந்தாலும் கடைசியில் கூடுகளிலும் மரம் செடிகளிலும் வந்து சேர்ந்து ஆறுதல் அடைவதுபோல் ஆடவர் வெளியில் படுகிற தொல்லைகளெல்லாம் வீடுகளில் மனைவியால் விடுதலையாகி அவர்களால் இன்புற வேண்டியவர்களாதலால் மனைவிமார்களை அதற்கு உரியவர்களாயும் அறிவாளிகளாகவும் செய்யவேண்டியது படிப்பு. அறிவு கொடுக்காமலிருக்கவேண்டும் என்று சொல்லுவது சரியா. மாதர்களை அன்பாகப் போற்ற வேண்டியது ஆடவர்களுக்கு எப்படிக் கடமையோ அப்படியே மாதர்களுக்கு நல்லறிவு கற்பிக்க வேண்டியது ஆடவர்களுடைய முக்கியமான கடமையாகும்.

முதன்மையாக ஆடவர்கள் தாங்களும் நல்வழியில் நடந்து மாதர்களுக்கு நல்வழி காட்ட வேண்டும். குரு ஒரு குற்றம் செய்தால் மாணவர்கள் ஒன்பது குற்றம் செய்யத் துணிவதுபோல அகவையில் மூத்தவர்களும் படித்தவர்களுமான ஆடவர்கள் தீமைசெய்தால் ஒன்றும் தெரியாத சிறு அகவையிலுள்ள மாதர்களும் அந்தப்படியே நடக்கத் துணிவார்கள். அவருடைய உள்ளமெப்படித் தூயதோ அப்படியே அவருடைய உடலும் ஆடையும் எப்போதும் தூய்மையாயிருக்கும். ஆண்களுடைய மனமும் பெண்களுடைய மன

மும் ஒரே தன்மையாயிருப்பதால் பெண்களுக்கு மட்டும் கல்வியைப் போதியாவிட்டால் அவர்களுடைய உள்ளம் எப்படி நல்வழியில் நிலைகொள்ளும். "காசுக்கொரு குதிரைவேண்டும் காற்றைப்போல் பறக்கவேண்டுமென்பது போலவும், புல்லுண்ணாத பசு வேண்டும் பூரணமாகக் கறக்க வேண்டும்" என்பது போலவும் பெண்கள் படிக்காதவர்களாயிருக்கவேண்டும், நல்லவர்களாய் நடக்கவேண்டுமே என்றால் எப்படி நம் மனப்போக்கு நிறைவேறும். பெண்கள் படிப்பது முற்காலப் பழக்கவழக்கமன்று என்று சிலர் இழிந்த சொற்பொழிவு செய்கின்றனர். நாள்தோறும் சீர்திருத்தத்தையும் நாகரீகத்தையும் அடைகிற நாம் பெண்களுடைய பாவத்தைக் கட்டிக்கொள்வதற்காகமட்டும் அவர்கள் செயலில் பழைய வழக்கத்தை மேற்கொண்டு மடமைக் கடலில் அமிழ்த்துவது முறையா?

கல்வியின் பெருமை அளவிடப்படமுடியாததாயிருக்கின்றது. ஒளிக்கும், இருளிற்கும், நல்வினைக்கும் தீவினைக்கும், தூய்மைக்கும் அழுக்கிற்கும், எவ்வளவு மாறுபாடோ அவ்வளவு மாறுபாடு செல்வப் பொருளுக்கும் கல்விப் பொருளுக்கும் இருக்கின்றது. ஆகையால் பெண்ணிடத்தில் செல்வப் பொருள்மட்டும் இருந்தால் பற்றாது என்பதை மனதிலிருத்தி அவர்களுக்கு அறிவுச் செல்வத்தை வழங்க வேண்டும். பெண்கள் அறிவைப்பெற்று அவனியில் ஆண்மையுடன் வாழவேண்டுமென்று அழியாச் செல்வமாகிய நூல்களை எழுதித் தந்தார் நம் அண்ணல் வேதநாயகர்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் வள்ளுவர் பெண்களின் வாழ்க்கையைப்பற்றி வெகு சிறப்பான முறையில் வெளியிட்டுள்ளார். அதன் பின் இடைக் காலத்தில் தோன்றியவர்களில் ஒருவராவது அதைப்பற்றிச்சிறப்பான முறையில் கூறவில்லை. ஆனால் நம் வேதநாயகர் பத்தொன்பதாம் நூற்றாண்டில் தோன்றி பெண்களின் வாழ்க்கைச் சிறப்பைப்பற்றிப் பல நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார் என்பது அவருடைய பெருமைக்கும் புகழுக்கும் சான்றாகும். நம் வேதநாயகரின் நூலின் கருத்திற்கிசைந்தவாறு பாரதியாரும் பெண்களின் முன்னேற்றத்தைப் பற்றி இனிய பாடல்கள்மூலம் உலகிற்கு வெளியிட்டுள்ளார்.

தூங்கிக்கிடந்த பெண்கள் சமுதாயத்தைத் தட்டி எழுப்பியவர் வேதநாயகர். இவரது வீர முழக்கத்திற்கு முரசு கொட்டியவர் பாரதியார். முழக்கமும் முரசும் வீணாகாதபடி தமிழ் நாட்டிலே—ஏன் உலகிலேயே கொங்குராய கோத்திரமதனில் வந்துதித்த செந்தமிழ்த் தூரிசிலாகிய வேதநாயகரின் புகழ் பரவும்படியாக இறைவன் கருணைபாலிப்பாராக.

**(போதனா விஷயப்
பூங்கொத்து)**

# சென்னை மாநில எயிடெட் பள்ளி நிருவாகிகள் சங்கம்

---

11-7-63 மாலை சேலம் கிருஷ்ணனந்தா உயர்தர ஆரம்பப் பாடசாலை நிருவாகி திரு. நடராஜன் அவர்களும், சென்னை மாநிலச் சங்கக் காரியதரிசி திரு. A. R. சேஷாசலம் அவர்களும், சென்னை கல்வி இலாக்கா காரியதரிசி அவர்களைக் கீழ்க்கண்ட நான்கு விஷயங்களைப் பற்றித் தனித்தனியே மகஜர் சமர்ப்பித்துப் பேட்டி கண்டனர். அவைகளைக் காரியதரிசி அவர்கள் டைரக்டருடன் கலந்து ஆலோசித்துத் தனியாக உத்தரவு பிறப்பிப்பதாக வாக்குறுதி யளித்தார்.

1. உயர்தர ஆரம்பப் பாடசாலைகளின் 6, 7, 8 வகுப்புகளுக்கு ரூ. 1·12, 1·37, 1·50 வீதம் கஷ்ட ஈடு 1958 ஆம் ஆண்டு முதல்கொடுக்க வேண்டுமென்றும், பொதுத்துறை பாடசாலைகளுக்கு (Public Schools) M. E. R—ல் கண்டுள்ளபடி 6—வது வகுப்புக்கு 6 அணா, 7—வது வகுப்புக்கு 7 அணா, எட்டாம் வகுப்புக்கு 8 அணா என்று குறிப்பிட்டுள்ளது எயிடெட் பள்ளிகளுக்குச் சட்டபூர்வமாக சம்பந்தமில்லை என்பதை எடுத்துக்காட்டினர். இதைப் பரிசீலனை செய்வதாகக் காரியதரிசி ஒப்புக்கொண்டனர்.

(2) தற்போது தனியார் துறையிலுள்ள ஆரம்பப் பாடசாலைகளில் (Private Ele. Schools) G. O. எண் Ms. 2124, dated 29–11-1958—ல் கண்டுள்ளபடி 1 முதல் 5 வரையுள்ள ஆரம்பப் பள்ளிகளுக்கு 15 நிருவாக கிராண்டு கொடுப்பதாகக் கூறியும் நடை முறையில் 10% கூட பாடசாலைகளுக்குக் கல்வி அதிகாரிகளால் நிருவாக கிராண்டு கொடுக்கப்படாமைபால் பாடசாலை நிருவாகிகள் பெற்றோர் இடத்தில் நன்கொடை தெரிந்தோ தெரியாமலோ வாங்கவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறதென்றும், அது மட்டுமல்ல நன்கொடை வசூல் செய்ய முடியாத சில பாடசாலைகளில் ஆசிரியர்களே தங்கள் சம்பளத்திலிருந்து ஒரு பகுதியைப் போட்டுக்கொண்டு பாடசாலை நிருவாகத்தை நடத்தவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டு வருகிறதென்றும், இந்நிலை மேலும் நீடிக்குமானால் எயிடெட் பள்ளிகளின் திறன் மிகவும் பாதிக்கப்பட்டு விடுமென்றும் எடுத்துக் கூறினர்.

(3) ஆரம்பப் பாடசாலைகளில் சராசரி வருகை 1 : 35 என்று கணக்கிட்டு ஆசிரியர்கள் நியமிக்க வேண்டுமென்ற புதிய அரசாங்க முறையால் ஆரம்பப்பாடசாலைகள், அதிகம் பாதிக்கப்பட்டுத் திறமை குறைந்து வருகின்றதென்றும், குறைந்தது சராசரி வருகை 25 ஆகவாவது குறைக்கப்படவேண்டுமென்றும் அதற்கான உத்

தரவு விரைவில் அனுப்பப்பட வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டனர்.

(4) தனியார் துறை உயர்தர ஆரம்பப் பாடசாலைகளில் (Private Aided Hr. Ele. Schools) தலைமை யாசிரியர்களாக வேலை பார்க்கும் செகண்டரி கிரேட் ஆசிரியர்களுக்குத் தற்போது கொடுக்கப்படும் 60-வயது என்பதைக் குறைந்தது 62—ஆகவாவது கொடுக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொண்டனர்.

இவைகளை எல்லாம் கல்வி இலாக்கா காரியதரிசி அவர்கள் பொறுமையுடன் கேட்டு டைரக்டர் அவர்களுடன் கலந்து ஆலோசித்துத் தக்க உத்தரவுகளைப் பிறப்பிப்பதாகக் கூறினர்.

(குறிப்பு) இந்தப் பேட்டி கண்ட பிறகு டைரக்டர் அவர்கள் மேற்கண்ட விஷயங்களைப்பற்றி ஆலோசித்துக் கொண்டிருப்பதாகச் சமீபத்தில் பத்திரிகையில் செய்தி வெளியாகியுள்ளது. அதை இந்த மாதம் ஆரம்பக்கல்வியில் பிரசுரித்திருக்கின்றோம்.

இப்படிக்கு,
P. வீரராகவன், தலைவர்.

---

## டெலிபோன் மூலம் சமையல் குறிப்பு

லண்டன், ஜூலை 12—

"இன்றைக்கு என்ன சமையல் செய்வது?" என்று தெரியாமல் தடுமாறும் பிரிட்டிஷ் குடும்பத் தலைவிகளுக்கு டெலிபோன் மூலம் சமையல் குறிப்பு தெரிவிக்கும் ஏற்பாடு இப்போது பிரிட்டனில் லிவர் பூல் மான்செஸ்டர் ஆகிய நகரங்களுக்கும் விஸ்தரிக்கப்பட்டுள்ளது. சமையல்செய்யுமுன்னர் குடும்பத் தலைவிகள் குறிப்பிட்ட நம்பருக்கு டெலிபோன் செய்தால் போதும்; அறுசுவை உண்டி வகைகள் தெரிவிக்கப்படுகின்றன.

இந்த சர்வீசை பிரிட்டிஷ் அஞ்சலகத் துறையினர் நடத்துகின்றனர். பர்மிங்ஹாம் நகரில் இது இரண்டாண்டுகளுக்கு முன்னர் முதலில் அமுலுக்கு வந்தது. இந்நகரில் மட்டும் ஓராண்டில் 1 லட்சத்து 80 ஆயிரம் பேர் டெலிபோன் மூலம் சமையல் குறிப்பு அறிந்து வருகின்றனர். இந்த ஏற்பாட்டுக்கு இப்போது ஆதரவு பெருகிவருகிறது.

டெலிபோன் மூலம் மணி தெரிவித்தல், வானிலை விவரம் தெரிவித்தல் ஆகிய வசதிகளைப் பிரிட்டிஷ் அஞ்சலகத்துறை செய்து வருகிறது. இதோடு சமீப காலமாகச் சமையல் குறிப்பையும் தெரிவித்து வருகிறது. (நேயன்)

# எமது வெளியீடுகள்

**அஸோஸியேஷன் பப்ளிஷிங் ஹௌஸ்**
('ஆரம்பக் கல்வி' நிலையம்)
**94–95, புதுத்தெரு, மண்ணடி, சென்னை–1.**

*தபால் பெட்டி எண்* 1818. *டெலிபோன் எண்* **24544.**

**ஆரம்பப் பள்ளிகளுக்கு......**

* முதல், இரண்டாம் வகுப்புகளுக்கு அரசியலார் வெளியிடுகின்றனர்.

## திரு. வி. க. தமிழ் வாசகங்கள்

*ஆசிரியர் :*
**பி. வீரராகவன்**

| | புத்தகத்தின் விலை | | | கெஜட் பக்கம் | அங்கீகாரமான தேதி |
|---|---|---|---|---|---|
| மூன்றும் வகுப்பு | 0 | 8 | 0 | 3 | 28–5–'58 |
| நான்காம் வகுப்பு | 0 | 12 | 0 | 21 | 13–5–'59 |
| ஐந்தாம் வகுப்பு | 1 | 0 | 0 | 11 | 18–5–'60 |
| ஆறும் வகுப்பு | 1 | 4 | 0 | 25 | 10–5–'61 |

★

## வீரபாண்டியன் தமிழ் வாசகங்கள்

*ஆசிரியர் :*

**இராசாம்பாள் கோவிந்தராசன்,** M. A., L. T.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மூன்றும் வகுப்பு | 0 | 8 | 0 | 5 | 28–5–'58 |
| நான்காம் வகுப்பு | 0 | 12 | 0 | 21 | 13–5–'59 |
| ஐந்தாம் வகுப்பு | 1 | 0 | 0 | 13 | 18–5–'60 |

இலக்கணமும் மொழிப் பயிற்சியும்

**ஆசிரியர் :** புலவர் சொ. முருகேசனார்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஆறும் வகுப்பு | 0 | 12 | 0 | 4 | 16–5–'62 |

# சிறுவர் கணக்கு நூல்

(புதிய பாடத் திட்டப்படி)

ஆசிரியர்: பி. வீரராகவன்

| | புத்தகத்தின் விலை | கெஜட் பக்கம் | அங்கீகாரமான தேதி |
|---|---|---|---|
| இரண்டாம் வகுப்பு | 0 8 0 | ... | ... |
| மூன்றாம் வகுப்பு | 0 12 0 | 43 | 13–5–'59 |
| நான்காம் வகுப்பு | 0 14 0 | 25 | 13–5–'59 |
| ஐந்தாம் வகுப்பு | 1 4 0 | 39 | 15–5–'60 |

# புதுமுறை சங்கக் கணிதம்

ஆசிரியர்: A. C. பாலசுந்தரம், B. A., L. T.

| | | | |
|---|---|---|---|
| ஆறாம் வகுப்பு | 1 8 0 | 25 | 10–5–'61 |
| ஏழாம் வகுப்பு | 1 12 0 | 13 | 16–5–'62 |

# சிறுவர் சமூக நூல்

(புதிய பாடத் திட்டப்படி)

| | | | |
|---|---|---|---|
| இரண்டாம் வகுப்பு | 0 10 0 | ... | ... |
| மூன்றாம் வகுப்பு | 0 12 0 | ... | ... |

ஆசிரியர்: த. சே. உமாபதி M.A., L. T.

நான்காம் வகுப்பு

மாவட்டங்கள்

| | | | |
|---|---|---|---|
| சென்னை | 1 14 0 | 44 | 13–5–'59 |
| செங்கற்பட்டு | 1 14 0 | 44 | |
| வட ஆற்காடு | 1 14 0 | 44 | |
| தென் ஆற்காடு | 1 14 0 | 44 | |
| சேலம் | 1 14 0 | 44 | |
| கோயம்புத்தூர் | 1 14 0 | 44 | |
| நீலகிரி | 1 14 0 | 46 | |
| திருச்சிராப்பள்ளி | 1 14 0 | 46 | |
| தஞ்சாவூர் | 1 14 0 | 46 | |
| மதுரை | 1 14 0 | 22 | 16–5–'62 |
| இராமநாதபுரம் | 1 14 0 | | |
| திருநெல்வேலி | 1 14 0 | | |
| கன்னியாகுமரி | 1 14 0 | | |
| ஐந்தாம் வகுப்பு | 1 12 0 | 43 | 18–5–'60 |

# சமூக நூல்

ஆசிரியர் : துரை பழனிவேல், B.A., B.T.

| | புத்தகத்தின் விலை | | | கெஜட் பக்கம் | அங்கீகாரமான தேதி |
|---|---|---|---|---|---|
| ஆரும் வகுப்பு | 1 | 12 | 0 | 14 | 10–5–'61 |

ஆசிரியர் : த. சே. உமாபதி, M.A.,L.T.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஏழாம் வகுப்பு | 2 | 0 | 0 | 18 | 16–5–'62 |

★

# இயற்கைப் பாடமும் தோட்ட வேலையும்

ஆசிரியர் : பி. வீரராகவன்

| | புத்தகத்தின் விலை | | | கெஜட் பக்கம் | அங்கீகாரமான தேதி |
|---|---|---|---|---|---|
| இரண்டாம் வகுப்பு | 0 | 6 | 0 | ... | ... |
| மூன்றும் வகுப்பு | 0 | 7 | 0 | ... | ... |

ஆசிரியர் : M. விவேகானந்தா, B.Sc.,L.T., M.ED.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| நான்காம் வகுப்பு | 0 | 10 | 0 | 30 | 13–5–'59 |

★

# சிறுவர் ஆரம்ப விஞ்ஞானம்

ஆசிரியர் : K. லக்ஷ்மிநாராயணசாமி, B.A.,L.T.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஐந்தாம் வகுப்பு | 1 | 4 | 0 | 26 | 18–5 '60 |

★

# பொது விஞ்ஞானம்

ஆசிரியர் : K. லக்ஷ்மிநாராயணசாமி, B.A.,L.T.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஆரும் வகுப்பு | 1 | 8 | 0 | 30 | 10–5–'61 |

★

துணைப்பாடப் புத்தகங்கள்

# சிறுவர் அறிவுக் கதைகள்

ஆசிரியர் : புலவர் சொ. முருகேசனர்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஐந்தாம் வகுப்பு | 0 | 8 | 0 | 15 | 18–5–'60 |

## நீதிக் கதைகள்

ஆசிரியர்: வித்துவான் இ. மு. ஆறுமுக செட்டியார்

| | | | |
|---|---|---|---|
| ஐந்தாம் வகுப்பு | 0 8 0 | 17 | 18–5–'60 |

★

## அறிவுச் சுடர்

ஆசிரியர்: த. சே. உமாபதி, M.A.,L.T.

| | | | |
|---|---|---|---|
| ஆறும் வகுப்பு | 0 10 0 | 10 | 10–5–'61 |

## MOTHER INDIA SUPPLEMENTARY READER

(By Mrs. Lucy Arulraj)

| | | | |
|---|---|---|---|
| VI STANDARD | 0 8 0 | 13 | 10–5–'61 |

FOR HIGH SCHOOLS

உயர் நிலைப் பள்ளிகளுக்கு

## திரு. வி. க. செந்தமிழ்ச் செல்வம்

ஆசிரியர்: த. சே. உமாபதி, M.A.,L.T.

| | விலை | கெஜட் பக்கம் | அங்கீகாரமான தேதி |
|---|---|---|---|
| ஆறும் வகுப்பு | 1·25 | 25 | 10–5–'61 |
| எட்டாம் வகுப்பு | 1·75 | 21 | 13–5–'59 |

★

## புதுமுறை சங்கக் கணிதம்

ஆசிரியர்: A. C. பாலசுந்தரம், B.A.,L.T.,

| | | | |
|---|---|---|---|
| ஆறும் வகுப்பு | 1·50 | 28 | 10–5–'61 |
| ஏழாம் வகுப்பு | 1·75 | 13 | 16–5–'62 |

## சமூக நூல்

ஆசிரியர்: துரை பழனிவேல், M.A.,L.T.

| | | | |
|---|---|---|---|
| ஆறும் வகுப்பு | 1·75 | 14 | 10–5–'61 |

## சமூக நூல்

ஆசிரியர்: த. சே. உமாபதி, M.A.,L.T.

| | | | |
|---|---|---|---|
| ஏழாம் வகுப்பு | 2·00 | 18 | 16-5-'62 |
| எட்டாம் வகுப்பு | 2·50 | 35 | 16-5–'62 |

## பொது விஞ்ஞானம்

ஆசிரியர் : K. LAKSHMINARAYANASAMI, B.A.,L.T.

| | | | |
|---|---|---|---|
| ஆறாம் வகுப்பு | 1·50 | 30 | 10–5–'61 |

ஆசிரியர் : K. LAKSHMINARAYANASAMI, B.A.,L.T.

| | | | |
|---|---|---|---|
| பத்தாம் வகுப்பு | 2·50 | 35 | 10–5–'61 |

## இலக்கணமும் மொழிப் பயிற்சியும்

ஆசிரியர் : புலவர் சொ. முருகேசனர்

| | | | |
|---|---|---|---|
| ஆறாம் வகுப்பு | 75 | 4 | 16-5-'62 |

## மாணவர் இலக்கணம்

| | | | |
|---|---|---|---|
| எட்டாம் வகுப்பு | 0 14 0 | 4 | 29–7–'59 |

## இலக்கணம் கட்டுரை மொழிப் பயிற்சி

| | | | |
|---|---|---|---|
| ஒன்பதாம் வகுப்பு | 1 4 0 | 11 | 18–5–'60 |

த. சே. உமாபதி, M.A.,L.T.

| | | | |
|---|---|---|---|
| பத்தாம் வகுப்பு | 1 8 0 | 31 | 10–5–'61 |

## ENGLISH NON-DETAILED

By Mrs. Lucy Arulraj.

| | | | |
|---|---|---|---|
| Mother India Supplementary Reader VI Std. | 0 8 0 | 13 | 10–5–'61 |
| Mother „ „ „ III Form | 0 10 0 | 24 | 10–5–'61 |

## TAMIL NON-DETAILED

| | | | |
|---|---|---|---|
| அறிவுச் சுடர் (ஆறாம் வகுப்பு) | 0 10 0 | 10 | 10–5–'61 |
| நாடும் மக்களும் | 1 0 0 | 17 | 18–5–'60 |
| தொண்டை நாட்டு மன்னர் | 1 0 0 | 19 | 18–5–'60 |
| பூம்புகார் | 0 14 0 | R.C.No. 9 | 15-3-'61 |
| திரு. வி. க. | 0 14 0 | 23 | 13–5–'59 |

ஆசிரியர் : லீலா பார்த்தசாரதி, B.A.,B.T.

| | | | |
|---|---|---|---|
| கணிதம் கற்பிக்கும் முறை | 2·00 | 2 | 5–7–'61 |

## சமூக பாடப் பயிற்சி நூல்

ஆசிரியர் : ஆர். சேஷாத்திரி, B.A.,B.T.

| | |
|---|---|
| ஆறும் வகுப்பு | 0·87 ந. பை. |
| ஏழாம் வகுப்பு | 0·75 ந. பை. |
| எட்டாம் வகுப்பு | 1·25 ந. பை. |
| ஒன்பதாம் வகுப்பு | 1·25 ந. பை. |
| பத்தாம் வகுப்பு | 1·50 ந. பை. |

### FOR ELEMENTARY SCHOOLS

## சமூக பாடப் பயிற்சி நூல்

ஆசிரியர் : ஆர். சேஷாத்திரி, B.A.,B.T.
(இராமகிருஷ்ண மிஷன் உயர்நிலைப்பள்ளி, தியாகராய நகர்.)

நான்காம் வகுப்பு

**மாவட்டங்கள்**

| | |
|---|---|
| சென்னை | 0·75 ந. பை. |
| செங்கற்பட்டு | 0·75 ந. பை. |
| வட ஆற்காடு | 0·75 ந. பை. |
| தென் ஆற்காடு | 0·75 ந. பை. |
| சேலம் | 0·75 ந. பை. |
| கோயம்புத்தூர் | 0·75 ந. பை. |
| நீலகிரி | 0·75 ந. பை. |
| திருச்சிராப்பள்ளி | 0·75 ந. பை. |
| தஞ்சாவூர் | 0·75 ந. பை. |
| மதுரை | 0·75 ந. பை. |
| இராமநாதபுரம் | 0 75 ந. பை. |
| திருநெல்வேலி | 0·75 ந. பை. |
| கன்னியாகுமரி | 0·75 ந. பை. |
| ஐந்தாம் வகுப்பு | 0·94 ந. பை. |
| ஆறும் வகுப்பு | 0·87 ந. பை. |
| ஏழாம் வகுப்பு | 0·75 ந. பை. |

Edited Printed and Published by P. VEERARAGHAVAN,
at Venkatesan Press, 2/65, Broadway, Madras-1.

## பாடப் பயிற்சி திறவு கோல்
## (Key to Social Record)

4வது வகுப்பு முதல் 10வது வகுப்பு வரை சமூகப் பாடப் பயிற்சிகளுக்குத் திறவுகோல்கள் வெளியிடப்பட்டிருக்கின்றன. பாடசாலைகளில் பலவிதமான கம்பெனிகளின் சமூக பாடப்புத்தகங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. சில புத்தகங்களில் பயிற்சிப் புத்தகங்களில் கேட்கும் வினாக்களுக்கு விடை கிடைக்காமல் போகலாம். சில ஆசிரியர்களுக்கு உடனே விடை கொடுக்கச் சிரமம் ஏற்படலாம். வினா விடைகள், விளக்கங்கள் கொண்ட திறவுகோல் எல்லா வகுப்புகளுக்கும் வெளியிட்டிருக்கின்றோம். இது முக்கியமாக ஆசிரியர்கள் கையில் இருக்கவேண்டிய புத்தகமாகும். ஆதலால் திறவுகோல் இனமாக எமது பயிற்சி நூல் வைத்துள்ள பாடசாலைகளுக்கு அனுப்பிவருகிறோம். சிலர் பிள்ளைகளுக்கும் விடையை வாங்கிக்கொடுத்து வருகிறார்கள். அது சிறந்த முறையல்ல. எனினும் ஒன்றுக்கு மேற்பட்ட திறவுகோல் வேண்டுபவர்களுக்கு பிரதி எட்டணா (50 ந. பை.) விலையில் கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிறோம். பாடப்பயிற்சிகள் ஆர்டர் கொடுப்பவர்களுக்கு வகுப்பு வாரி ஒரு திறவுகோல் பயிற்சிகளோடு இனமாக அனுப்பி வைக்கப்படும்.

மானேஜர், "ஆரம்பக் கல்வி ஆபீஸ்",
அஸோஸியேஷன் பப்ளிஷிங் ஹௌஸ்
சென்னை-1.

---


வாழிய செந்தமிழ்! வாழ்க நற்றமிழர்!
வாழிய பாரத மணித்திரு நாடு!

★ படிப்பதற்கேற்ற எழில்மிகு ஏடுகள்!
★ நடிப்பதற்கேற்ற நற்றமிழ் நாடகங்கள்!!

இதோ
பைந்தமிழ் எழுத்தாளர்
திருவாளர் **தாமரைக் கண்ணன்** அவர்கள்
**தீட்டிய**

அழகிய நாடக நூல்கள்! பள்ளி நூல்நிலையங்களில் வைப்பதற்கேற்ற அருந்தமிழ்க் கருவூலங்கள்!

| | ரூ. | காசு |
|---|---|---|
| 1. வெண்ணிலா | 1 | 50 |

தன் அண்ணனைத் திருத்தியதுடன் நன்கொடையென்றால் நானூறுமைல் தூரம் ஓடும் தங்கைக்கும்

நல்வழிகாட்டியாக இருந்து கல்விக்கூடங்கள் கலைக்கூடங்களாக விளங்கப் பாடுபடும் ஓர் மாணுக்கியைப் பற்றிய நாடகம். கருத்தாழமும் நகைச் சுவையும் நிறைந்த சமுதாயப் படைப்பு!

## 2. மருது பாண்டியர் 2 00

வெள்ளையர் ஆதிக்கத்தை ஒழிக்க அரும்பாடு பட்டுத் தம் நல்லுயிர் ஈந்து நற்புகழ் எய்திய தமிழ் மறவர் இருவரின் வாழ்க்கையைச் சித்திரிக்கும் நாடகம். துள்ளும் நடையும் துடிப்புள்ள வசனங்களும் நெஞ்சத்தை உருக்கும் காட்சிகளும் நிறைந்த உணர்ச்சிமிக்க சித்திரம்!

## 3. அலெக்ஸாண்டர் 1 50

'உலகிலுள்ள காடெல்லாம் நாடாக வேண்டும்; அந்த நாடெல்லாம் நானாள வேண்டும்' என்று மண்ணகமெங்கணும் வெற்றி முரசு கொட்டிய கிரேக்கப் பெருவேந்தனின் வரலாற்றை முழுமையாக விளக்கும் அரிய நாடகம்! உள்ளத்தைக் கலங்க வைக்கும் காட்சிகளும் உணர்ச்சியுடன் வீறு கொண்டு எழச்செய்யும் பகுதிகளும் சிந்தனைக்கு அரிய விருந்தளிக்கும் நிகழ்ச்சிகளும் நிறைந்த ஈடு இணையற்ற ஏடு! தமிழில் இதுபோல் இதுவரை வெளிவந்ததில்லை!!

## 4. கிள்ளிவளவன் 1 50

கிள்ளிவளவன், நிலாச்சோறு, குமணன், இரத்த பாசம், புத்தர் ஆகிய ஐந்து அழகிய ஓரங்க நாடகங்களின் தொகுப்பு. ஏற்றமிகு கருத்துக்களைக்கொண்ட எழிலார் ஏடு!

**கழிவு உண்டு. அருள் கூர்ந்து அணுகுங்கள்.**

★

அஸோஸியேஷன் பப்ளிஷிங் ஹௌஸ்
("ஆரம்பக்கல்வி" ஆபீஸ்)
94-95, புதுத்தெரு, மண்ணடி, சென்னை-1.

Venkatesan Press, Madras-1.